அருட்பெருஞ்சோதி அருட்பெருஞ்சோதி
தனிப்பெருங்கருணை அருட்பெருஞ்சோதி

அருட்பெருஞ்சோதி ஆண்டவராகிய
இராமலிங்க சுவாமிகள் அருளிய

மனுமுறை கண்ட வாசகம்



விளக்கவுரை

சிவராஜயோகி, பரமானந்த சதாசிவ சற்குரு
தவத்திரு ரெங்கராஜ தேசிக சுவாமிகள்

4-4

மகான் இராமலிங்க சுவாமிகள் அருளிய

மனுமுறை கண்ட வாசகத்துக்கு

சிவராஜயோகி, பரமானந்த சதாசிவ சற்குரு, தவத்திரு

ரெங்கராஜ தேசிக சுவாமிகள்

அருளிய விளக்கவுரை



மனுமுறை கண்ட வாசகம்

விளக்க உரையுடன்

4-4

முன்னுரை

அருட்பெருஞ்ஜோதி ஆண்டவரும், ஜீவகாருண்ய வள்ளலும், ஞானத்திற்கு தலைவருமாகிய மகான் இராமலிங்க சுவாமிகள் இயற்றிய மனுமுறை கண்ட வாசகம் நாற்பத்தி மூன்று வரிகளை உடையது. இந்த நாற்பத்தி மூன்று வரிகளிலும் பாவபுண்ணியங்களைப் பற்றி மிகத்தெளிவாக கூறியுள்ளார்கள்.

ஒரு மனிதன் செய்யக்கூடிய பாவச்செயல்களினை பட்டியலிட்டு கூறியுள்ளார்கள். இப்பாவங்கள்தாம் ஒரு மனிதனை மீளா பிறவித் துயரில் ஆழ்த்துகின்றன. இவற்றைக் கூறிய மகான் இராமலிங்க சுவாமிகள், இந்த பாவங்களை செய்தேனோ! என கூறுவதுபோல் கூறி, மனிதசமுதாயத்தில் நிலவும் பாவச் செயல்களை தொகுத்துக் கூறி இப்பாவச் செயல்களிலிருந்து விடுபட வேண்டுமென வலியுறுத்துகிறார்.

மேலும் இப்பாவங்களிலிருந்து விடுபட வேண்டுமென்றால், அதற்கும் அவரே வழி கூறுகிறார். கொலை, புலை தவிர்த்தவர்கள், மனமார நினைத்து வேண்டினால் அக்கணமே அவரை அருட்பெருட்ஜோதி ஆண்டவராகிய மகான் இராமலிங்க சுவாமிகள் சார்ந்து அவரது துன்பங்களை துடைப்பார், அவருக்கு உணர்த்துவார் என கூறியுள்ளார்.

அத்தகு வல்லமைப் பெற்ற எவ்வுயிரையும் சார்ந்து அவ்வுயிர்களைக் காத்து இரட்சிக்கக்கூடிய வல்லமைப் பெற்ற மகான் இராமலிங்க சுவாமிகளின் இந்த மனுமுறை கண்ட வாசகம் நூலிற்கு எனது குருநாதர், திருச்சி மாவட்டம், துறையூர் வட்டம், துறையூரைச் சேர்ந்த சின்னசாமி சாஸ்திரிகள் அவர்கள், எனக்கு சொல்லித் தந்த ஞானக்கருத்துக்களின் அடிப்படையில் விளக்கம் தந்துள்ளேன்.

ஓங்காரக்குடிலின் சன்மார்க்க உண்மைப்பத்திரிக்கையில் தொடராக வெளிவந்ததை தொகுத்து இந்நூல் வெளிவருவதற்கு காரணமாய் இருந்த குடில் அன்பர்கள் மற்றும் ஞானத்திருவடி ஆசிரியர் இரா.மாதவன் அவர்களுக்கும் மேலும் இந்நூல் சிறப்பாக அச்சிட்டு வெளியிட உதவிய வாஞ்சி மறுதோன்றி அச்சகத்தாருக்கும் மகான் அகத்தீசர் ஆசியும், மகான் இராமலிங்க சுவாமிகள் ஆசியும் பெற்று நீடுவாழ வேண்டுமென்று நன்றி கலந்த வாழ்த்தினை தெரிவித்துக் கொள்கிறேன்.

அனைவரும் இந்நூலை படித்து ஜென்மத்தை கடைத்தேற்றி கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இந்நூல் ஆன்மீக துறையில் உள்ளவர்களுக்கு ஒரு அரிய வரப்பிரசாதமாகும், அனைவருடைய இல்லத்திலும் இருந்தால் மகான் இராமலிங்க சுவாமிகளே, தங்கள் இல்லத்தில் இருப்பதாக அர்த்தமாகும்.

இப்படிக்கு,

ரெங்கராஜ தேசிகர்

நூல் குறிப்பு

நூல் – மனுமுறை கண்ட வாசகம் – விளக்க உரை

ஆசிரியர் – சிவராஜயோகி, பரமானந்த சதாசிவ சற்குரு தவத்திரு ரெங்கராஜ தேசிக சுவாமிகள்

தாள் – 70 ஜி.எஸ்.எம்.

பக்கங்கள் – 115 பக்கங்கள்

படிகள் – 1000

விலை – உருபா 50

வெளியீடு – ஸ்ரீ அகத்தியர் சன்மார்க்க சங்கம்,
ஒங்காரக்குடில்,
113, நகர் விரிவாக்கம்,
துறையூர் – 621 010.
திருச்சி மாவட்டம்.
தொ.பே. எண் – 04327 255184
www.agathiar.org
23.09.2012 (தீட்சை விழா)

அச்சிட்டோர் – வாஞ்சி மறுதோன்றி அச்சகம்,
துறையூர். ✆ 243638.

உள்ளடக்கம்

மகான் இராமலிங்க சுவாமிகள் அருளிய

மனுமுறை கண்ட வாசகத்துக்கு

சிவராஜயோகி, பரமானந்த சதாசிவ சற்குரு, தவத்திரு

ரெங்கராஜ தேசிக சுவாமிகள்

அருளிய விளக்கவுரை

அருட்பெருஞ்ஜோதி ஆண்டவரும் ஜீவகாருண்ய வள்ளலுமாகிய மகான் இராமலிங்க சுவாமிகள் அருளிய மனுமுறை கண்ட வாசகத்தை நித்திய பாராயணம் செய்பவர்கள் முன்செய்த பாவங்கள் நீங்கி புண்ணியங்கள் பெறுவார்கள். மேலும் வாழ்க்கையில் எது புண்ணியம்? எது பாவம்? என்று அறிகின்ற சிறப்பறிவு உண்டாகும். பாவ புண்ணியத்தை அறிகின்ற அறிவுதான் சிறப்பறிவாகும். சிறப்பறிவு உள்ள மக்கள் தான் தன்னையும் தலைவனையும் அறிந்தவர்கள் ஆவார்கள். தன்னையும் தலைவனையும் அறிந்தவர்கள் தான் ஞானிகள் ஆவார்கள். எனவே மனுமுறை கண்ட வாசகத்தையும், சித்தர்கள் போற்றித் தொகுப்பையும் பக்தி விசுவாசத்தோடு பாராயணம் செய்பவர்கள் வாழ்க்கையில் பல முன்னேற்றங்கள் உண்டாகும். ஞானமும் கைகூடும். போற்றுவோம் அருட்பெருஞ்ஜோதி ஆண்டவராகிய இராமலிங்க சுவாமிகளை! பெறுவோம் பெருமைக்குரிய வாழ்வை!!

குறிப்பு : மனுமுறை கண்ட வாசகத்தையும், சித்தர்கள் போற்றித் தொகுப்பையும் தினசரி பாராயணம் செய்து வருபவர்கள் தன்னையும், தலைவனையும் அறிந்து மரணம் இல்லா பெருவாழ்வு பெறுவார்கள்.

மனுமுறை கண்ட வாசகம்

நாம் புண்ணியவான் ஆவதற்கு,
அருட்பெருஞ்சோதி ஆண்டவராகிய ஆசான்
இராமலிங்க சுவாமிகள் அருளிய அருள் வாக்கு

1. நல்லோர் மனதை நடுங்கச் செய்தேனோ!
2. வலிய வழக்கிட்டு மானங் கெடுத்தேனோ!
3. தானங் கொடுப்போரைத் தடுத்து நின்றேனோ!
4. கலந்த சினேகிதரைக் கலகஞ் செய்தேனோ!
5. மனமொத்த நட்புக்கு வஞ்சகஞ் செய்தேனோ!

6. குடிவரி உயர்த்திக் கொள்ளை கொண்டேனோ!
7. ஏழைகள் வயிறு எரியச் செய்தேனோ!
8. தர்மம் பாராது தண்டஞ் செய்தேனோ!
9. மண்ணோரம் பேசி வாழ்வழித்தேனோ!
10. உயிர்கொலை செய்வோர்க்கு உபகாரஞ் செய்தேனோ!
11. களவு செய்வோர்க்கு உளவு சொன்னேனோ!
12. பொருளை இச்சித்துப் பொய்சொன்னேனோ!
13. ஆசை காட்டி மோசஞ் செய்தேனோ!
14. வரவுபோக் கொழிய வழியடைத்தேனோ!
15. வேலையிட்டுக் கூலி குறைத்தேனோ!
16. பசித்தோர் முகத்தைப் பாராதிருந்தேனோ!
17. இரப்போர்க்குப் பிச்சை இல்லை யென்றேனோ!
18. கோள் சொல்லிக் குடும்பங் கலைத்தேனோ!
19. நட்டாற்றில் கையை நழுவ விட்டேனோ!
20. கலங்கி ஒளிந்தோரைக் காட்டிக் கொடுத்தேனோ!
21. கற்பழிந் தவளைக் கலந்திருந்தேனோ!
22. காவல் கொண்டிருந்த கன்னியை அழித்தேனோ!
23. கணவன்வழி நிற்போரைக் கற்பழித்தேனோ!
24. கருப்ப மழித்துக் களித்திருந்தேனோ!
25. குருவை வணங்கக் கூசிநின்றேனோ!
26. குருவின் காணிக்கை கொடுக்க மறந்தேனோ!
27. கற்றவர் தம்மைக் கடுகடுத்தேனோ!
28. பெரியோர் பாட்டிற் பிழைசொன்னேனோ!
29. பட்சியைக் கூண்டில் பதைக்க அடைத்தேனோ!
30. கன்றுக்குப் பாலூட்டாது கட்டிவைத்தேனோ!
31. ஊன்சுவை யுண்டு உடல்வளர்த்தேனோ!
32. கல்லும் நெல்லும் கலந்து விற்றேனோ!
33. அன்புடை யவர்க்குத் துன்பஞ் செய்தேனோ!
34. குடிக்கின்ற நீருள்ள குளந்தூர்த்தேனோ!
35. வெய்யிலுக் கொதுங்கும் விருட்ச மழித்தேனோ!
36. பகைகொண்டு அயலோர் பயிரழித்தேனோ!
37. பொதுமண்டபத்தைப் போயிடித்தேனோ!

38. ஆலயக் கதவை அடைத்து வைத்தேனோ!
39. சிவனடி யாரைச் சீறி வைதேனோ!
40. தவஞ்செய் வோரைத் தாழ்வு சொன்னேனோ!
41. சுத்த ஞானிகளைத் தூஷணஞ் செய்தேனோ!
42. தந்தைதாய் மொழியைத் தள்ளி நடந்தேனோ!
43. தெய்வ மிகழ்ந்து செருக்கடைந்தேனோ!
என்ன பாவம் செய்தேனோ! இன்னதென் றறியேனே!

மனுமுறைகண்ட வாசகத்திற்கு அருட்பெருஞ்சோதி ஆண்டவராகிய மகான் இராமலிங்க சுவாமிகள் திருவடியை பூசித்து அவரது மனுமுறைகண்ட வாசகத்திற்கு உரை எழுதப்படுகிறது. குற்றமிருப்பின் மகான் ஆசான் இராமலிங்க சுவாமிகள் பொறுத்தருள வேண்டும்.

1. நல்லோர் மனதை நடுங்கச் செய்தேனோ!

பாவம் செய்யாதிரு மனமே! – நாளை
கோபஞ் செய்தே யமன் கொண்டோடிப் போவான்
– மகான் கடுவெளிச்சித்தர் ஆனந்தக்களிப்பு பல்லவி

பத்தினி பத்தர்கள் தத்துவ ஞானிகள்
சித்தங் கலங்கச் சிதைவுகள் செய்தவர்
அத்தமும் ஆவியும் ஆண்டொன்றில் மாண்டிடுஞ்
சத்தியம் ஈது சதாநந்தி ஆணையே.
– திருமந்திரம் இரண்டாம் தந்திரம் – குருநிந்தை – 532.

பட்டினி கிடந்து தானும் தனது குழந்தைகளும் இறக்க நேரிட்டாலும் இறப்பார்களே அன்றி தனது கற்பிற்கு இழுக்கு வராதபடி நடந்து தன்னை காத்து கொள்ள முயல்பவர்கள் பத்தினி பெண்டினர். இவர்கள் கற்புநெறி தவறாதவர்கள் என்று சான்றோர்கள் சொல்வார்கள்.

தெய்வம் தொழாஅள் கொழுநன் தொழுதெழுவாள்
பெய்யெனப் பெய்யும் மழை
– திருக்குறள் – வாழ்க்கைத் துணைநலம் – குறள் எண் 55.

ஆசான் ஞானபண்டிதன் மீது பக்தி கொண்டு முழுமையான ஆசிபெற்ற பக்தர்களுக்கு இடையூறு செய்தால் அவர்கள் ஆசான் முதுபெரும் தலைவன் ஞானபண்டிதனால் தண்டிக்கப்படுவார்கள்.

தத்துவ ஞானிகள் என்பவர்கள் ஆசான் ஞானப்பண்டிதனின் ஆசி பெற்று தத்துவம் தொன்னூற்றாறையும்(96) அறிந்தவர்களாவார்கள். இத்தகு தத்துவ ஞானிகளுக்கு இடையூறு செய்தால் நீங்காத துன்பம் வரும்.

எனவே பத்தினி பெண்டிர்கள், தூய்மையான பக்தர்கள், தத்துவத்தை அறிந்த தத்துவ ஞானிகள் இவர்களுக்கு இடையூறு செய்தால் முன்னோர்களால் சேமித்து வைக்கப்பட்ட பொருளும் தம்மால் ஈட்டிய பொருள்களையும் இழந்து ஓராண்டிற்குள் நோய்வாய்ப்பட்டு இறந்து விடுவார்கள். இது சத்தியமாகும். என்றும் நிலைப்பெற்றுள்ள என்றும் அழிவில்லாத ஆசான் மகான் நந்தீசர் மீது ஆணையிட்டு சொல்லுகிறேன் என்று மகான் திருமூலதேவர் கூறுகிறார்.

அத்தம் – செல்வம். ஆவி – உயிர்.

பிறர்க்குஇன்னா முற்பகல் செய்யின் தமக்குஇன்னா
பிற்பகல் தாமே வரும்.
– திருக்குறள் – இன்னா செய்யாமை – குறள்எண் 319

பண்புஉடையார்ப் பட்டுஉண்டு உலகம் அதுஇன்றேல்
மண்புக்கு மாய்வது மன்.
– திருக்குறள் – பண்புடைமை – குறள்எண் 996

பண்புடையவர்கள் பயப்படும்படி எந்த செயல்களும் செய்யக்கூடாது. அப்படிச் செய்தால் பாவமாகும். பண்புடைய மக்கள் தேவர்களாவார்கள். பண்புடைய தேவர்களைக் காப்பாற்ற வேண்டிய பொறுப்பு ஆசான் ஞானப்பண்டிதனுக்கு உண்டு. பண்புடைய மக்களுக்கு இடையூறு செய்கிறவன் அசுரனாகி விடுவான். அசுரனை வதைப்பது ஆசான் ஞானபண்டிதருடைய நித்திய தொழிலாகும். பண்புடையவர்களாகிய நல்லோர்களால்தான் இவ்வுலகம் இன்னும் அழியாமல் இயங்கிக் கொண்டு இருக்கிறது. இல்லையேல் முன்னமே அழிந்திருக்கும். அத்தகு நல்லோரான பண்புடையார்க்கு இடையூறு செய்யக்கூடாது. தலைவனின் ஆசிபெற்ற அத்தகு நல்லோர் தேவர்களாவார்கள். அவர்கள் மனம் கலங்கும்படி செய்தால் செய்பவர்கள் அசுரர்களாகிவிடுவார்கள்.

சூரர்கள் என்பவர் மிகப்பெரும் வல்லமை பொருந்தியவர்கள் ஆவார்கள். அப்படி மிகப்பெரும் வல்லமை பொருந்திய சூரர்களும் நல்லோருக்கு இடையூறு செய்தால் தம் வல்லமை கெட்டு அசுரர்களாகி விடுவார்கள்.

இராமாயணத்தில் வரும் இலங்கை வேந்தன் இராவணன் மிகப்பெரும் தவம் செய்து ஈஸ்வரப்பட்டம் பெற்று இராவணேஸ்வரன் என அழைக்கும் தகுதியை பெற்றான். இராவணன் மிகப்பெரும் தவசியாவார். அவர் மகான் புலத்தியரின் பேரன் என சொல்வார்கள். மகான் புலத்தியரின் பேரனும்

மிகப்பெரும் தவசியும் ஈஸ்வரப் பட்டம் பெற்றவருமான இராவணன் நல்லோர்களாகிய தேவர்களுக்கு இடையூறு செய்ததால், தன் தவவலிமைகளை இழந்து அசுரனாகி இறுதியில் இராமபிரானால் சம்காரம் (கொல்லப்பட்டார்) செய்யப்பட்டார்.

உ. வலிய வழக்கிட்டு மானங் கெடுத்தேனோ!

பணபலமும் ஆள்பலமும் உள்ளவர்கள் தன்னுடைய பகைவர்கள் அமைதியாக இருந்தாலும் அவர்கள் மீது தேவையில்லாமல் பொய்வழக்கு போட்டு மனம் வேதனைப்படும்படி செய்வார்கள். பொதுமக்களிடம் அவருக்குள்ள கௌரவமும் போய்விடும். இதுவும் பாவச்செயலாகும்.

எ.கா. – செய்யாமல் செற்றார்க்கும் இன்னாத செய்தபின்
உய்யா விழுமம் தரும்.
– திருக்குறள் – இன்னா செய்யாமை – குறள் எண் 313.

பகைவர்கள் அறியாமையினால் இகழ்ந்து பேசினாலும் பொறுத்துக் கொள்ள வேண்டும். அதை விட்டுவிட்டு அவர்கள் மேல் பொய்வழக்கு தொடுத்தால் அவர்களுக்கு மக்களிடம் உள்ள மரியாதை கெட்டுவிடும். அறக்கடவுளாகிய ஆசான் ஞானப்பண்டிதனின் கோபத்திற்கு ஆட்படுவார்கள். ஆகவே தேவையில்லாமல் எதிரி மீது வழக்கு தொடுப்பது பாவச்செயலாகும்.

மறந்தும் பிறன்கேடு சூழற்க சூழின்
அறம்சூழும் சூழ்ந்தவன் கேடு.
– திருக்குறள் – தீவினை அச்சம் – குறள் எண் 204.

அறக்கடவுளாகிய ஆசான் ஞானபண்டிதனின் கோபத்திற்கு உட்படுவார்கள். பண்புடைய மக்களுக்கு இடையூறு செய்தாலோ, துன்புறுத்தினாலோ அறக்கடவுளாகிய ஆசான் ஞானப்பண்டிதனின் கோபத்திற்கு ஆளாக நேரிடும் என்பதை உணர வேண்டும். பண்புடைய மக்களுக்கு இடையூறு செய்தலும் பொய்வழக்கு போடுவதும் குற்றமாகும்.

பண்புடைய மக்கள் தேவர்களாவர். அத்தேவர்களாகிய பண்புடைய மக்களை காத்து இரட்சிப்பது ஆசான் ஞானபண்டிதனின் கடமையாகும். அத்தகு பண்புடைய மக்களுக்கு இடையூறு செய்பவர்களை அசுரனாக கொள்வார்கள். அந்த அசுரர்களை வதைப்பது ஆசான் ஞானபண்டிதனின் நித்திய தொழில் ஆகும்.

எனவே பகைவர்களாக இருந்தாலும் அவர்களுக்கு இடையூறு செய்யக்கூடாது. பகைவர்கள் ஏதும் செய்யாதபோது அவர்களுக்கு இடையூறு செய்தால் நமக்கு நீங்காத துன்பம் வந்து சேரும்.

மிகப்பெரிய கருணையே வடிவான அறக்கடவுளாக விளங்கும் இறைவன் பெரும் பாறையினுள் இருக்கும் தேரைக்கும் (தவளை) அதன் தேவைக்கு ஏற்றார் போல் அதன் பசி தீர்க்க உணவளிக்கும் பெருங்கருணை உடையவர். இப்பெருங்கருணை உடையவன் அறக்கடவுளாக விளங்கும் இறைவன். தேரையானது பார்ப்பதற்கும் அருவருப்பானது. மேலும் அதன் ஊனீர்பட்டால் உடம்பெங்கும் சொறிசிரங்கு வரும். மேலும் அத்தேரை விஷத்தன்மை உடையதாகும். அப்படி பயனற்ற விஷத்தன்மையுடைய தேரைக்கும் அதன் இருப்பிடத்தில் உணவளித்து அதனையும் காத்து இரட்சிப்பவன் இறைவன். அத்தகு அறக்கடவுளான இறைவனின் கோபத்திற்கு ஆளாகாமல் பிறர் தமக்கு துன்பம் செய்யாத போது நாம் அவர் பகைவராக இருந்தாலும் துன்பம் செய்யாது இருந்து நமக்கு வரும் நீங்காத துன்பத்திலிருந்து காத்துக்கொள்ள வேண்டும்.

3. தானங் கொடுப்போரை தடுத்து நின்றேனோ!

வசதி வாய்ப்புள்ளவர்கள், நலிந்தவர்கள் மற்றும் வறுமைப் பட்டவர்களுக்கு உணவு, உடை, மருத்துவம் ஆகியவற்றிற்கு பொருளுதவி செய்வார்கள். பொருளுதவி செய்வதன் நோக்கமே இறைவன் அருள் பெறுவதற்காக. இறைவன் அருள் பெற்றவர்களுக்கு குடும்பத்தில் ஒற்றுமையும், பண்புள்ள புத்திர பாக்கியமும் தோன்றும். மேலும் வியாபாரம், தொழில், உத்தியோகம், விவசாயம் அனைத்தும் நல்லபடி நடக்கும். வறியவர்களுக்கு பொருளுதவி செய்தால் இறைவன் மகிழ்ச்சி அடைவான். அவன் மகிழ்ச்சியே நமக்கு ஞானமும் கைகூடும். மரணமில்லா பெருவாழ்வும் கைகூடும்.

ஆசான் அகத்தீசன் ஆசியால் ஒன்பது கோடி ஞானிகளும் ஞானம் சித்தி பெற்றுள்ளார்கள். புண்ணியம் செய்யாமல் ஞானம் கைகூடாது. மேலும் புண்ணியம் செய்ய செய்ய முன்செய்த பாவங்கள் நீங்கி சிறப்பறிவு உண்டாகும். சிறப்பறிவு உள்ளவர்கள்தான் தன்னையும் தலைவனையும் அறிவார்கள். நல்ல மனம் உள்ளவர்கள்தான் அதாவது தயை சிந்தை உள்ளவர்கள்தான் பிறர் துன்பத்தை உணரவும், மற்றவர்க்கு உதவி செய்வதையும் தொடர்ந்து செய்து வருவார்கள். உயர்ந்த மனம் உள்ளவர்கள்தான் இச்செயல்களை செய்வார்கள். இவர்களது செயல்களை கண்டு பொறாமைப்பட்டு தானம் கொடுப்பதை தடுத்தால் எல்லாம்வல்ல இறைவனின் கோபத்திற்கு ஆட்படுவார்கள். எனவே தானம் கொடுப்பதை தடுப்பது மிகப்பெரிய பாவமாகும்.

(எ–கா) கொடுப்பது அழுக்கறுப்பான் சுற்றம் உடுப்பதூஉம்
உண்பதூஉம் இன்றிக் கெடும்.
–திருக்குறள்–அழுக்காறாமை–166

அற்றார் அழிபசி தீர்த்தல் அஃதுஒருவன்
பெற்றான் பொருள்வைப் புழி. – திருக்குறள்–ஈகை–226.

4. கலந்த சிநேகிதரை கலகம் செய்தேனோ!

கிராமங்களில் இரண்டு மூன்று தலைமுறைகளாக நட்போடு இருப்பார்கள். இவர் வீட்டில் சுபகாரியம் என்றால் அவர் குடும்பத்தினர்கள் கலந்து கொள்வார்கள். அவர் வீட்டில் சுபகாரியம் என்றால் இவர் குடும்பத்தினர் கலந்து கொள்வார்கள். ஒருவருக்கு ஒருவர் உதவி செய்து கொள்வார்கள். ஒருவருக்கு ஒருவர் மிகுந்த நட்போடு பழகி வருவார்கள். பல்வேறு செயல்களிலும் ஒருவருக்கு ஒருவர் கலந்தே செயல்படுவார்கள். இவ்வாறு இரண்டு மூன்று தலைமுறைகளாக நட்போடு பழகி வரும் நண்பர்களுக்கு இடையே பொறாமை காரணமாக புறங்கூறி கலகம் செய்தால் அது பாவச்செயலாகும்.

செயற்குஅரிய யாவுள நட்பின்? அதுபோல்
வினைக்குஅரிய யாவுள காப்பு?
– திருக்குறள் – நட்பு – 781

5. மனமொத்த நட்புக்கு வஞ்சகஞ் செய்தேனோ!

கிராமங்களிலும் நகரங்களிலும் ஒருவருக்கு ஒருவர் நட்போடு பழகுவார்கள். இதில் பழகும் நண்பர்களுள் ஒருவர் மற்றொருவர்மீது முழுமையான நம்பிக்கை வைத்து பழகும்போது ஆனால் மற்றவரோ இதயத்தில் முழுமையான அன்பில்லாது பெயரளவில் நண்பராக இருப்பார். முழுமனதோடு நம்பியுள்ள நண்பர் பெயரளவு நட்புள்ள நண்பரிடம் தனது வீட்டில் நடக்கும் சுபகாரியம் உதாரணமாக தனது மகளின் திருமணத்திற்கு நண்பரிடம் கலந்து பொருளுதவி செய்தால் திருமணம் செய்யலாம் என்று கேட்கும்போது அவரும் திருமணத்திற்கு பொருளுதவி செய்வதாக வாக்களிப்பார். அவரது வார்த்தையை முழுமையாக நம்பி திருமணத்தினை நிச்சயித்து விட்டு பொருள் கேட்கும்போது கையில் பொருள் இருக்கும்போதே தம்மிடம் இல்லை என கூறிவிடுவார். இதனால் நடைபெறவிருந்த திருமணம் தடைபட்டு போகும். இவ்வாறு வாக்கு கொடுத்துவிட்டு பின் தக்கசமயத்தில் விலகுவது நம்மை நம்பிய நண்பருக்கு செய்யும் துரோகமாகும். இது மிகப்பெரும் பாவமாகும். ஒருவருக்கு ஒருவர் பழகுவதன் நோக்கமே

நண்பருக்கு இடையூறு வரும்போது இடையூறை நீக்க உதவவேண்டும். அதுவே உண்மையான நட்பாகும். ஒருவர் தமக்கு துன்பம் வரும்போது நண்பரிடத்து நெருங்கி பழகி துன்பத்தை நீக்கி கொண்டு நண்பருக்கு துன்பம் வரும்போது விலகி கொள்வார். இது வஞ்சக செயலாகும்.

உறின்நட்டு அறின்ஒரூஉம் ஒப்பிலார் கேண்மை
பெறினும் இழப்பினும் என்? – திருக்குறள் 812.

6. குழவரி உயர்த்திக் கொள்ளை கொண்டேனோ!

நாட்டிலுள்ள வசதி வாய்ப்புள்ள மக்களிடம் வரி வாங்குவது குற்றமில்லை. ஆனால் ஏழை எளிய மக்களுக்கு வரிபோட்டு வசூலிப்பது குற்றமாகும். இதுவும் ஒரு வகைப் பாவச்செயலாகும்.

வேலொடு நின்றான் இடுஎன் றதுபோலும்
கோலொடு நின்றான் இரவு.

– திருக்குறள் 552.

7. ஏழைகள் வயிறு எரியச் செய்தேனோ!

சிலர் பல ஏக்கர்கள் பரப்பளவு கொண்ட நிலம் வைத்து விவசாயம் செய்வார்கள். அவர்களிடம் ஏழை கூலி விவசாயிகள் வேலை செய்து வருவார்கள். கூலி விவசாயிகள் காலையில் சாப்பிடாமல் கூட வேலைக்கு செல்லுவார்கள். அவர்களை சிறிது நேரம் கூட ஓய்வின்றி இடையறாது காலை முதல் மாலை வரை வேலை வாங்கிவிட்டு மாலையில் அவர்கள் வேலை செய்ததற்கு கூலியாக பணமோ அல்லது தானியமோ கொடுக்காமல் நேரமாகிவிட்டது, விளக்கு வைத்து விட்டார்கள், நாளை வந்து வாங்கி செல் என நில உரிமையாளர்கள் சற்றும் கருணையின்றி கூறிவிடுவார்.

ஏழை விவசாயியோ அன்று கிடைக்கும் கூலியை வைத்துதான் அன்றைய இரவு அவனும் அவனது மனைவியும், குழந்தைகளும் உணவு உண்ணவேண்டிய வறிய சூழ்நிலையில் இருப்பார்கள். இரவு பொழுதில் தந்தை வேலைமுடித்து உணவிற்கு ஏதாவது கொண்டு வருவார் என குழந்தைகளும், கணவன் கொண்டு வருவதை சமைக்க தயாராக மனைவியும் இருப்பார்கள். வெறும் கையுடன் வரும் ஏழை கூலி விவசாயியை பார்த்து குடும்பத்திலுள்ளோர் அனைவரும் சோர்ந்து இன்று இரவு பட்டினியாகத்தான் தூங்க வேண்டும் என மனம் வெதும்பி வெறும் வயிற்றுடன் பட்டினியாக உறங்க செல்வார்கள். இதுபோன்று உழைப்பவருடைய கூலியை தக்க நேரத்தில் கொடுக்காது காலம் தாழ்த்தி அவர்களுக்கு இன்னல் விளைவிப்பது பாவச்செயலாகும்.

8. தர்மம் பாராது தண்டம் செய்தேனோ!

தக்காங்கு நாடித் தலைச்செல்லா வண்ணத்தால்
ஒத்தாங்கு ஒறுப்பது வேந்து.
– திருக்குறள் – வெருவந்த செய்யாமை – 561.

கடுமொழியும் கைஇகந்த தண்டமும் வேந்தன்
அடுமுரண் தேய்க்கும் அரம்.
– திருக்குறள் – வெருவந்த செய்யாமை – 567.

இனத்துஆற்றி எண்ணாத வேந்தன் சினத்துஆற்றிச்
சீறின் சிறுகும் திரு.
– திருக்குறள் – வெருவந்த செய்யாமை – 568.

கல்லா அரசனுங் காலனும் நேரொப்பர்
கல்லா அரசனிற் காலன் மிகநல்லன்
கல்லா அரசன் அறம்ஓரான் கொல்லென்பான்
நல்லாரைக் காலன் நணுகநில் லானே.
– திருமந்திரம் – இராசதோடம் – 238.

ஆட்சிக்குரிய அறிவில்லாத அரசன் எமனுக்கு ஒப்பாவார். ஆட்சிக்குரிய அறிவில்லாத அரசனைவிட எமன் மிக நல்லவன். எப்படியெனில் ஆட்சிக்குரிய அறிவும், அறத்தைப்பற்றி ஆராய்ந்து அறியாத அரசன் சாரத்தை ஆராயாமல் நல்லவர்களை கொலைசெய்ய சொல்லுவான். ஆனால் காலன் என்ற எமனோ நல்லவர்களை நெருங்கமாட்டான்.

முடியாட்சி காலத்தில் சில அரசர்கள் அமைச்சர் சான்றோர்கள் இவர்களை கலந்து ஆராய்ந்து அதன்படி நடப்பார்கள். சில அரசர்களோ அமைச்சரையோ சான்றோர்களையோ கலந்து ஆலோசிக்காமல் தன்னிச்சையாக முடிவு செய்வார்கள். அவர்கள் ஆட்சி காலத்தில் நல்லவர்களும் கொல்லப்படுவார்கள். அவர்களது ஆட்சி கொடுங்கோல் ஆட்சியாகும்.

முடியாட்சி காலத்தில் குற்றம் செய்தவனை சபைக்கு கொண்டுவருவார்கள். அவனை நன்கு விசாரித்தும் மற்றும் அமைச்சர்களை சான்றோர்களை கலந்து ஆலோசித்தும் குற்றம் செய்தவனை தண்டிக்க வேண்டும். அவ்வாறு கலந்து ஆலோசிக்காமல் ஒருவனை தண்டிப்பது முறையற்ற தண்டனையாகும். இது தர்மம் பாராது செய்யும் தண்டனையாகும்.

குற்றம் செய்தவனை பற்றி நன்கு ஆராய்ந்து அதற்கு ஏற்ப தண்டனை தரவேண்டும். குற்றத்தின் தன்மைக்கு ஏற்ப தண்டனை தருவதே நீதி முறையாகும். குற்றத்திற்கு தகுந்த தண்டனை தராமல் வரம்புகடந்த தண்டனை தந்தால் அது பாவச்செயலாகும்.

9. மண்ணோரம் பேசி வாழ்வழித்தேனோ!

கிராமங்களில் ஒரு ஏக்கர் அல்லது இரண்டு ஏக்கர் வைத்து அதில் விவசாயம் செய்து அதில் வரும் வருவாயைக் கொண்டு குடும்பம் நடத்துவார்கள். ஒரு சிலர் ஒரு ஏக்கர் மட்டும் நிலம் வைத்து விவசாயம் செய்து குடும்பம் நடத்துவார்கள். அந்த நிலம் இரண்டு மூன்று தலைமுறையாக அவர்களுக்கு உரிமை உடையதாக இருக்கும். பக்கத்து நிலத்துக்காரர் பல ஏக்கர்கள் கொண்ட விவசாயியாக இருப்பார். அவர் இந்த ஒரு ஏக்கர் நிலத்தையும், தன் நிலத்தோடு சேர்த்துக் கொள்வார்.

ஏழை விவசாயியோ தன் நிலத்தை சேர்த்துக் கொண்ட விவசாயியிடம் சென்று இந்த இடம் எனக்கு சொந்தமான நிலம் எனவே இதை தாங்கள் சேர்த்துக்கொள்வது நியாயமல்ல என்று சொல்வார். ஆனால் அதற்கு பக்கத்து நிலத்துக்காரர் இந்நிலம் என்னுடைய பத்திரத்தில் இருக்கிறது என்று நியாயமில்லாமல் பேசுவார். மேலும் உன்னால் முடிந்ததை பார்த்துக்கொள் என கூறுவார். ஏழை விவசாயி அவரை எதிர்க்க இயலாது கிராம பெரியவரிடம் இதை கூறி நியாயம் கேட்பார்.

கிராம பெரியவர் அதிக நிலம் உள்ளவரின் உறவினராக இருப்பார். அவரோ நீதியை ஆராயாது கிராம பெரியவரின் உறவினர் என்ற காரணத்தினால் அவரிடம் பத்திரம் இருக்கிறது. எனவே நிலம் அவருக்கே சொந்தம் என அவரது நிலத்திலிருந்து கொண்டே ஏழை விவசாயிக்கு பாதகமான தீர்ப்பை வழங்குவார். அதனால் பாதிக்கப்பட்ட ஏழை விவசாயியும் அவரது குடும்பத்தினரும் வாழ்க்கை ஆதாரமின்றி, ஒரு நிலமும் கைவிட்டு போனதால் கண்ணீர் விடுவார்கள். அந்த ஏழை அழுத கண்ணீரானது கூரிய வாளாக(கொலைக்கருவி) மாறி பாதகமாக தீர்ப்பை சொன்னவரையும், அவரது சந்ததியினரையும் அழிக்கும். இப்படி மண்ணோரம் செய்வதைப் பற்றி ஔவையாரும் ஆத்திச்சூடியில்

மண் பறித்து உண்ணேல். – ஆத்திச்சூடி – வரிஎண் 23.

(பிறர் நிலத்தை அபகரித்து வாழ்தல் பாவம் என ஔவையார் கூறுகிறார்) என்றும்

"ஓரஞ் சொல்லேல்" – ஆத்திச்சூடி – வரிஎண் 109.

(நடுநிலையின்றி பேசுதல் ஓரம் சொல்வதாகும்)

உலகநாதபுலவர் தமது உலகநீதி என்ற நூலில்

"மண்ணின்று மண்ஓரம் சொல்ல வேண்டாம்
மனம்சலித்துச் சிலுக்கிட்டுத் திரிய வேண்டாம்
கண்ணழிவு செய்துதுயர் காட்ட வேண்டாம்
காணாத வார்த்தையைக்கட் டுரைக்க வேண்டாம்
புண்படவே வார்த்தைதனைச் சொல்ல வேண்டாம்
புறஞ்சொல்லித் திரிவாரோடு இணங்க வேண்டாம்
மண்ணளந்தான் தங்கைஉமை மைந்தன் எங்கோன்
மயிலேறும் பெருமானை வாழ்த்தாய் நெஞ்சே!"

– உலகநீதி – கவிஎண் 9.

என குறிப்பிடுகிறார்.

பிறர் நிலத்தை அபகரித்து வாழ எண்ணக்கூடாது. அவ்வாறு செய்வது பாவம்.

அதிவீரராம பாண்டியன் தமது வெற்றிவேற்கை என்ற நூலில்..

இருவர்தம் சொல்லையும் எழுதரம் கேட்டே
இருவரும் பொருந்த உரையார் ஆயின்
மனுமுறை நெறியின் வழக்கிழந் தவர்தாம்
மனமுற மறுகிநின்று அழுத கண்ணீர்
முறையுறத் தேவர் மூவர் காக்கினும்
வழிவழி ஈர்வதோர் வாளா கும்மே.

– அதிவீரராம பாண்டியர் – வெற்றி வேற்கை – கவிஎண் 75.

குற்றம் செய்தவர், குற்றத்தால் பாதிக்கப்பட்டவர் ஆகிய இருவரையும் அழைத்து பலமுறை விசாரித்து நீதி வழங்க வேண்டும். அவ்வாறு செய்யாமல் முறைதவறி நீதி வழங்கினால் நீதி வழங்கியவரின் வம்சமே அழிந்துவிடும்.

சமன்செய்து சீர்தூக்கும் கோல்போல் அமைந்துஒருபால்
கோடாமை சான்றோர்க்கு அணி.

– திருக்குறள் – நடுவுநிலைமை – கவிஎண் 118.

10. உயிர்கொலை செய்வோர்க்கு உபகாரம் செய்தேனோ!

ஒரு சிலர் தயைசிந்தை உள்ளவர்கள் தம்மிடம் உள்ள பொருளைக் கொண்டு ஏழை எளியவர்களுக்கு அன்னதானம் செய்வார்கள். கையில் பொருளில்லாதபோது தயைசிந்தையும், வசதிவாய்ப்பும் உள்ளவர்களிடம் சென்று பொருளுதவி பெற்று தரமான உணவு சமைத்து தான் சிறிது உண்டு சுவை பார்த்தபின் ஏழைகளுக்கு பசியாற்றுவார்கள். இவர்களுக்கு பொருளுதவி செய்தவர்களுக்கு புண்ணியம் சேரும். ஒருசிலர் எங்கள் குல தெய்வத்திற்கு கிடாவெட்டி பூஜைசெய்கிறோம், பொருளுதவி செய்யுங்கள் என்று கேட்பார்கள். அவர்களுக்கு பொருளுதவி செய்தால் அவர் செய்யும் பாவத்திற்கு நாம் துணைபோவதாக அர்த்தமாகும். ஆகவே அத்தகைய உயிர்பலி செய்வோருக்கு பொருளுதவி செய்வது பாவச்செயலாகும். அறப்பணி செய்வோர்க்கு பொருளுதவி செய்தால் புண்ணியம் சேரும். உயிர்கொலை செய்வோர்க்கு பொருளுதவி செய்தால் பாவம் சேரும்.

ஒருசிலர் தங்கள் குடும்பத்திலுள்ள குடும்ப தலைவனுக்கோ, தலைவிக்கோ, பிள்ளைகளுக்கோ நோய் வரும்போது முன்செய்த பாவம் என்று எண்ணாமல் சிறு தெய்வங்களுக்கு தங்கள் நோய் குணமடைய உயிர்பலி கொடுப்பதாக வேண்டிக் கொள்வார்கள். அவ்வாறு செய்வதால் நோய் குணமாகாமல் மேலும் வளருமே அன்றி பாவமும் சூழும். சிறுதெய்வங்களுக்கு உயிர்பலி கொடுக்கக் கொடுக்க தீராத பகையும், நீங்காத நோயும் உண்டாகும்.

தனக்கோ தன்னுடைய குடும்பத்தில் உள்ளவர்களுக்கோ நோய் வந்தால் தனது சக்திக்கு உட்பட்டு ஐந்து அல்லது பத்து ஏழைகளுக்கு அன்னதானம் செய்தால் நோய் குணமடையும், குடும்பத்தில் செல்வமும் வளரும், பகை நட்பாகும், மேலும் உடல் ஆரோக்கியமும் உண்டாகும். அவ்வாறு இல்லாமல் உயிர்பலி கொடுத்தால் பாவம் சூழும்.

இராமலிங்க சுவாமிகள் காலத்தில் ஆடு, பன்றி, குக்குடம்(கோழி), எருமைக்கிடா முதலிய உயிர்களை நீரில் குளிப்பாட்டி மாலை போட்டு நெற்றியில் குங்குமம் வைத்து பலியிட கொண்டு போவார்கள். இதைப் பார்த்த இராமலிங்க சுவாமிகள் எதற்காக இவ்வுயிர்களை கொண்டு செல்கிறீர்கள் என்று கேட்க, அவர்கள் எங்கள் குடும்பத்திலுள்ள சிலருக்கு நோய் வந்தது அதை தீர்க்கும் பொருட்டு உயிர்பலி கொடுப்பதாக வேண்டிக் கொண்டோம். அதற்காகத்தான் இவ்வுயிர்களை பலி கொடுப்பதற்காக கொண்டு செல்கிறோம் என்று கூறினார்கள்.

அருட்பெருஞ்ஜோதி ஆண்டவராகிய இராமலிங்க சுவாமிகள் மனம் நொந்து இறைவனிடம் இவர்களுக்கு ஜீவதயவு உண்டாக வேண்டுமென்று வேண்டிக் கொண்டார்.

நலிதரு சிறிய தெய்வமென் றையோ நாட்டிலே பலபெயர் நாட்டிப்
பலிதர ஆடு பன்றிகுக் குடங்கள் பலிக்கடா முதலிய உயிரைப்
பொலிவுறக் கொண்டே போகவும் கண்டே புந்திநொந் துளநடுக் குற்றேன்
கலியுறு சிறிய தெய்வவெங் கோயில் கண்டகா லத்திலும் பயந்தேன்.

– திருஅருட்பா ஆறாம்திருமுறை – பிள்ளைப் பெரு விண்ணப்பம் – 275.

அக்காலத்தில் ஒருவருக்கு நோய் வந்தால், நோய் தீரும் பொருட்டு பிடாரிக் கோயிலில் பொங்கல் வைத்து உயிர்பலி கொடுப்பார்கள். உயிர்பலி கொடுக்க கொடுக்க மேலும் நோய் மிகுதியாகி கைகால் வீங்கியும் வயிறு வீங்கியும் நலிந்து போவார்கள்.

தங்கள்தேகம் நோய்பெறின் தனைப்பிடாரி கோயிலிற்
பொங்கல்வைத்தும் ஆடுகோழிப் பூசைப்பலியை இட்டிட
நங்கச்சொல்லு நலிமிகுந்து நாளுந்தேய்ந்து மூஞ்சூராய்
உங்கள்குலத் தெய்வமுங்க ளுக்குலைப்ப துண்மையே.

– மகான் சிவவாக்கியர் – 535.

ஆகவே புண்ணியம் செய்பவர்களுக்கு பொருளுதவி செய்தால் புண்ணியம் சேரும். உயிர்க்கொலை செய்பவர்களுக்கு உதவி செய்தால் பாவம் சேரும்.

அறவினை யாதெனில் கொல்லாமை கோறல்
பிறவினை எல்லாம் தரும்.

– திருக்குறள் – கொல்லாமை – குறள்எண் 321.

அறச்செயல்கள் எல்லாவற்றிலும் மிகச்சிறந்தது உயிர்கொலை செய்யாமையாகும். உயிர்க்கொலை செய்தால் எல்லாத் துன்பங்களும் கொலை செய்தவரை சேரும். ஒரு சிலர் பகைவர்களை கோபத்தால் கொலை செய்து விடுவார்கள். இது தீராத பழியை உண்டாக்கும்.

உயிர்க்கொலை செய்தால் வறுமையும் நோயும் சூழும். வறுமையின் காரணமாக திருடுவார்கள். திருடும்போது ஏதேனும் இடையூறு ஏற்படின் கொலையும் செய்து விடுவார்கள். அதன் காரணமாக அவர்கள் அரசாங்கத்தால் தண்டிக்கப்பட்டு கொடுமையான தண்டனைக்கு ஆளாவார்கள். மேலும் செய்யாத குற்றத்திற்குரிய பழியும் வந்து சேரும். அவர்களுக்கு வறுமையும், நோயும், செய்யாத குற்றத்திற்குரிய பழியும், செய்த குற்றத்திற்கு கடுமையான தண்டனையும் அடைந்து தனது மனைவி மக்களை விட்டு செல்ல நேரும். இதனால் அவனது மனைவி மக்கள் மிகவும் வறுமையில் வாடி பல்வேறு துன்பங்கள் அனுபவிக்க நேரிடும்.

கொலைச்செயலினால் துன்பமும், வறுமையும், நோயும், தண்டனைகளும், செய்யாத குற்றத்திற்கு பழியும் அடைய நேரிடும். அறம் என்று சிறப்பித்து சொல்லத்தக்கது எது என்றால் எவ்வுயிரையும் கொல்லாமை ஆகும்.

கோறல் – கொல்லுதல்.

கோபத்தின் காரணமாக கொலை செய்வோர் பழியும், தண்டனையும் பெறுவார்கள். சிறு தெய்வங்களின் வழிபாட்டால் உயிர்க்கொலை செய்தால் வறுமையும் நோயும் குடும்பத்தில் ஒற்றுமையின்மையும் தீராத கடன் சுமையும் ஏற்படுவதோடு அன்றி பல்வேறு துன்பங்களுக்கு ஆட்பட்டு துன்புறுவார்கள்.

உயிர்உடம்பின் நீக்கியார் என்ப, செயிர்உடம்பின்
செல்லாத்தீ வாழ்க்கை யவர்.

– திருக்குறள் – கொல்லாமை – குறள்எண் 330.

பரிமேலழகர் : செயிர் உடம்பின் செல்லாத் தீ வாழ்க்கையவர் – நோக்கலாகா நோயுடம்புடனே வறுமை கூர்ந்த இழி தொழில் வாழ்க்கையினை உடையாரை; உயிர் உடம்பின் நீக்கியார் என்ப – இவர் முற்பிறப்பின்கண் உயிர்களை அவை நின்ற உடம்பினின்று நீக்கினவர் என்று சொல்லுவர் வினை விளைவுகளை அறிந்தோர் என்றவாறு.

செல்லா வாழ்க்கை, தீ வாழ்க்கை எனக்கூட்டுக. செயிருடம்பினர் ஆதல், 'அக்கேபோல் அங்கை யொழிய விரலழுகித், துக்கத் தொழுநோய் எழுபவே' (நாலடியார் : 123) என்பதனாலும் அறிக. மறுமைக்கண் இவையும் எய்துவர் என்பதாம்.

இவை இரண்டு பாட்டாலும் கொல்வார்க்கு வரும் தீங்கு கூறப்பட்டது.

அருளுடைமை முதல் கொல்லாமையீறாகச் சொல்லப்பட்ட இவற்றுள்ளே சொல்லப்படாத விரதங்களும் அடங்கும்; அஃது அறிந்து அடக்கிக்கொள்க. ஈண்டு உரைப்பிற் பெருகும்.

மணக்குடவர் (8) : முற்பிறப்பின்கண் உயிரை உடம்பினின்று நீக்கினார் இவர் என்று பெரியோர் கூறுவர், குற்றமான உடம்பினையும் ஊணுஞ் செல்லாத தீய மனை வாழ்க்கையினையும் உடையாரை என்றவாறு.

இது, கொலையினால் வரும் குற்றம் குறித்து.

பரிதியார் (7) : போன சென்மத்திலே கொலை செய்தவர் என்று அறிக, வியாதியான சரீரமும் தரித்திரமும் உள்ளபேர் என்றவாறு.

காலிங்கர் (5) : பிற உயிரை அவ்வுடம்பினின்றும் அவற்றின் துயர் கருதாது பிரித்திட்டவர் என்று சொல்லுவர் சான்றோர்; யாரை எனின் பின் தாம் உறும்

துயரமானது உடம்பினின்றும் ஒருகாலும் நீங்காத கொடு நரகத்துள் வாழும் வாழ்க்கையினை உடையோரை என்றவாறு.

செயிர் என்பது குற்றம்.

தெய்வத்தின் பெயராலோ அல்லது புலால் உண்பதற்காகவோ உயிர்க்கொலை செய்பவர்கள் தீராத நோய்வாய்ப்பட்டு பார்ப்பதற்கு அருவெறுக்கத்தக்க தேகத்தோடும் உடனே சாகாமல் சில ஆண்டுகள் கட்டிலில் கிடந்து சாவார்கள். இவர்கள் கட்டிலில் நோய்வாய்ப்பட்டு கிடக்கும்போது துர்நாற்றம் தாங்காமல் அல்லல்படுவார்கள். வீட்டில் துர்நாற்றம் இருந்தால் உணவு உண்ணும் போதெல்லாம் துர்நாற்றத்தை சகித்துக் கொள்ள முடியாமல் துன்பப்படுவார்கள். அன்புள்ள மனைவியும், பாசமுள்ள பிள்ளைகளும் இவன் எப்பொழுது சாவானோ என்று மனம் ஏங்குவார்கள்.

கொல்லா நெறியே குருவருள் நெறிஎனப்
பல்கால் எனக்குப் பகர்ந்த மெய்ச்சிவமே.

– அருட்பெருஞ்ஜோதி அகவல் – வரி எண் – 964

கொல்லா விரதங் குவலயமெல் லாமோங்க
எல்லார்க்குஞ் சொல்லுவதென் னிச்சை; பராபரமே.

– தாயுமானவர் – பராபரக்கண்ணி – கவி எண் 54.

கொல்லா விரதமொன்று கொண்டவரே நல்லோர்மற்
றல்லாதார் யாரோ? அறியேன், பராபரமே.

– தாயுமானவர் – பராபரக்கண்ணி – கவி எண் 192.

தன்உயிர் நீப்பினும் செய்யற்க, தான்பிறிது
இன்னுயிர் நீக்கும் வினை.

– திருக்குறள் – கொல்லாமை – குறள்எண் 327.

ஒரு சிலருக்கு நோய் வந்தபோது நோய் குணமடைய ஆட்டுக்கால் சூப்பு அல்லது மாமிசம் சாப்பிட்டால் நோய் குணமடையும் என்று கூறுவார்கள். முன் செய்த பாவத்தால் வந்த நோய்க்கு புலால் உண்பது மருந்தாகும் என்று சொன்னாலும் அதுவும் பாவச் செயலாகும். எனவே நோயைப் பொறுத்துக் கொள்வதுதான் சிறந்த அறமாகும். நோய் தீரும் பொருட்டு பிறஉயிர்களை கொல்வதாலே பாவமும் துன்பமும் வந்து சேரும்.

நன்றாகும் ஆக்கம் பெரிதெனினும் சான்றோர்க்குக்
கொன்றாகும் ஆக்கம் கடை.

– திருக்குறள் – கொல்லாமை – குறள்எண் 328.

இறைவழிபாடு என்ற பெயரால் உயிர்கொலை செய்தால், இந்திரப் பதவியே கிடைக்கும் என்றாலும் சான்றோர்கள் அதை விரும்ப மாட்டார்கள். அவர்கள் கொலைச்செயலை இழிந்த செயலாக எண்ணுவார்கள்.

கொலைத் தொழில் மேற்கொள்ளாதிருப்பது சிறந்த அறமாகும்.

பற்றாய நற்குரு பூசைக்கும் பன்மலர்
மற்றோர் அணுக்களைக் கொல்லாமை ஒண்மலர்
நற்றார் நடுக்கற்ற தீபமுஞ் சித்தமும்
உற்றாரும் ஆவி அமர்ந்திடம் உச்சியே.

– திருமந்திரம் – கொல்லாமை – கவி எண் 197.

(ஒண் மலர் – சிறந்த மலர்)

மரணமில்லா பெருவாழ்வும், முக்காலமும் உணர்ந்தவரும், வீடுபேறு பெற்றவர்களுமாகிய ஞானிகள் திருவடியை பூசிக்கின்றவர்கள் புல், செடி, கொடி, மரம் ஆகியவற்றில் உள்ள பகுதியையோ, மலர்களையோ கொண்டு குருவின் திருவடியை பூஜை செய்யாமை நன்று. அச்செயல் ஜென்மத்தை கடைத்தேற்றுபவர்களுக்கு ஆகாத செயலாகும்.

அன்பெனும் நன்மலர் தூவிப் – பர
மானந்தத் தேவியின் அடியினை மேவி
இன்பொடும் உன்னுடலாவி – நாளும்
ஈடேற்ற தேடாய்நீ இங்கே குலாவி.

– மகான் கடுவெளிச்சித்தர் – ஆனந்தக்களிப்பு 19.

குருநாதன் திருவடியை பூசிக்க உகந்தது அன்பெனும் மலராகும். குருஅருள் பெறுவதற்கு இவ்வன்பெனும் மலரே துணையாக இருக்கும். மேலும் ஜென்மத்தை கடைத்தேற்ற விரும்புகிறவர்கள் காரணகுருவாகிய குருவின் திருவடியைப் பற்றி பூசித்தால் அவரது ஆசியால் இடகலையாகிய சந்திரகலையையும் பின்கலையாகிய சூரிய கலையையும் புருவமத்தியாகிய சுழிமுனையில் செலுத்தினால் மூலக்கனல் தோன்றி சுழிமுனைக்கதவு திறக்கும். சுழிமுனை கதவு திறந்து முச்சுடரும் தோன்றும். பின் அமிழ்தபானமும் சிந்தும். மரணமில்லா பெருவாழ்வும் கைகூடும். இதுவே குருநாதன் திருவடியை உருகி தியானிப்பவர்கள் பெறும் பேறாகும்.

11. களவு செய்வோர்க்கு உளவு சொன்னேனோ!

பதினைந்து வயதுள்ள ஏழைக் குடும்பத்தைச் சேர்ந்த ஒருவன் வேலை செய்யும் பொருட்டு ஒரு முதலாளியிடம் சேர்ந்தான். அந்த முதலாளி

வியாபாரம் செய்வதோடு சுமார் பத்து ஏக்கர் நிலமும் வைத்து விவசாயமும் செய்து வந்தார். வேலைக்கு சேர்ந்த வேலையாள் அம்முதலாளி வீட்டிலேயே தங்கி அங்கேயே உணவருந்தி வியாபாரம் மற்றும் விவசாய வேலைகளுக்கு உதவியாக இருந்து வந்தான்.

அம்முதலாளியும் அவனை நம்பி தம்முடைய குடும்பத்தில் ஒருவனாகவும், தம்முடைய மகனைப்போல் பாவித்தும் அவனுக்கு உணவு, உடை, தங்கும் வசதிகளுடன் அவரது வீட்டிலேயே பராமரித்து வந்தார்.

காலப்போக்கில் திருமண வயது அடைந்ததும் அவர்களே அவ்வேலையாளுக்கு ஒரு பெண்ணைப் பார்த்து திருமணம் செய்து வைத்து அவர்களுக்கு தேவையான உதவிகளை செய்து தமக்கு சொந்தமான ஒரு வீட்டில் குடியமர்த்தி தம் குடும்பத்தில் ஒருவனாகவும் அவனது குடும்பத்தையும் சேர்த்து பராமரித்து வந்தார்கள். அம்முதலாளி குடும்பத்தில் உள்ள விசேஷ வைபவங்களின் போது இவனுக்கும் தேவையான பொருளுதவி செய்து வந்தார்கள். அவர்கள் உண்ணும் உணவினையே இவனுக்கும் இவனது குடும்பத்திற்கும் கொடுத்து வந்தார்கள்.

மேலும் அவனை நம்பி வியாபாரம் மற்றும் விவசாயத்தில் சம்பாதித்த பொருள்களை தம் வீட்டில் வைத்து இருக்கும் இடம் வரை அவனுக்கு தெரியுமளவிற்கு அவனை நம்பியிருந்தார்கள்.

ஆனால் அவ்வேலையாளுக்கு கள்வர்களின் தொடர்பு இருந்தது. கள்வர்கள் அவ்வேலைக்காரனை அணுகி உனது முதலாளி பெரும் பணக்காரர் ஆயிற்றே. அவரது பணம் இருக்குமிடம் உனக்கு தெரியுமா? தெரிந்தால் அதை நாம் சேர்ந்து களவாடுவோம். களவாடி அதில் ஒருபகுதி உனக்கு தருகிறேன் என கூறியதை ஏற்று தம்மை நம்பி வீட்டை ஒப்படைத்து விட்டு சென்ற முதலாளிக்கு துரோகம் செய்யும் வகையில் அவ்வீட்டின் பெட்டக சாவியினை எடுத்து கள்வர்களுடன் சேர்ந்து அவ்வீட்டின் நகை, பணம் முதலியவற்றை களவாடி விட்டான். களவாடிய பொருளின் ஒரு பகுதியையும் அவன் எடுத்துக் கொண்டான்.

காவல் துறையினர் திருடர்களை பிடித்து விசாரித்து. தண்டிக்கும் பொழுது இத்திருட்டிற்கு மூலகாரணம் அவ்வீட்டிலுள்ள அந்த வேலைக்காரனே என விசாரணையில் தெரியவரவும் அதை அந்த முதலாளியிடம் கூறினார்கள்.

தன் மகன் போல் நம்பிய வேலைக்காரனே நமக்கு துரோகியாகி நமது பொருளை களவாடி விட்டானே என முதலாளியும் அவரது குடும்பத்தாரும் பாவி இப்படி செய்து விட்டானே என மனம் நொந்து சபித்தனர்.

இவ்வாறு தன்னை நம்பியவர்க்கு துரோகம் செய்த அவ்வேலைக்காரன் காவலரால் கைது செய்யப்பட்டு தன் குடும்பத்தை நிர்கதியாக்கி தானும் கெட்டு தனது குடும்பத்தினருக்கும் தீராத அவமானத்தை ஏற்படுத்தி விட்டான்.

முதலாளியின் குடும்பத்தினர் விட்ட சாபத்தால் வேலைக்காரன் தண்டனைக்குள்ளாகி சிறை சென்றதோடு வேலைக்காரனின் குடும்பமும் அழிந்து விட்டது. ஆதலால் "களவு செய்வோர்க்கு உளவு சொல்லுதல்" பாவமாகும். உளவு சொல்லுதல் என்பது இரகசியத்தை சொல்லுதல் ஆகும்.

12. பொருளை இச்சித்து பொய் சொன்னேனோ!

வியாபாரம் செய்யும் பொருட்டு ஒரு சிலர் தம் கையிலுள்ள சுமார் நான்கு முதல் ஐந்து இலட்சங்களை கொண்டு இரண்டு இலட்சம் முன் பணம் கொடுத்துவிட்டு கடை வாடகைக்கு பேசி பின் அக்கடையில் மீதமுள்ள மூன்று இலட்சங்களை கொண்டு பெரிய வியாபாரம் செய்வது போல் அலங்காரம் செய்து வியாபாரம் செய்து வருவார்கள். அவ்வாறு செய்யும் பொழுது தனக்கு தெரிந்தவர்களிடம் வியாபாரத்திற்கு பணம் தேவைப்படுகிறது. தங்களிடம் இருந்தால் கொடுங்கள் தங்களுக்கு அத்தொகைக்கேற்ப நூற்றுக்கு இரண்டு ரூபாய் வட்டி தருகிறேன் என ஆசை வார்த்தை கூறி பணம் கேட்பார்கள். கடையின் தோரணையை பார்த்து பலர் தம்மிடமுள்ள தனது எதிர்கால தேவைக்காகவும் தமது வீட்டிலுள்ள மகன், மகள் திருமணத்திற்காகவும் மற்றும் சுபகாரியங்களுக்காகவும் உள்ள பொருளை இலட்சக்கணக்கில் அவ்வியாபாரியிடம் கொடுப்பார்கள்.

ஒருசிலர் வீடுகட்டுதல் போன்ற காரியங்களுக்காக வைத்திருந்த பணத்தையும் அவ்வியாபாரியிடம் தருவார்கள். வீட்டில் தற்போது தேவையில்லாமல் எதிர்காலத்தில் தானே தேவைப்படும் அதுவரையில் சும்மாயிருக்கும் பணத்தினை வியாபாரியிடம் கொடுத்தால் அவர் தரும் வட்டியை வைத்து குடும்பம் நடத்தலாம் என எண்ணுவார்கள். தேவைப்படும்போது வியாபாரியிடம் சொல்லி வாங்கிக்கொள்ளலாம் என எண்ணுவார்கள்.

வியாபாரியும் ஆரம்பத்தில் தம்மிடம் பொருள் கொடுத்தவர்களுக்குரிய வட்டித்தொகையை தந்து வருவார். ஆனால் ஒரு குறிப்பிட்ட அளவு அதாவது ஐம்பது இலட்சங்கள் அல்லது ஒரு கோடி போன்ற பெரிய தொகையை பலரிடமிருந்து பெற்றவுடன் திடீரென வியாபாரத்தில் நஷ்டம் ஏற்பட்டு விட்டது, திவாலாகி விட்டது என "திவால் நோட்டீஸ்" கொடுத்து விட்டு தான் பலரிடம் வாங்கிய பொருளை பதுக்கி வைத்து கொள்வார்கள்.

அவனிடம் பொருளை கொடுத்தவர்கள் எல்லாம் எனது மகளின் திருமணத்திற்கு வைத்திருந்த பொருளை இழந்துவிட்டேனே பாவி என்னை ஏமாற்றி விட்டான். அவன் நல்லாயிருக்க மாட்டான் என்பதை போன்று பலரும் பலவிதமாக சபிப்பார்கள்.

பொருளை இழந்தவர்களின் மனவேதனையும் அவர்களது சாபமும் வியாபாரியினை மஞ்சள்காமாலை, சர்க்கரை வியாதி இன்னும் பல தீராத வியாதிக்கு உள்ளாக்கி அவனது உடம்பெங்கும் புண்கள் தோன்றி ஆறாமல் அழுகி புழுக்கள் தோன்றி நாற்றமெடுத்து மரணமும் சம்பவிக்காமல் நான்கு ஐந்து வருடங்களுக்கு மேலாக கட்டிலில் கிடந்து அவனது வீட்டில் உள்ளோரெல்லாம் "பாவி, என்று சாவானோ" என மனம் வெதும்பி சபிக்கும் அளவிற்கு நொந்து சாவான். அவனது குடும்பமும் பல இன்னல்களுக்கு ஆளாகி இறுதியில் அழிந்து போய்விடும்.

படுபயன் வெஃகிப் பழிப்படுவ செய்யார்
நடுவன்மை நாணு பவர்.

– திருக்குறள் – வெஃகாமை – குறள் எண் 172.

பரிமேலழகர் : படு பயன் வெஃகிப் பழிப்படுவ செய்யார். பிறர் பொருளை வெளவினால் தமக்கு வரும் பயனை விரும்பி அது வெளவுதற்குப் பழியின் கண்ணே படுஞ்செயல்களைச் செய்யார்; நடு ("நடுவு" என்பது பிரதி பேதம்) அன்மை நாணுபவர் – நடுவு நிலைமை யன்மையை அஞ்சுபவர் என்றவாறு.

நடு ("நடுவு" என்பது பிரதி பேதம்) – ஒருவன் பொருட்குப் பிறன் உரியன் அல்லன் என்னும் நடுவு.

மணக்குடவர் : தமக்குப் பயனுண்டாக வேண்டிப் பழியொடு படுவன செய்யார், நடுவன்மைக்கு நாணுபவர் என்றவாறு.

இது, நடுவு நிலைமை வேண்டுபவர் என்றது.

பரிதியார் : செல்வத்தால் வரும் பயனை நாடித் தன்மம் அல்லாத காரியத்தைச் செய்யார், நடுவுநிலைமையை உறுதியாகப் பிடித்தவர் என்றவாறு.

காலிங்கர் : பெரும் பொருட் பயனை விரும்பி மற்ற இது காரணமாகப் பழியுண்டாவன செய்யார். யாரோ எனின் தமது நெறியின்கண் ஏற்றத் தாழ்வின்றி ஒத்துவரும் பொருளல்லாமையை நாணும் இயல்புடையார் என்றவாறு.

அன்மை என்பது அல்லாமை என்றாயிற்று.

வேண்டற்க வெஃகியாம் ஆக்கம் விளைவயின்
மாண்டற் கரிதாம் பயன்.

– திருக்குறள் – வெஃகாமை – குறள் எண் 177.

பரிமேலழகர் : வெஃகி ஆம் ஆக்கம் வேண்டற்க – பிறர் பொருளை அவாவிக்கொண்டு அதனாலாகின்ற ஆக்கத்தை விரும்பாதொழிக: விளைவயின் பயன் மாண்டற்கு அரிதாம் – பின் அனுபவிக்குங்கால் அவ் ஆக்கத்தின் பயன் நன்றாதலில்லை ஆகலான் என்றவாறு.

'விளை' என்பது முதனிலைத் தொழிற் பெயர்.

இவை ஏழு பாட்டானும் வெஃகுதலின் குற்றம் கூறப்பட்டது.

மணக்குடவர் : பிறன்பொருளை விரும்பிப் பெறுகின்ற ஆக்கத்தை வேண்டாது ஒழிக; அது பயன்படுங் காலத்தில் ஆகும் பயன் நன்றாதல் இல்லையாதலான் என்றவாறு.

பரிதியார் : தனக்கு வேண்டின மரபுவழிச் செல்வத்தை விரும்புவானாகில், அஃது அறமும் தரும், முத்தியுந்தரும் என்றவாறு.

காலிங்கர் : எஞ்ஞான்றும் விரும்பாதொழிக; யாதினை எனின் நெறியன்றிப் பிறர் பொருளை விரும்பி மற்றதனால் ஆகும் ஆக்கத்தினைப் பயக்குமிடத்து மாட்சிமைப்படுதற்கு அரிதாம் பயன் என்றவாறு.

அழக்கொண்ட எல்லாம் அழப்போம் இழப்பினும்
பிற்பயக்கும் நற்பா லவை.

– திருக்குறள் – வினைத்தூய்மை – குறள் எண் 659.

பரிமேலழகர் : அழக்கொண்ட எல்லாம் அழப்போம் – ஒருவன் தீய வினைகளைச் செய்து பிறர் இரங்கக்கொண்ட பொருளெல்லாம் இம்மையிலே அவன்தான் இரங்கப்போகா நிற்கும்; நற்பாலவை இழப்பினும் பிற்பயக்கும் – மற்றைத் தூயவினையான் வந்த பொருள்கள் முன் இழந்தானாயினும் அவனுக்குப் பின்னர் வந்து பயன் கொடுக்கும் என்றவாறு.

'பின்' எனவே மறுமையும் அடங்கிற்று. பொருள்களான் அவற்றிற்குக் காரணமாய வினைகளது இயல்பு கூறியவாறு.

மணக்குடவர் : பரிப்பெருமாள் : பிறர் அழக்கொண்ட (பிறர் கொண்ட) பொருள்களெல்லாம் தாமும் அழப்போம்; அவ்வாறன்றி அறப் பகுதியால்(நற்பகுதியால்) கொண்ட பொருள்கள் (பொருளை) இழந்தாராயினும், பின்பு பயன்படும் என்றவாறு.

இது, தேடின பொருள் போம்(கெடும் என்பர் பரிப்பெருமாள்) என்றது.

பரிதியார் : பிறர் அழக்கொண்ட பொருள் தன்னையும் அழப்பண்ணிப்போம்; இழந்தாலும் பின்னே வந்து கைகூடும் நீதியால்தேடும் பொருள்; என்பதனால் நல்வினையால் பொருள் தேடுவான் என்றவாறு.

காலிங்கர் : தாம் பிறரைச் செறுத்தும் அவர் நெஞ்சு புழுங்கி அழுமாறு வலியினால் வவ்விக்கொண்ட பொருள் அனைத்தும் தாமும் அவ்வாறு அழும்படி போய்விடும்; இனி இவ்வாறன்றி முன்னம், தமக்கு உளதாகிய பொருளினை ஒருவாற்றான் இழந்தாராயினும், பின்னும் உளதாய் செல்லும் நற்கூறாகிய வினையினான் இயற்றும் பொருளானவை என்றவாறு.

சலத்தாற் பொருள்செய்தே மார்த்தல் பசுமட்
கலத்துள்நீர் பெய்திரீஇ யற்று.

– திருக்குறள் – வினைத்தூய்மை – குறள் எண் 660.

பரிமேலழகர் : சலத்தால் பொருள் செய்து ஏமார்த்தல் – அமைச்சன் தீயவினைகளால் பொருள் படைத்து அதனால் அரசனுக்கு ஏமஞ் செய்தல்; பசுமண் கலத்துள் நீர்பெய்து இரீஇ யற்று – பசிய மட்கலத்துள்ளே நீரைப்பெய்து அதற்கு ஏமஞ் செய்ததனோடு ஒக்கும் என்றவாறு.

முன் ஆக்கம் பயப்பனபோல் தோன்றிப் பின் அழிவே பயத்தலால், அவை 'சலம்' எனப்பட்டன. ஏமமார்த்தல் ('ஏமமாக்கல் என்பது ஏமாக்கல்' என்பது பிரதி பேதம்) என்பது 'ஏமார்த்தல்' என்றாயிற்று. ஏமத்தை அடையப் பண்ணுதல் என்றவாறு இருத்துதல் – நெடுங்காலம் இருப்பச் செய்தல். அரசனும் பொருளும் சேரப்போம் என்பதாம். பிறரெல்லாம் 'ஏமாத்தல்' என்று பாடம் ஓதி, அதற்கு 'மகிழ்தல்' என்றும், 'இரீஇயற்று' என்பதற்கு வைத்தாற் போலும் என்றும் உரைத்தார்; அவர் அவை தன்வினையும் பிறிதின் வினையுமாய் உவமை யிலக்கணத்தோடு மாறுகோடல் நோக்கிற்றிலர்.

இவை நான்கு பாட்டானும் அதற்குக் காரணம் கூறப்பட்டது.

மணக்குடவர் : பரிப்பெருமாள் : வஞ்சத்தாலே பொருள் தேடி மகிழ்ந்திருத்தல், பசுமட் கலத்திலே நீரை முகந்து வைத்த தன்மைத்து என்றவாறு.

இது, தானும் பொருளுங் கூடிக் கெடும் என்றது.

பரிதியார் : அநீதியினால் தேடும்பொருள் தன்னையும் கெடுத்துத் தானும் போம்; எப்படி என்றால் பச்சை மண் பாத்திரத்தில் வார்த்த தண்ணீரும் பாத்திரமும் கெட்டாற்போலே என்றவாறு.

காலிங்கர் : இது நமக்கு உறுதி அன்று என்று கருதாது பிறரொடு சலம் பற்றிக் கொண்டு மற்று அதனால் பொருளினைச் செய்து யாம் உடையம் என்று இறுமாந்திருத்தல் எத்தன்மைத்தோ எனின், மண்ணான் வனைந்துளவாகிய பசுங் கலத்தினகத்து நீரினைப் பெய்து இருத்திய அத்தன்மைத்து என்றவாறு.

பொருளை இச்சித்து பொய் சொன்னால் தாம் அழிவதோடு மட்டுமல்லாமல் குடும்பமும் அழிந்து விடும். பொருளை இச்சித்து பொய் சொல்வோர்கள் அடையும் நிலை இதுவேயாகும்.

13. ஆசை காட்டி மோசஞ் செய்தேனோ!

கிராமத்தில் ஒரு ஏழை விவசாய கூலித் தொழிலாளி அங்குள்ள நிலங்களில் வேலை செய்து வந்தான். அவனது உழைப்பில் வந்த வருவாயைக் கொண்டு அவனும் அவனது மனைவியும் குடிசை வீடு ஒன்றில் பிழைப்பு நடத்தி வந்தார்கள். அந்த விவசாயி ஒரு நிழக்கிழார் வயலில் கூலி வேலைக்கு சென்றபோது அவனது திறமையையும் உழைப்பையும் பார்த்து அவனிடம் அந்நிழக்கிழார் நீ மற்றவர்களை விட அதிகமாக உழைக்கிறாய். அறுவடை செய்யும் போது மற்றவர் ஐந்து கட்டுகள் அறுவடை செய்தால் நீயோ ஏழுகட்டுகள் அறுவடை செய்கிறாய். உன்னை எனக்கு ரொம்பவும் பிடித்திருக்கிறது. என்னிடம் வேலைக்கு சேர்ந்து கொள். உனக்கு தேவையான கூலியும் பிற்காலத்தில் எனது நிலத்தின் ஒருபகுதி சுமார் இரண்டு ஏக்கர் நிலமும், ஒரு வீடும் உனது பெயருக்கு எழுதி தருகிறேன். அதைவைத்து பிற்காலத்தில் பிழைத்து கொள் என கூறி அவனை தன்னிடம் வேலை செய்யும்படி சொன்னார்.

அந்த ஏழை விவசாயியும் அவரது வார்த்தையை நம்பி அவரிடம் வேலைக்கு சேர்ந்தபோது தனது மனைவியையும் வேலைக்கு சேர்த்து அவனும் அவனது மனைவியும் கடினமாக உழைத்தார்கள்.

இரவு நேரங்களில் கடுங்குளிரிலும் அவனும் அவனது மனைவியும் நிலத்தில் கடுமையாக உழைத்ததோடு பகலில் அந்நிலக்கிழாரின் வீட்டு வேலைகளையும் கவனித்து வந்தனர்.

அந்நிலக்கிழாரும் தனது வீட்டில் மீதமான உணவை அவனுக்கு கொடுப்பதோடு சிறிதளவு அவனுக்கு பணமும் கூலியாக கொடுத்து வந்தார்.

காலங்கள் சென்றன. சுமார் இருபது ஆண்டுகள் கழிந்து அவ்விவசாயி வயோதிகத்தினால் தளர்ச்சியடைந்து அவனது முதலாளியிடம் சென்று "ஐய்யா எனக்கு வயதாகி விட்டது. முன்போல் என்னால் உழைக்க முடியவில்லை. எனவே தாங்கள் நான் வேலைக்கு சேர்ந்தபோது கூறியதைப்போல் இரண்டு ஏக்கர் நிலத்தையும், வீட்டையும் எனக்கு அளித்தால் நானும் எனது மனைவியும் அதைவைத்து பிழைத்துக் கொள்வோம்" என கேட்டான்.

ஆனால் அதற்கு அந்த நிலக்கிழார் நானும் கொடுக்க நினைக்கிறேன். ஆனால் என்ன செய்வது? எனது பிள்ளைகள் உனக்கு நிலத்தையும், வீட்டையும் கொடுக்க ஒப்புக் கொள்ளவில்லை. எனவே உனக்கு என்னால் நிலம் தர இயலாது. நீ வேறு இடம் சென்று பிழைத்துக் கொள் என நயமாக கூறி ஏமாற்றி விட்டார்.

இதைக் கேட்ட அந்த கூலி விவசாயியும் அவனது மனைவியும் 'இரவும் பகலும் நிலக்கிழாருக்காக உழைத்தோம். அவர் ஆசை வார்த்தை கூறி நம்பசெய்து கடைசியில் எங்களை மோசம் செய்து விட்டாரே' என மிகுந்த மனவேதனைக்கு உள்ளாகி மிகவும் வருந்தினர்.

இதுபோன்று ஆசைகாட்டி மோசம் செய்வது பாவச் செயலாகும். இதுபோன்று ஆசை காட்டி மோசஞ் செய்கின்ற பாவிகள் தனது எல்லா சொத்துக்களையும் இழந்து கடைசியில் பிடி சோற்றிற்கு ஏங்குகின்ற நிலைமை வரும்.

14. வரவு போக்கொழிய வழியடைத்தேனோ!

இரண்டு கிராமங்களுக்கு இடையில் ஒரு மாட்டுவண்டி பாதை தொன்றுதொட்டு இருந்து வந்தது. அந்த பாதையானது ஒரு நிலப்பிரபுவின் நிலத்தின் வழியாக சுமார் இருநூறு அடி நீளத்திற்கு சென்று பின்னர் பொது இடம் வழியாக சென்று அடுத்த கிராமத்தை இணைத்தது. இரு கிராம மக்களும் அந்த பாதையை தொன்றுதொட்டு பயன்படுத்தி வந்தனர். நிலப்பிரபு பாதையின் இருபுறமும் உள்ள தனது நிலத்தில் கரும்பும் நிலக்கடலையும் பயிரிட்டு வந்தார்.

அப்பாதை வழியாக செல்லும் சிறுவர்கள் சிலர் அந்நிலத்தில் விளைந்துள்ள நிலக்கடலையை பறித்தும், கரும்பை ஒடித்தும் தின்று அந்நிலபிரபுவிற்கு சிறுசிறு தொல்லைகள் கொடுத்து வந்தனர். இதனால் கோபமுற்ற அந்நிலபிரபு கிராமமக்கள் பொதுவாக பயன்படுத்தி வந்த அந்த பாதையை தனது அதிகாரபலத்தால் இருபுறமும் முள்வேலியிட்டு பாதையை யாரும் பயன்படுத்த முடியாதபடி அடைத்து விட்டார். இதனால் இரு கிராம மக்களும் பாதையின்றி சுமார் ஒரு கிலோ மீட்டர் அளவு சுற்றி வந்து கிராமங்களுக்கு சென்றனர். இது நிலபிரபு கிராம மக்களுக்கு செய்த பாவச்செயலாகும். அந்நிலபிரபு தனது நிலத்தில் வேலியிட்டு பயிரை காத்துக் கொள்ள வேண்டுமே அன்றி பொதுமக்கள் பயன்படுத்தும் பாதையை அடைத்தது பாவச் செயலாகும்.

இவ்வாறு பாதையை அடைத்து கிராமமக்களை சிரமத்திற்கு உள்ளாக்கியதால் கிராம மக்கள் மன வேதனையடைந்தனர். அக்கிராம மக்களின் வேதனையால் அந்நிலபிரபு அப்பாதையின் இருபுறமும் உள்ள நிலங்களை விற்றுவிட்டு வறுமைக்கு உள்ளாகி அவர் குடும்பம் வறுமையால் வாடவேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது. ஆகவே மக்கள் பயன்படுத்தும் பொதுபாதையை அடைப்பது பாவச்செயலாகும்.

15. வேலையிட்டு கூலி குறைத்தேனோ!

நெல், சோளம், கம்பு, வரகு, கேழ்வரகு, கோதுமை இதுபோன்ற புல்வகை தானியப் பயிர்களும், தக்காளி, மிளகாய், கத்தரி, வெண்டை இதுபோன்ற செடிவகை பயிர்களும், அவரை, சுரைக்காய், பூசணி, பரங்கி, புடலங்காய், மிளகு இதுபோன்ற கொடிவகை பயிர்களும், மா, தென்னை, பாக்கு இதுபோன்ற மரவகைப் பயிர்களும் விவசாயம் செய்கிறார்கள். இதன்றி மூலிகை பயிர்களும் விவசாயம் செய்கிறார்கள். இவ்வாறு செய்யும் விவசாயத்தில் கூலி ஆட்களாக பெண்களும் ஆண்களும் வேலை செய்கிறார்கள். இதன்றி ஜவுளி, மளிகை, விற்பனை நிலையங்கள் இதுபோன்ற அநேக பொருள் விற்பனை கடைகளிலும், மோட்டார், மின்விசிறி, இயந்திரங்கள், உதிரி பாகங்கள் தயாரித்தல் இதுபோன்ற தொழிற்சாலை சார்ந்த தொழில்களிலும் ஆண்களும் பெண்களும் வேலை செய்கிறார்கள். உணவகங்கள் மற்றும் அநேக இடங்களிலும் வேலையாட்களாக ஆண்களும் பெண்களும் வேலை செய்கிறார்கள். அவர்கள் வேலை செய்யும்பொழுது 100ரூபாய் மதிப்புள்ள வேலையினை கூலி ஆட்களிடம் அதாவது பணிசெய்பவரிடம் வேலை வாங்கிவிட்டு 50ரூபாய் மட்டும் கூலியாக அதாவது சம்பளமாக கொடுப்பது பாவச்செயலாகும். அநேகம் பேர் இப்படி கூலியாட்களிடம் அதிகமாக வேலை வாங்கிவிட்டு அவர்களின் உழைப்பிற்கேற்ற ஊதியம் தரமாட்டார்கள். இது பாவச் செயலாகும். ஒருசிலர் வேலை ஆட்களின் உழைப்பிற்கேற்ற ஊதியம் தருவார்கள். அங்ஙனம் உழைப்பிற்கேற்ற ஊதியம் தருவது புண்ணியச் செயலாகும். உழைப்பிற்கேற்ற ஊதியம் தருபவர்கள் புண்ணியவான்களாவார்கள். உழைப்பிற்கேற்ற ஊதியம் தருபவர்கள் உழைப்பிற்கு மதிப்பு தந்து தொழில் செய்வதால் அவர்களுடைய தொழில் மேன்மேலும் வளர்ந்து செழித்தோங்கும். ஆனால் உழைப்பிற்கேற்ற ஊதியம் தராமல் குறைத்து கூலி கொடுப்பவர்கள் தொழிலானது நாளடைவில் குறுகி நசிந்து போய்விடும்.

சில நிலக்கிழார்கள் தங்கள் வயலில் வேலைசெய்யும் கூலித் தொழிலாளிக்கு தக்க ஊதியம் கொடுக்காமல் கூலியை குறைத்து கொடுத்து வந்தால் அவர்கள் விவசாயத்தில் விளைச்சல் குன்றிவிடும். நாளடைவில் விவசாயம் நசிந்து விடும். இதை ஔவையார் தனது கொன்றை வேந்தன் என்னும் நூலில்

பண்ணிய பயிரில் புண்ணியம் தெரியும்.

– ஔவையார் – கொன்றை வேந்தன் 59.

என கூறுகிறார்.

எனவே வேலைக்கு ஏற்ப தக்க கூலி கொடுக்க வேண்டும். அவ்வாறன்றி வேலையிட்டு கூலி குறைப்பது பாவச்செயலாகும்.

16. பசித்தோர் முகத்தை பாராதிருந்தேனோ!

கட்டோடே கனத்தோடே வாழ்கின்றோம் என்பீர்
கண்ணோடே கருத்தோடே கருத்தனைக் கருதீர்
பட்டோடே பணியோடே திரிகின்றீர் தெருவில்
பசியோடே வந்தாரைப் பார்க்கவும் நேரீர்
கொட்டோடே முழக்கோடே கோலங்காண் கின்றீர்
குணத்தோடே குறிப்போடே குறிப்பதைக் குறியீர்
எட்டோடே இரண்டுசேர்த் தெண்ணவும் அறியீர்
எத்துணை கொள்கின்றீர் பித்துல கீரே.

– திருஅருட்பா – ஆறாம்திருமுறை – உலகர்க்கு உய்வகை கூறல் –5556.

சில ஊர்களில் ஒரு குறிப்பிட்ட இனத்தை சேர்ந்த மக்கள் ஆயிரம் தலைக்கட்டுகளுக்கு அதாவது ஆயிரத்திற்கு மேற்பட்ட குடும்பங்களாக கூடி வாழ்வார்கள். அவர்கள் செல்வநிலையில் உயர்ந்தும் இருப்பார்கள். இவர்களது இந்த கூட்டமானது சுபகாரியங்களுக்கும் அசுப காரியங்களுக்கும் ஒன்று கூடி அக்காரியங்களை நடத்துவார்கள். இவ்வாறு இருக்கும் இந்த கூட்டமானது சுப, துக்க காரியங்களுக்கு மட்டும்தான் பயன்படுமே அன்றி பிறவிப்பிணியை ஒழிக்க பயன்படாது. இக்கூட்டங்களை சேர்ந்தவர்கள் தாங்கள் மிகவும் கட்டுப்பாடாகவும், வலுவுள்ளவர்களாகவும் இருக்கிறோம் என்று கூறுவார்கள். ஆனால் இக்கூட்டத்தால் பிறவிப்பிணியை ஒழிக்க முடியாது. இடகலையையும், வலகலையையும் சேர்த்து பதியாகிய சுழிமுனையில் காற்றை செலுத்தி வினாத்தண்டின் வழியாக கீழிறங்கும் நரம்பின் மூலம் மூலாதாரத்தை அடைந்து அங்கு ஆசான் ஆசியால் மூலக்கனலை தோற்றுவித்து அங்கிருந்து மேலேறி கண்டஸ்தானத்தில் மூன்றாக பின்னல்போல் பின்னி பிரியும், ஈஸ்வர நாடி வழியாக குண்டலியை மேலேற்றி தனது இருகண்களால் புருவமத்தியை உற்றுநோக்கி உள்பார்வை செலுத்தி ஞானக்கண்ணாகிய புருவமத்தியில் குண்டலியை ஏற்றி அமிழ்தபானத்தை சிந்தச்செய்து இவ்வுடம்பின்கண் உள்ள அசத்தை நீக்கி சத்தை நிலைபெறச் செய்து மரணமில்லா பெருவாழ்வை பெறவேண்டும். இத்தகைய அற்புதமான பெறுதற்கரிய பெரும்பேற்றினை அக்கூட்டத்தினால் பெற இயலாது. இங்கு “கண்ணோடே கருத்தோடே” என வள்ளல் பெருமானார் கூறுவது புருவமத்தியில் காற்றை ஒடுங்கச்செய்து கூர்பார்வை செலுத்துவதை குறிக்கிறது. மகான் சிவவாக்கியர் தமது பாடல் ஒன்றில்

காலைமாலை நீரிலே முழுகுமந்த மூடர்காள்
காலைமாலை நீரிலே கிடந்ததேரை யென்பெறும்
காலமே யெழுந்திருந்து கண்கள் மூன்றி லொன்றினால்
மூலமே நினைந்திராகில் முத்திசித்தி யாகுமே.

– மகான் சிவவாக்கியர் – கிரியை – கவிஎண் 132.

இவ்வுலக வாழ்வானது நிலையற்றது. யாக்கை நிலையாமை, செல்வம் நிலையாமை, இளமை நிலையாமை ஆகியவற்றை உணராது சில வசதி படைத்தவர்கள் இவ்வாழ்வை நிலையென்று எண்ணி மிகஉயர்ந்த பட்டாடைகளை அணிந்தும், ஆடம்பரமான நகைகளை அணிந்து தனது பெருமையை உலகறியும் வண்ணம் திரிந்து அலைகின்றனர். அவர்கள் தமது எதிரில் பசியோடு வரும் ஏழைகளை ஏறெடுத்தும் பார்க்காமல் செல்வார்கள். அதோடு மட்டுமல்லாது ஆடம்பரமான விருந்துகளும், மேளதாளங்களும், கண்ணுக்கு கவர்ச்சியாக ஆடம்பரமான அலங்கரிக்கப்பட்ட கூடங்களையும் கொண்டு திருமணம் போன்ற சுப காரியங்கள் செய்வார்கள். ஆனால் வறிய பசித்த ஏழைகளுக்கு உணவளிக்க வேண்டும், அன்னதானம் செய்ய வேண்டும் என்ற எண்ணமே இல்லாது இருப்பார்கள். தமிழில் "அ" என்பது எட்டையும், "உ" என்பது இரண்டையும் குறிக்கும். அதாவது எட்டிரண்டு என்பது எட்டாகிய "அ"காரத்தையும், இரண்டு என்பது "உ"காரத்தையும் குறிக்கும். இந்த அகார உகாரத்தை அறிந்து அதைச் சேர்த்து பத்தாகிய அதாவது பத்தாம் வாசலாகிய சுழிமுனையில் செலுத்த தெரியாமல் விழிக்கின்றனர். சிறிதளவும் கருணை கொள்ளாது வாழும் இந்த உலகத்தோர்கள் என கூறுகிறார் வள்ளல் பெருமான். நிலையில்லாத வாழ்வை நிலையென்று நம்பி வாழும் இவர்கள் என்னப் பயனை அடையப் போகிறார்கள். பிறவிப் பிணியை ஒழிப்பதற்கு, பசித்த ஏழைகளுக்கு பசியாற்றுவிப்பதே எட்டிரண்டை அறியக்கூடிய உண்மையை உணரச்செய்யும் அவ்அகார உகாரத்தை அறிவதே பிறவிப்பிணியை ஒழிக்கும் உபாயமாகும்.

ஒருவன் எத்துணைதான் வசதியானவனாக இருந்தாலும், பலமானவனாக இருந்தாலும் அவனது உறவினர்களும் எத்துணை வசதியானவர்களாக இருந்தாலும் அவர்களுடன் இவனும் இணைந்து பெரும் கூட்டமாக இருந்தாலும் அவையனைத்தும் அவனை காக்கபோவது இல்லை. எட்டிரண்டும் "அ"காரத்தையும், "உ"காரத்தையும் அறியாவிடில் கண்டிப்பாக மரணம் உண்டு. எட்டிரண்டை அதாவது "அ"காரத்தையும், "உ"காரத்தையும் அறிந்து அதைச் சேர்த்து வெற்றி கண்டவர்கள் மட்டுமே மரணத்தை வென்று மரணமில்லா பெருவாழ்வை பெறமுடியும்.

பெறுதற்கரிய மானிடப்பிறவி பல ஜென்மங்களில் செய்த தவப்பயனால் கிடைத்ததாகும். காலம் உள்ள போதே அதாவது இளமை உள்ளபோதே பசித்த ஏழைகளுக்கு பசியாற்றியும், உயிர்கொலை தவிர்த்தும், புலால் மறுத்தும் மகான் இராமலிங்க சுவாமிகள் திருவடியை பூசித்து வந்தால், மகான் இராமலிங்க சுவாமிகள் நமது சிந்தையை சார்ந்திருந்து உடம்பைப் பற்றியும், உயிரைப் பற்றியும், உடல்மாசைப் பற்றியும், உயிர்மாசைப் பற்றியும்

அறியச் செய்வார். உடல் மாசின் காரணமாக, உயிர் மாசானது பற்றியும், அதன் காரணமாக அறிவு தெளிவு ஏற்படாதது பற்றியும் உணர்த்தி உடல்மாசை நீக்குவதற்குரிய உபாயத்தையும் அதன் காரணமாக உயிர்மாசை நீக்குவதற்குரிய உபாயத்தையும் உணர்த்தி நம்முள் ஆன்மஜோதி தோன்ற அருள்செய்வார். ஆன்மஜோதியை அறிந்தவர்கள் மரணமில்லா பெருவாழ்வு பெறுவார்கள். மனிதனாக பிறந்தால் சான்றோர்கள் தொடர்புகொண்டு அவர்கள் கூறும் அறிவுரைப்படி வாழ்க்கையை செம்மையாக நடத்தி ஜென்மத்தை கடைத்தேற்றி கொள்வதே மனிதப்பிறவியால் பெறத்தக்க ஆன்ம லாபமாகும்.

இக்கருத்தையே மகான் இராமலிங்க சுவாமிகள் திருஅருட்பா ஆறாம் திருமுறையில் உலகோர்க்கு உய்வகை கூறல் என்ற தலைப்பின் கீழ்

"கட்டோடே கனத்தோடே வாழ்கின்றோம் என்பீர்
கண்ணோடே கருத்தோடே கருத்தனைக் கருதீர்..."

என்று 5556–வது கவியில் கூறுகிறார்.

ஆற்றுவார் ஆற்றல் பசிஆற்றல் அப்பசியை
மாற்றுவார் ஆற்றலின் பின்.

– திருக்குறள் – ஈகை – குறள் எண் 225.

அற்றார் அழிபசி தீர்த்தல் அஃதுஒருவன்
பெற்றான் பொருள்வைப் புழி.

– திருக்குறள் – ஈகை – குறள் எண் 226.

ஈத்துஉவக்கும் இன்பம் அறியார்கொல் தாம்உடைமை
வைத்துஇழக்கும் வன்க ணவர்?

– திருக்குறள் – ஈகை – குறள் எண் 228.

ஒன்றென்றிரு தெய்வம் உண்டென்றிரு; உயர்செல்வமெல்லாம்
அன்றென்றிரு பசித்தோர் முகம்பார்; நல்லறமும்நட்பும்
நன்றென்றிரு, நடு நீங்காமலே நமக்கிட்டபடி
என்றென்றிரு; மனமே உனக்கே உபதேசமிதே.

– மகான் பட்டினத்தார் – பொது – கவிஎண் 20.

பல ஏக்கர் நிலம் வைத்து விவசாயம் செய்வார்கள். அவர்களில் ஒரு சிலர் வயலிற்கு செல்லும்போது தான் உண்ணும் உணவையே தனது நிலத்தில் வேலைசெய்யும் தொழிலாளிக்கும் தந்து அத்தொழிலாளி மனம் மகிழ நடந்து கொள்வார். உதாரணமாக முதலாளி காலை உணவாக இட்லி, தோசை, சட்னி, சாம்பார் உண்கிறார் என்றால் தனது வயலில் வேலை செய்யும்

தொழிலாளிக்கும் (பண்ணையாள்) அதே உணவை தருவார். ஒரு சிலர் தனக்கு சுவையான உணவும் தொழிலாளிக்கு இரவு மீதமான உணவினை அல்லது தொழிலாளிக்கென்று தனி உணவையோ தருவார்கள். ஆனால் ஒரு சிலர் தான்மட்டும் சுவையான உணவு உண்டு வயலில் வேலைசெய்யும் தொழிலாளிக்கு பசித்த நேரத்திற்கு உணவேதும் கொடுக்காமல், அவர் பார்க்க, பசியோடு இருக்க, தான்மட்டும் உணவருந்தி தொழிலாளியின் பசியை அறியாது இருப்பார்கள். இங்கு தொழிலாளிக்கும் தான் உண்ணும் உணவை அளித்தவர் நிலத்தில் வேலைசெய்யும் தொழிலாளியை முதலாளி உணவருந்தி ஓய்வெடுத்து பிறகு வேலை செய் என கூறினாலும் தொழிலாளி அதை மறுத்து பொழுது சாய்வதற்குள் இன்னும் இரண்டு பாத்திகள் களையெடுத்து விடுகிறேன், பிறகு ஓய்வெடுத்து கொள்கிறேன் என கூறி ஓய்வெடுக்காது வேலை செய்வான். ஆனால் உணவேதும் அளிக்காதவர் நிலத்தில் என்னதான் பாடுபட்டாலும் நாளுக்குநாள் அவரது நிலம் வளம் குன்றி விவசாயம் நசிந்து போகும். இதிலிருந்து நாம் தெரிந்து கொள்ள வேண்டியது என்னவென்றால் தன்னிடம் வேலை செய்பவர்கள் மனம்மகிழ அவருக்கு உணவளித்தால் அவரது நிலத்தில் ஒன்றுக்கு பத்தாக விளைச்சல் விளையும் என்பதை அறிய வேண்டும்.

கடவுள் நமக்கு பொருள் கொடுத்ததன் நோக்கமே பசித்தோர் முகம் பார்த்து அவருக்கு உணவளித்து அவரது பசியை நீக்கும் பொருட்டுதான். ஆனால் பசித்தோர் முகம் பாராமல் அவருக்கு உணவளித்து பசியை போக்காமல் இருப்பது கடவுளுக்கு நாம் செய்யும் துரோகமாகும். இது பாவச் செயலாகும்.

ஏழைகளுக்கு பசியாற்றுவிப்பதால் உடல் ஆரோக்கியமும், நீடிய ஆயுளும் குடும்பத்தில் ஒற்றுமையும் உண்டாகும். அது மட்டுமல்லாது பண்புள்ள புத்திரபாக்கியம் உண்டாகும். மேலும் தகுதியுள்ள நட்பும் அமையும். விருந்தை உபசரிக்க வேண்டும் என்ற எண்ணமும், அதன் பயனாக நட்பை பெருக்கிக் கொள்கிற வாய்ப்பையும் பெறுவார்கள். அதுமட்டுமல்லாது பிறவிப் பிணியை பற்றி அறிந்து கொள்கின்ற அறிவும், பரிபக்குவமும் உண்டாகும். பக்குவம் அடைந்தவர்கள் மட்டும்தான் முதற்கடவுளும் முற்றுப்பெற்ற தலைவருமாகிய ஆசான் ஞானபண்டிதன் ஆசியைப் பெற்று ஜென்மத்தை கடைத்தேற்றிக் கொள்வார்கள்.

இதுவே பசித்தோர் முகம் பார்த்து பசியாற்றுபவர் அடையும் பெரும் நன்மைகளாகும். இதை விடுத்து வாய்ப்பிருந்தும் பசித்தோர் முகம் பாராமல் இருப்பது பெரும் பாவச் செயலாகும்.

17. இரப்போர்க்கு பிச்சை இல்லையென்றேனோ!

ஒரு சிலர் முன்செய்த நல்வினை காரணமாக இப்பிறப்பில் செல்வம் மிகுந்த செல்வந்தர்களாக இருப்பார்கள். அவர்களிடம் பசித்த ஏழைகள் வயிற்றிற்கு உணவு வேண்டியும், ஒரு சில ஏழைகள் மானத்தை காக்க உடுக்க உடையின்றி உடை வேண்டியும், ஒரு சில ஏழைகள் தங்கள் மகள் திருமணத்திற்கு பொருளுதவி வேண்டியும் அச்செல்வந்தரை நாடி கேட்பார்கள்.

அச்செல்வந்தர்கள் அந்த ஏழைகளின் தேவையை பூர்த்தி செய்து தானம் கொடுத்து புண்ணியத்தை செய்து கொள்ள வேண்டும். செல்வந்தனிடம் பொருள் சேர்ந்து இருப்பதே பிறருக்கு உதவி செய்யும் பொருட்டுதான். அதை விட்டுவிட்டு அவர்கள் பிறருக்கு தானம் கொடுக்காமல் இறுகப் பற்றிக் கொண்டால் அது பாவமாகும். இச்செயலால் இறைவனின் கோபத்திற்கு ஆளாக நேரிடும்.

ஏழைகளுக்கு செய்யக்கூடிய தருமங்கள் இப்பிறப்பிற்கும் மறுபிறப்பிற்கும் துணையாக இருக்கும். பொருளின் நிலையாமையை அறிந்தவர்கள், பொருள் உள்ளபோதே பொருளைக் கொண்டு இம்மை மறுமைக்கு அதாவது இப்பிறப்பிற்கும், மறுபிறப்பிற்கும் ஆக்கம் தேடிக் கொள்வார்கள்.

அற்கா இயல்பிற்றுச் செல்வம்; அதுபெற்றால்
அற்குப ஆங்கே செயல்.

– திருக்குறள் – நிலையாமை – குறள்எண் 333.

செல்வம் நிலைக்காத இயல்பை உடையது; அத்தகைய செல்வத்தைப் பெற்றால், பெற்ற அப்பொழுதே நிலையான அறங்களைச் செய்ய வேண்டும்.

– மு.வரதராசனார்.

ஈதல்; இசைபட வாழ்தல்; அதுஅல்லது
ஊதியம் இல்லை உயிர்க்கு.

– திருக்குறள் – புகழ் – குறள்எண் – 231.

வறியவர்க்கு ஈதல் வேண்டும். அதனால் புகழ் உண்டாக வாழவேண்டும். அப்புகழ் அல்லாமல் உயிர்க்கு ஊதியமானது வேறொன்றும் இல்லை.

– மு.வரதராசனார்.

மனிதன் தோன்றும் போதே உடம்பும் உயிரும் இணைந்து தோன்றுகிறான். ஆனால் இந்த உடம்பு அழிந்து விடுகிறது. உயிர் அழிவதில்லை. அறிவுடைய மக்கள் உயிருக்கு ஆக்கம் தேடிக் கொள்ளும் பொருட்டு, பொருள் வந்தபோதே பிறருக்கு தானதர்மம் செய்து தனது உயிருக்கு ஆக்கம் தேடிக் கொள்வார்கள்.

இந்த அறிவு உண்மை பொருளுணர்ந்த ஆசான் சுட்டிக் காண்பிப்பதால் வந்த அறிவாகும். அவ்வாறில்லாமல் அழியக்கூடிய பொருளை நிலையில்லாத பொருளை நிலையென்று நம்பி இறுகப் பற்றிக்கொண்டு தர்மம் செய்யாது இருந்தால் அவரது உயிர் ஆக்கம் பெறமுடியாது.

எனவே மனிதனாக பிறந்தால் பாவபுண்ணியம் உண்டென்று நம்ப வேண்டும். அது மட்டுமல்லாது தெய்வம் உண்டென்று நம்ப வேண்டும். கடவுள் நம்பிக்கை உள்ளவர்கள்தான் பாவபுண்ணியத்தை அறிய முடியும். கடவுள் நம்பிக்கை இல்லாதவர்கள் பாவபுண்ணியத்தை அறிய முடியாது. பாவத்தையும் புண்ணியத்தையும் அறிந்த மக்கள்தான் பாவத்தை நீக்கி புண்ணியத்தை பெருக்கிக் கொள்வார்கள். புண்ணியத்தை மென்மேலும் பெருக்கிக் கொண்ட மக்களுக்கு உண்மைப் பொருளுணர்ந்த ஆசான் நட்பு கிடைக்கும். அவரது உபதேசம் பெற்றால் உடம்பின் இயல்பைப் பற்றியும், உயிரின் இயல்பை பற்றியும் உபதேசிப்பார். உபதேசம் பெற்ற புண்ணியவானுக்கு அறக்கடலாக விளங்கும் ஆசான் ஞானபண்டிதன் உடம்போடு கலந்து இடகலையாகிய சந்திர கலையையும், பின்கலையாகிய சூரியகலையையும் பதியாகிய சுழிமுனையில் ஒடுங்கச் செய்து தானும் அவ்வாசியோடு சுழிமுனையில் ஒடுங்கி விடுவார். ஒடுங்கி தேகக் கசடை நீக்கி ஒளி உடம்பாக்குவார்.

ஏற்றி இறக்கி இருகாலும் பூரிக்குங்
காற்றைப் பிடிக்குங் கணக்கறி வாரில்லை
காற்றைப் பிடிக்குங் கணக்கறி வாளர்க்குக்
கூற்றை யுதைக்குங் குறியது வாமே.

– திருமந்திரம் – பிராணாயாமம் – கவிஎண் 571.

அற்றார் அழிபசி தீர்த்தல் அஃதுஒருவன்
பெற்றான் பொருள்வைப் புழி.

– திருக்குறள் – ஈகை – குறள் எண் 226.

வறியவரின் கடும்பசியைத் தீர்க்க வேண்டும். அதுவே பொருள் பெற்ற ஒருவன் அப்பொருளை தனக்கு பிற்காலத்தில் உதவுமாறு சேர்த்து வைக்கும் இடமாகும்.

– மு.வரதராசனார்.

இரக்க இரத்தக்கார்க் காணின்; கரப்பின்
அவர்பழி தம்பழி அன்று.

– திருக்குறள் – இரவு – குறள் எண் 1051.

இரந்து கேட்கத் தக்கவரைக் கண்டால் அவரிடம் இரக்க வேண்டும்; அவர் இல்லையென்று ஒளிப்பாரானால் அது அவர்க்குப் பழி; தமக்குப் பழி அன்று.

– மு.வரதராசனார்.

முன்செய்த நல்வினையாலும் இறையருளாலும் பெற்ற செல்வத்தை ஏழைஎளிய மக்களுக்கு உதவி செய்யாவிட்டால் பொருள் பெற்றவர்களுக்கு பழிவந்து சேரும். நிறையப் பொருள் இருந்தும் பிறருக்கு உதவி செய்யாதவனை லோபி என்று சொல்லுவான். பொருள் இருக்கும் போதே ஜென்மத்தை கடைத்தேற்றிக் கொள்ள வேண்டுமென்ற அறிவு இல்லாதவன், நரை, திரை, மூப்பு பிணிக்கு உட்பட்டு இறந்தபின் பிணம் என்று இழிவாக பேசுவார்கள். அறிவுடையவர்கள் பெற்ற பொருளைக் கொண்டு அருளையும், புண்ணியத்தையும் பெற்று அதன் பயனாக மரணமில்லா பெருவாழ்வையும் பெற்று ஞானி என்ற பெருமைக்குரிய பெயரைப் பெறுவார்கள்.

பொருளான்ஆம் எல்லாம்என்று ஈயாது இவறும்
மருளான்ஆம் மாணாப் பிறப்பு.

– திருக்குறள் – நன்றிஇல் செல்வம் – குறள் எண் 1002.

பொருளால் எல்லாம் ஆகும் என்று பிறர்க்கு ஒன்றும் கொடுக்காமல் இறுகப் பற்றிய மயக்கத்தால் சிறப்பில்லாத பிறவி உண்டாம்.

– மு.வரதராசனார்.

ஈட்டம் இவறி இசைவேண்டா ஆடவர்
தோற்றம் நிலக்குப் பொறை.

– திருக்குறள் – நன்றிஇல்செல்வம் – குறள் எண் 1003.

சேர்த்து வைப்பதையே விரும்பிப் பற்றுள்ளம் கொண்டு புகழை விரும்பாத மக்கள் பிறந்து வாழ்தல் நிலத்திற்குப் பாரமே ஆகும்.

– மு.வரதராசனார்.

ஓரறிவு முதல் ஐந்தறிவுவரை உள்ள ஜீவராசிகளை தாங்கிக் கொள்ளும் பூமாதேவி, ஆறறிவு உள்ள மனிதனாக பிறந்தும் தயைசிந்தையில்லாத இவனை சுமப்பது வேண்டா வெறுப்பாகி சுமப்பாள். புண்ணியவான்களை சுமக்கும் போது பூமாதேவி மகிழ்ச்சி அடைவாள். பாவிகளை சுமக்கும் போது மனம் சோர்வடைவாள்.

இல்லோர் இரப்பதும் இயல்பே இயல்பு.

– வெற்றிவேற்கை – 57.

முன்செய்த தீவினை காரணமாக பொல்லாத வறுமைக் குடும்பத்தில் பிறந்து பிச்சையெடுப்பார்கள். அவர்களுக்கு பொருள் வசதியும், தயைசிந்தையும் உள்ளவர்கள், யாசிப்பவர்களுக்கு பொருளுதவி செய்யும் கடமை, பொருள் பெற்றோர்க்கு உண்டு.

இரந்தோர்க்கு ஈவதும் உடையோர் கடனே.

– வெற்றிவேற்கை – 58.

முன்செய்த நல்வினையால் செல்வம் பெற்றவர்கள் தன்னிடம் வந்து யாரேனும் உதவி செய்யுங்கள் என்று பொருளுதவி கேட்டால் அவருக்கு பொருளுதவி செய்வது அவரது கடமையாகும். அவ்வாறன்றி பொருள் கொடுக்காது இறுகப் பற்றிக் கொள்வது அறியாமையாகும்.

பாடுபட்டுத் தேடிப் பணத்தைப் புதைத்துவைத்துக்
கேடுகெட்ட மானிடரே கேளுங்கள் – கூடுவிட்டிங்(கு)
ஆவிதான் போயினபின் யாரோ அனுபவிப்பார்
பாவிகாள் அந்தப் பணம்.

– ஔவையார் – நல்வழி – கவிஎண் 22.

ஒருவன் பல வழிகளிலும் தொழில்கள் செய்தும், வியாபாரம் செய்தும், விவசாயம் செய்தும் நிறையப் பொருளை சேர்த்து பாதுகாப்பாக பூமியில் புதைத்து வைப்பார்கள். அதை யாரிடமும் கூறாமல், தன் மகனுக்கும், தன் மனைவிக்கும் கூட தெரியாமல் புதைத்து வைப்பார்கள். அவ்வாறு புதைத்து வைத்த இடத்தை சொல்ல மாட்டார்கள். இவர்கள் விபத்தின் காரணமாகவோ, மாரடைப்பின் காரணமாகவோ (heart attack), விஷ ஜந்துக்களாலோ, பகைவர்களாலோ கொலை செய்யப்பட்டும், தீராத நோய்வாய்ப்பட்டும் இறந்து விடுவார்கள். இவ்வாறு இறக்கும் அவன், சேர்த்த பொருள் தன் மனைவி மக்களுக்கும் பயன்படாது, உற்ற நண்பர்களுக்கும் பயன்படாது.

பொருள் பெற்றவர்கள் அப்பொருளைக் கொண்டு அறப்பணிகள் செய்து ஆன்ம லாபத்தை பெற்றுக் கொள்ள வேண்டும். அவ்வாறு இல்லாமல் பொருளை ஆழப்புதைத்து வைப்பது மடமையாகும். அவர்கள் பொருளின் தன்மை அறியாதவர்கள் ஆவார்கள். அறிவுடையவர்கள் பொருளைப் பெற்றபோதே அறப்பணிகள் செய்து ஆன்மலாபம் தேடிக் கொள்வார்கள்.

அன்றுஅறிவாம் என்னாது அறஞ்செய்க மற்றுஅது
பொன்றும்கால் பொன்றாத் துணை.

– திருக்குறள் – அறன் வலியுறுத்தல் – குறள் எண் 36.

செயற்பாலது ஒரும் அறனே; ஒருவற்கு
உயற்பால தோரும் பழி.

– திருக்குறள் – அறன் வலியுறுத்தல் – குறள் எண் 40.

கோழிக் கொடிய னடிபணி யாமற் குவலயத்தே
வாழக் கருது மதியிலி காளுங்கள் வல்வினைநோ
யூழிற் பெருவலி யுண்ணவொட் டாதுங்கள் **அத்தமெல்லாம்**
ஆழப் புதைத்துவைத் தால்வரு மோநும் மடிப்பிறகே.

– கந்தரலங்காரம் – கவி எண் 20.

இறையருளாலும், புண்ணியத்தாலும் பெற்ற செல்வத்தை பசித்த ஏழைகளுக்கு பசியாற்றாமல் ஆழப்புதைத்து மறைத்து வைத்தால் ஆசான் ஞானப்பண்டிதன் ஆசியை பெறமுடியுமா? பெற முடியாது.

நீலச் சிகண்டியி லேறும் பிரானெந்த நேரத்திலுங்
கோலக் குறத்தி யுடன்வரு வான்குரு நாதன்சொன்ன
சீலத்தை மெள்ளத் தெளிந்தறி வார்சிவ யோகிகளே
காலத்தை வென்றிருப்பார் **மரிப்பார்வெறுங் கர்மிகளே.**

– கந்தரலங்காரம் – கவி எண் 26.

ஞானிகள் அறப்பணி செய்து மரணமில்லா பெருவாழ்வு பெறுவார்கள். லோபிகளோ யாருக்கும் பொருளுதவி செய்யாமல் பல்வேறு நோய்களுக்கு உட்பட்டு மாண்டு போவார்கள். அறிவுடையவர்கள் அறப்பணி செய்து ஆசான் ஞானப்பண்டிதன் ஆசிபெற்று வீடுபேறு அடைவார்கள். லோபிகளுக்கு அந்த வாய்ப்பு கிடைக்காது.

மகான் ஔவையாரும் தனது நல்வழி என்னும் நூலில் உலகில் பல மதங்கள் உள்ளன. பல ஜாதிகள் உள்ளன. இவற்றையெல்லாம் விட்டுவிட்டு மகான் ஔவையார் ஜாதிகள் இரண்டு என்று கூறுகிறார்.

நெறிக்குட்பட்டு பொருள் சேர்த்து தானதருமங்கள் செய்யும் புண்ணியவான்கள் ஒரு ஜாதியென்றும் அவ்வாறு செய்யாமல் பிறருக்கு பொருளை தானம் தருமம் செய்யாது இறுகப் பற்றிக் கொள்ளும் லோபிகளை ஒரு ஜாதியாகவும் கூறுகிறார். தான தருமங்கள் செய்யும் புண்ணியவான்களை உயர்ந்த ஜாதி என்றும் (பெரியோர்) பிறருக்கு பொருள் கொடாத லோபிகளை கீழ்ஜாதி என்றும் அதாவது இழிகுலத்தோர் என்றும் கூறுகிறார்.

சாதி இரண்டொழிய வேறில்லை சாற்றுங்கால்
நீதி வழுவா நெறிமுறையில் – மேதினியில்
இட்டார் பெரியோர் இடாதார் இழிகுலத்தோர்
பட்டாங்கில் உள்ளபடி.

– ஔவையார் – நல்வழி – கவி எண் 2.

இதை அவர் மட்டும் சொல்லவில்லை என்றும், இக்கருத்தினை முன்னோர்களும் அவ்வாறே சொல்லியிருப்பதாகவும் கூறுகிறார்.

இருமலுஞ் சோகையும் ஈளையும் வெப்புந்
தருமஞ்செய் யாதவர் தம்பால தாகும்
உருமிடி நாக முரோணி கழலை
தருமஞ்செய் வார்பக்கல் தாழகி லாவே.

– திருமந்திரம் – அறஞ்செயான் திறம் – கவி எண் 263.

முன்செய்த நல்வினையாலும், இறையருளாலும் பெற்ற செல்வத்தை பசித்த ஏழைகளுக்கு பசியாற்றுவித்து தானதருமம் செய்யாதவர்களுக்கு இருமலும், இரத்தசோகையும், சளி சம்மந்தமான வியாதிகளும், கடுமையான ஜுரமும் வரும். அவ்வாறு இல்லாமல், தான்பெற்ற செல்வத்தை தர்மம் செய்பவர்களுக்கு திடீரென மரணம் நேருவதற்கு ஏதுவான விஷ ஜந்துக்களாலோ மற்றும் இயற்கை சீற்றங்களான இடி மின்னல்களாலோ, வயிற்றில் உண்டாகும் கட்டிகளினாலோ மரணம் சம்பவிக்காமல் காக்கும் என்கிறார் மகான் திருமூலர்.

எனவே நம்மிடம் யாசிப்பவர்களுக்கு தர்மம் செய்யாவிட்டால், பல்வேறு நோய்கள் வந்து துன்பப்பட நேரிடும். தயைசிந்தை உள்ளவர்கள் பசித்த ஏழைகளுக்கு அன்னதானம் செய்து வருவதால் அவர்களுக்கு எவ்வித நோயும் துன்பமும் அணுகாது. அவர்கள் நோயில்லா வாழ்வும், நீடிய ஆயுளும் பெற்று வாழ்வதோடு மட்டுமல்லாமல் இம்மைக்கும் மறுமைக்கும் ஆன்ம லாபம் பெற்றவர்களாவார்கள். ஆகவே மனிதனாக பிறந்தால் புண்ணியமும், அருள்பலமும் வேண்டும். புண்ணியத்தையும் அருள் பலத்தையும் விரும்புகின்றவர்கள் சுத்தசைவ உணவை மேற்கொண்டும் மாதம் ஒருவருக்கோ இருவருக்கோ அன்னதானம் செய்தும், காலையில் 10 நிமிடமும், மாலையில் 10 நிமிடமும் "ஓம் திருமூலதேவாய நம" என்றும், "ஓம் இராமலிங்க தேவாய நம" என்றும், "ஓம் அகத்தீசாய நம" என்றும், "ஓம் பதஞ்சலி தேவாய நம" என்றும் நாமஜெபமாகிய பூஜை செய்து வந்தால் முன்செய்த பாவங்கள் நீங்கி புண்ணியம் பெருகும். உடல் ஆரோக்கியமும் நீடிய ஆயுளும் உண்டாகும். பொல்லாத வறுமை நீங்கி செல்வநிலை பெருகும். பிறருக்கு அதாவது பசித்த ஏழைகளுக்கு பசியாற்ற வேண்டும் என்ற எண்ணமும் உண்டாகும். பசித்த ஏழைகளுக்கு பசியாற்றுவிப்பதே உண்மை ஆன்மீகமாகும். இதுவே பிறவித்துன்பத்தை தீர்ப்பதற்கு உபாயமும் ஆகும்.

இன்பம் இடரென் றிரண்டுற வைத்தது
முன்பவர் செய்கையி னாலே முடிந்தது
இன்பம் அதுகண்டும் ஈகிலாப் பேதைகள்
அன்பிலார் சிந்தை அறம்அறி யாரே.

– திருமந்திரம் – அறஞ்செயான் திறம் – கவி எண் 267.

ஒரு சிலர் சகல செல்வ வளம் பெற்று உடல் ஆரோக்கியமும் நீடிய ஆயுளும் பெற்று புகழோடு வாழ்கிறார்கள். சிலர் பொல்லாத வறுமையில் உள்ள குடும்பத்தில் பிறந்து வாழ்நாள் முழுதும், வறுமையில் வாடுகிறார்கள். அடுத்த நேரம் உணவிற்கு என்ன செய்வோம் என்று ஏங்குகிறார்கள். தங்குவதற்கு வீடும் இருக்காது. கட்டிய உடை தவிர மாற்று உடைக்கு என்ன

செய்வதென்று ஏங்குவார்கள். இங்ஙனம் இருப்பது அவரவர் முன்செய்த நல்வினை தீவினைக்கு ஏற்ப அமைவதாகும். முன் ஜென்மங்களில் பசித்த ஏழைகளுக்கு பசியாற்றுவித்து வாழ்ந்தவர்கள், செல்வநிலை பெற்று, வளமாக வாழ்கிறார்கள். ஆனால், முன் ஜென்மங்களில் கையில் பொருளிருந்தும் பசித்த ஏழைகளுக்கு பசியாற்றாமல் இருந்த லோபிகள் இந்த ஜென்மத்தில் பொல்லாத வறுமையில் உழன்று வாழ்கிறார்கள். எனவே இந்த ஜென்மத்தில் செய்யக்கூடிய புண்ணியங்கள், இந்த ஜென்மத்தில் பல நன்மைகளை தருவதோடு மட்டுமல்லாமல் அடுத்த ஜென்மத்திற்கும் துணையாக அமையும் என்பதை அறிய வேண்டும்.

அன்றுஅறிவாம் என்னாது அறஞ்செய்க மற்றுஅது
பொன்றுங்கால் பொன்றாத் துணை.

– திருக்குறள் – அறன் வலியுறுத்தல் – குறள் எண் 36.

இளைஞராக உள்ளவர், பிற்காலத்தில் பார்த்துக் கொள்ளலாம் என்று எண்ணாமல் அறம் செய்ய வேண்டும். அதுவே உடல் அழியும் காலத்தில் அழியாத் துணையாகும். – மு.வரதராசனார்.

ஆகவே பசித்த ஏழைகளுக்கு பசியாற்றுவித்து இம்மைக்கும் மறுமைக்கும், புண்ணியத்தை சேர்த்து கொள்ள வேண்டும். கையில் பொருளிருந்தும் தம்மிடம் யாசிப்பவர்களுக்கு இல்லையென்று சொல்வது பாவச் செயலாகும்.

18. கோள்சொல்லி குடும்பம் கலைத்தேனோ!

சமுதாயத்தில் ஒருவருக்கு ஒருவர் நட்புடன் பழகி வருவார்கள். ஏதேனும் ஒரு சந்தர்ப்பத்தில் அவர்களுக்குள் ஏற்படும் பகை காரணமாக பிரிந்து விடுவார்கள். பின்னாளில் பகை கொண்டவன் பிரிந்தவுடன் மீண்டும் மனம் விட்டு பேசுவதுபோல் நடித்து அன்பு காண்பித்து அந்நபருடன் உட்பகையுடன் சேருவார். அவ்வாறு சேர்ந்து பழகுவதின் நோக்கமே அக்குடும்பத்தினரை வஞ்சித்து பகை முடிக்க வேண்டுமென்ற உள்நோக்கத்துடன்தான் மீண்டும் சேர்வார். இதை அறியாது நல்ல மனதுடன் பழகுவார்கள். தக்க சமயத்தில் கணவன் இல்லாதபோது மனைவியிடம் கணவனை குறித்து, "உனது கணவனுக்கு வெளியில் வேறொரு பெண்ணுடன் தொடர்பு உள்ளது" என பொய்க்குற்றம் சுமத்தி நன்றாயிருந்த கணவன் மனைவியிடம் பிரிவினையை உண்டுபண்ணி விடுவார். அதேபோல மனைவி இல்லாத சமயத்தில் கணவனிடம் "உனது மனைவியின் நடத்தை சரியில்லை. நீ இல்லாத போது வேறொருவருடன் தொடர்பு உள்ளது" எனவும் பொய்குற்றம் சுமத்தி கோள் மூட்டுவார்.

இவ்வாறு கணவன் இல்லாதபோது மனைவியிடம் கணவனைப் பற்றியும், மனைவி இல்லாதபோது கணவனிடம் மனைவியைப் பற்றியும் கோள் சொல்லி தனது உட்பகையை தீர்த்து கொள்வார். இதனால் அக்குடும்பத்தில் சந்தேகம் தோன்றி இறுதியில் அந்த குடும்பமே சிதைந்து கலைந்துவிடும்.

இவ்வாறு செய்வது மிகப்பெரும் பாவச் செயலாகும். கணவன் இல்லாத போது மனைவியிடம் கணவனைப் பற்றி யாரேனும் குறை கூறினால் அதை நம்பி ஆராயாது உடனே தவறான முடிவு எடுக்க கூடாது. அதேபோல மனைவி இல்லாதபோது கணவனிடம் மனைவியைப் பற்றி குறை கூறினால் அதை நம்பி ஆராயாது உடனே தவறான முடிவு எடுக்க கூடாது. அவ்வாறின்றி சொல்பேச்சு அதாவது பிறர் கூறுவதைக் கேட்டு ஆராயாமல் முடிவெடுத்தால் அக்குடும்பம் கலைந்து விடும்.

நீக்கம் அறும் இருவர் நீங்கிப் புணர்ந்தாலும்
நோக்கின் அவர்பெருமை நொய்தாகும் – பூக்குழலாய்
நெல்லின் உமிசிறிது நீங்கிப் பழமைபோல்
புல்லினும் திண்மைநிலை போம்.

– துறைமங்கலம் சிவப்பிரகாச சுவாமிகள் – நன்னெறி – கவி எண் 5.

கடவுள் உலகில் பல தானியங்களை படைத்திருக்கிறான். அவற்றில் நெல்லும் ஒன்றாகும். நெல்லில் மேல்புறத்திலுள்ள உமி சிறிது நீங்கினாலும் அது மீண்டும் முளைக்காது. நீங்கிய உமியை சேர்த்து ஒட்டவைத்து பயிரிட்டாலும் மீண்டும் முளைக்காது. அதுபோல பகை கொண்டு பிரிந்தவர் மீண்டும் சேர்ந்து பழகினாலும் பகை கொள்வதற்கு முன், உள்ளது போல மனம் ஒத்த நட்பாக இருக்காது.

காதல் மனையாளும் காதலனும் மாறின்றித்
தீதில் ஒருகருமம் செய்பவே – ஓதுகலை
எண்ணிரண்டும் ஒன்றுமதி என்முகத்தாய் நோக்கல்தான்
கண்ணிரண்டும் ஒன்றையே காண்.

– துறைமங்கலம் சிவப்பிரகாச சுவாமிகள் – நன்னெறி – கவி எண் 6.

கடவுள் மனிதர்களை படைக்கும் போது இரண்டு கண்களோடு படைத்துள்ளான். கண்கள் இரண்டாக காண்பது ஒரே காட்சியைத்தான். அதுபோல கணவன் மனைவி என்பவர் இருவராயினும் இருவரும் கருத்தில் ஒருமித்து இருக்க வேண்டும். அதுவே வாழ்க்கைக்கு உகந்ததாகும். கணவனுக்கு மனைவிமேல் சந்தேகம் வந்தாலும், மனைவிக்கு கணவன் மேல் சந்தேகம் வந்தாலும் இருவரும் ஒருவருக்கு ஒருவர் மனம்விட்டு பேசி தங்களுக்குள் பிரச்சினையை தீர்த்துக் கொள்வது என்பது அவர்களுக்கும்

நல்லது, அவர்கள் குடும்பத்தினருக்கும் நன்மை பயக்கும். அவ்வாறன்றி சந்தேகத்தை மனதில் வளரவிட்டால் அது குடும்பத்தை குலைத்துவிடும்.

வாள்போல் பகைவரை அஞ்சற்க; அஞ்சுக
கேள்போல் பகைவர் தொடர்பு.

– திருக்குறள் – உட்பகை – குறள் எண் 882.

வாளைப்போல் வெளிப்படையான பகைவர்க்கு அஞ்ச வேண்டியதில்லை. ஆனால் உறவினரைப்போல இருந்து உட்பகை கொண்டவரின் தொடர்புக்கு அஞ்ச வேண்டும்.

– மு.வரதராசனார்.

மனம் போன போக்கெல்லாம் போக வேண்டாம்
மாற்றானை உறவென்று நம்ப வேண்டாம்
தனம்தேடி உண்ணாமல் புதைக்க வேண்டாம்
தருமத்தை ஒரு நாளும் மறக்க வேண்டாம்
சினம்தேடி அல்லலையும் தேட வேண்டாம்
சினந்திருந்தார் வாசல்வழிச் சேரல் வேண்டாம்
வளம்தேடும் குறவருடை வள்ளி பங்கன்
மயிலேறும் பெருமாளை வாழ்த்தாய் நெஞ்சே!

– உலகநாதர் – உலகநீதி – கவி எண் 3.

சீர்இடம் காணின் எறிதற்குப் பட்டடை
நேரா நிரந்தவர் நட்பு.

– திருக்குறள் – கூடா நட்பு – குறள் எண் 821.

அகத்தே பொருந்தாமல் புறத்தில் பொருந்தி நடப்பவரின் நட்பு, தக்க இடம் கண்டபோது எறிவதற்கு உரிய பட்டடையாகும். – மு.வரதராசனார்.

சொல்வணக்கம் ஒன்னார்கண் கொள்ளற்க வில்வணக்கம்
தீங்கு குறித்தமை யான்.

– திருக்குறள் – கூடாநட்பு – குறள் எண் 827.

தொழுதகை உள்ளும் படைஒடுங்கும் ஒன்னார்
அழுதகண் ணீரும் அனைத்து.

– திருக்குறள் – கூடா நட்பு – குறள் எண் 828.

கோள் சொல்லுதல் என்பது புறங்கூறுவதாகும். அகம் கூறுவது என்பது உண்மையை சொல்லுவதாகும். புறங்கூறுவது என்பது பொய் சொல்லுவதாகும். அதாவது உண்மைக்கு புறம்பாக கூறுவதாகும். பிறரைப்பற்றி புறங்கூறி அதாவது கோள் சொல்லி குடும்பத்தை கலைப்பது பாவச்செயலாகும்.

19. நட்டாற்றில் கையை நழுவ விட்டேனோ!

நண்பர்கள் ஒருவருக்கு ஒருவர் நட்புடன் பழகி வருவார்கள். அவ்வாறு பழகும்போது அவர்களுக்குள் அவ்வப்போது சிறுசிறு பிரச்சினைகள் வருவது இயல்பே. அவ்வாறு பிரச்சினைகள் வரும்போது ஒரு சிலர் பெருந்தன்மையோடு நண்பர் செய்த இடையூறை மன்னித்து மறந்து விடுவார்கள்.

ஆனால் ஒரு சிலரோ உள்மனதில் வைத்துக் கொண்டு, பகை கொண்டு காலம் வரும் வரை காத்திருந்து பகை முடிக்க வேண்டும் என்று வஞ்சனையோடு காத்திருப்பார்கள். அவ்வாறு வஞ்சனையோடு காத்திருக்கும் நண்பர் எப்பொழுதும் போலவே பெருந்தன்மையுடைய நண்பருடன் சிரித்து பேசி வழக்கம் போல பழகுவார். ஆனால் உள்மனதில் உட்பகை இருக்கும்.

பெருந்தன்மையான நண்பர் உட்பகையுடன் பழகும் நண்பரிடம் தனது மகள் திருமணம் குறித்து பேசும்போது தனக்கு ஏற்பட்டுள்ள பணநெருக்கடியை கூறி தனக்கு உதவும்படி கேட்டுக்கொள்வார். அதற்கு உட்பகையுடன் உள்ள நண்பரும் தக்கநேரம் வந்துவிட்டது பகைமுடிக்க வேண்டும் என்ற உள்நோக்குடன் கையிலுள்ள பணத்தை வைத்து கல்யாண வேலைகளை ஆரம்பி, பின்னால் நான் கண்டிப்பாக உதவி செய்கிறேன் என உறுதி கூறுவார்.

அந்நண்பனோ அவரது வார்த்தையை நம்பி தனது மகளின் திருமண வேலைகளை துவங்கி, நிச்சயம் செய்து, தன்னிடம் உள்ள பொருளைக் கொண்டு நடத்தி விடுவார். திருமணத்திற்கு முன்னரே, நிச்சயம் செய்த பின்; பணநெருக்கடி ஏற்பட்டு தனது நண்பரிடம், உன் வார்த்தையை நம்பி திருமண வேலைகளை துவங்கி விட்டேன். கையில் பணம் இல்லை. நீ கொடுத்து உதவுவதாக சொன்ன பணத்தை கொடுத்தால் திருமணத்தை நடத்தி முடிப்பேன் என கூறி, நண்பரிடம் உதவி கேட்பார்.

ஆனால் அதற்கு உட்பகையுள்ள நண்பரோ தற்போது என்னிடம் பணம் இல்லை, இருந்த பணமெல்லாம் வேறொருவரிடம் கொடுத்து விட்டேன். அவர் திருப்பி தரவில்லை என கூறி பணம் தர மறுப்பார். ஏமாற்றப்பட்ட நண்பரோ திருமண வேலைகளை நிறுத்த முடியாமலும், மேற்கொண்டு நடத்த முடியாமலும் திண்டாடுவார். நட்டாற்றில் கையை நழுவ விட்டதுபோல் தடுமாறுவார். திருமணத்திற்கு ஒரு வார காலத்திற்கு முன் கையில் பணம் இல்லையென்றால் அத்திருமணம் தடைபட்டு போகும். இவ்வாறு பழகும் நண்பருக்கு உறுதி கொடுத்துவிட்டு பின் நம்பிக்கை துரோகம் செய்வது பாவச் செயலாகும்.

இன்னும் ஒருசிலர் கிராமத்தில் விவசாயம் செய்து வருவார்கள். அவ்வாறு விவசாயம் செய்து வரும்போது கோடைகாலத்தில் நெற்பயிர் பால் பிடிக்கும் நேரத்தில் தண்ணீர் இல்லாமல் போய்விடும். அதைக்கண்ட விவசாயி தன்

நண்பனிடம் சென்று, கிணறை மேலும் வெட்டினால் போதிய தண்ணீர் கிடைக்கும். எனவே பணம் கொடுத்து உதவி செய்தால் என்னுடைய பயிர்களை காப்பாற்ற முடியும் என கேட்பார். உட்பகையுடன் உள்ள நண்பனோ தற்போது பணமில்லை அவசரத்திற்கு யாரிடமாவது நூற்றுக்கு இரண்டு அல்லது மூன்று ரூபாய் வட்டிக்கு வாங்கி உடனடியாக கிணற்றை வெட்டி விவசாயத்தை பார். நான் பிறகு பணம் தருகிறேன் என கூறுவார்.

அதை நம்பி விவசாயியும் அவசரத்திற்கு வட்டிக்கு கடன் வாங்கி கிணறு வெட்டி விவசாயத்தை மேற்கொள்வார். ஆனால் பணம் தருகிறேன் என்று சொன்ன நண்பனோ பணம் கொடுக்காது ஏமாற்றி விடுவான். இதனால் அந்த விவசாயி வட்டிக்கு பணம் வாங்கியவர்களிடம் வட்டிகட்டி வட்டிகட்டி இறுதியில் தனது நிலத்தை விற்கும்படியான சூழ்நிலை ஏற்பட்டு விடும். இவ்வாறு நண்பர்களிடம் தக்க சமயத்தில் பணம் தருவதாக கூறி பின் கொடுக்காமலிருப்பது பெரும் பாவச் செயலாகும்.

இன்னும் ஒரு சிலர் கிராமத்தில் தனது மகன் அல்லது மகள் பள்ளி இறுதிப்படிப்பை முடித்து விட்டு கல்லூரியில் படிக்க வைக்க ஆசைப்படுவார்கள். அவ்வாறு ஆசைப்படுபவர் தனது நண்பனிடம் சென்று எனது மகன் கல்லூரியில் சென்று படிக்க வேண்டும். வெளியூரில் தான் மேற்படிப்பு உள்ளது. நீ உதவி செய்தால் நான் எனது மகனை படிக்க வைக்கிறேன் என உதவி கேட்பார்.

உட்பகையுள்ள நண்பனும், உன்னிடமுள்ள பணத்தைக் கொண்டு அவனை கல்லூரியில் சேர்த்து விடு. அதன் பின் உள்ள, விடுதி (Hostel) மற்றும் பருவ கட்டணங்கள்(Term Fees) அவ்வப்போது ஏற்படும் செலவுகளை நான் பார்த்துக் கொள்கிறேன் என உறுதி தருவார். இவரும் அதை நம்பி தனது மகனை அல்லது மகளை தொலைவில் உள்ள நகரத்தில் உள்ள கல்லூரியில் விடுதியில் தங்கி படிக்க வைப்பார்.

படிக்கும் போது தன்னிடம் உள்ள பொருளைக் கொண்டு, அவரால் ஒரு சில மாதம் தான் மகனுக்கு விடுதிக்கும், படிப்பிற்கும் பணம் கட்ட முடியும். பணம் இல்லாத சூழலில் நண்பரிடம் கேட்கும்போது தன்னிடம் பணம் இல்லை என உட்பகையுடன் கூறி மறுத்துவிடுவார். இதனால் அவரது மகன் மேற்கொண்டு படிக்க முடியாமல் போய்விடுவதோடு, பொருளையும் இழந்து தவிப்பார். இதுபோன்ற நம்பிக்கை துரோகம் பாவச்செயலாகும்.

ஒரு சிலர் தனது மகன் அல்லது மகள் திருமணத்திற்கு பொருள் சேர்த்து வைத்திருப்பார்கள். அவனுடன் பழகும் நண்பன் உன்னிடம் சும்மாயிருக்கும் பணத்தை கொடு, தொழில் செய்கிறேன் மாதாமாதம் வட்டி தருகிறேன், மகன் அல்லது மகள் திருமணத்தின் போது கண்டிப்பாக மொத்த

பணத்தையும் திருப்பி தந்து திருமணம் தடைபடாமல் பார்த்து கொள்கிறேன் என கூறி, பொருளை பெற்று வட்டியும் கொடுத்து வருவான்.

மகன் அல்லது மகள் திருமணம் நிச்சயித்து, நண்பனிடம்தான் பணம் உள்ளதே, அதை வைத்து திருமணத்தை நடத்தி விடலாம் என எண்ணி திருமணத்தை நடத்த ஏற்பாடு செய்வார்கள். தக்க சமயத்தில் பணம் தேவைப்படும் போது பணம் இல்லை வட்டிமட்டும்தான் தரமுடியும், வேறொன்றும் செய்ய இயலாது என உட்பகையுடன் கூறி கையை விரித்து விடுவான். இதனால் நடைபெறவிருந்த திருமணம் தடைபட்டு போய்விடும். இதுபோன்று தனக்கு, தக்க சமயத்தில் உதவிசெய்த நண்பனுக்கு தேவையானபோது அவனது பொருளை திருப்பி தராமல் ஏமாற்றுவதும் நட்டாற்றில் கையை நழுவவிடுவது போலாகும். இதுவும் பாவச் செயலாகும்.

இன்னும் ஒரு சிலர் மளிகை அல்லது துணிக்கடை வைக்க எண்ணுவார்கள். அவர்கள் தன்னிடம் உள்ள பொருளை வைத்து கடை நடத்த முடியாததால் நண்பனிடம் பொருளுதவி கேட்பான். ஏற்கனவே உட்பகையுடன் இருக்கும் நண்பன் இது தக்க சமயம் இவனை பகை முடிக்க, என்று எண்ணி, உன்னிடம் உள்ள பணத்தைக் கொண்டு கடை முன்பணம் (அட்வான்ஸ்) மற்றும் தளவாட சாமான்களை வாங்கி ஆரம்பி, மற்ற சரக்குகள் வாங்க நான் பணம் தருகிறேன் என உறுதி கூறுவான். இவனும் அதை நம்பி கடை பிடித்து மேசை, நாற்காலி, அடுக்குகள் போன்ற உட்கட்டமைப்பு தளவாட சாமான்களை வாங்கி கடையை தொடங்க ஏற்பாடு செய்து விடுவான்.

கடை நடத்த சரக்குகள் தேவை என நண்பனிடம் பணஉதவி கேட்டால் அவனோ என்னிடம் பணம் இல்லை என கூறி வஞ்சனையோடு செயல்படுவான். கடை துவங்கிய நண்பனோ கைப்பொருளையும் இழந்து, மேற்கொண்டு வியாபாரம் செய்ய முடியாமலும் போய்விடுவான். இது போன்று தன்னை நம்பிய நண்பனை தக்க சமயத்தில் உதவாது ஏமாற்றுவதும் நட்டாற்றில் கையை நழுவ விடுவது போலாகும். இது பாவச் செயலாகும்.

நன்றி மறப்பது நன்றன்று; நன்றல்லது
அன்றே மறப்பது நன்று.

– திருக்குறள் – செய்ந்நன்றி அறிதல் – குறள் எண் 108.

கெடுங்காலைக் கைவிடுவார் கேண்மை அடும்காலை
உள்ளினும் உள்ளம் சுடும்.

– திருக்குறள் – நட்பு ஆராய்தல் – குறள் எண் 799.

சீர்இடம் காணின் எறிதற்குப் பட்டடை
நேரா நிரந்தவர் நட்பு.

– திருக்குறள் – கூடா நட்பு – குறள் எண் 821.

வாள்போல் பகைவரை அஞ்சற்க; அஞ்சுக
கேள்போல் பகைவர் தொடர்பு.

– திருக்குறள் – உட்பகை – குறள் எண் 882.

எள்பகவு அன்ன சிறுமைத்தே ஆயினும்
உட்பகை உள்ளதாம் கேடு.

– திருக்குறள் – உட்பகை – குறள் எண் 889.

கற்பிளவோ(டு) ஒப்பர் கயவர் கடுஞ்சினத்துப்
பொற்பிளவோ(டு) ஒப்பாரும் போல்வரே விற்பிடித்து
நீர்கிழிய எய்த வடுபோல மாறுமே
சீரொழுகு சான்றோர் சினம்.

– மகான் ஔவையார் – மூதுரை – கவி எண் 23.

நீரில் நீந்த தெரிந்த நண்பனிடம், நீரில் நீந்த தெரியாத நண்பன் ஆற்றைக் கடக்க வேண்டும் உதவி செய் என உதவி கேட்பான். நீந்த தெரிந்தவனும் உதவுவான். அவனது வார்த்தையை நம்பி, நீந்த தெரியாத நண்பன், அவன் துணையுடன் செல்லும் போது, நடு ஆற்றில் வரும் போது நீந்த தெரிந்த நண்பன் உட்பகை காரணமாக, நீந்த தெரியாத நண்பனின் கையை விட்டு விடுவான். இதனால் அவன் நீரில் நீந்த முடியாமல் இறந்து விடுவான்.

இது நட்டாற்றில் கையை நழுவ விடுவதாகும். அது போல தன்னை நம்பிய நண்பனிடம், உட்பகை காரணமாக தக்க சந்தர்ப்பத்தில் கைவிடுவது என்பது நீந்த தெரியாதவனை நடு ஆற்றில் கைவிடுவது போலாகும். இது மிகப்பெரும் பாவச் செயலாகும்.

20. கலங்கி ஒளிந்தோரைக் காட்டிக் கொடுத்தேனோ!

சில கிராமங்களில் இனத்தின் பெயரால் இனக்கலவரங்கள் நடக்கும். அவ்வாறு நடக்கும் இனக்கலவரத்தின் போது அதிகம் பாதிக்கப்படுவது அக்கிராமத்தில் உள்ள குடிசைப்பகுதிகள்தான். இனக்கலவரத்தின்போது குடிசையில் குடும்பத்தினரும், குழந்தைகளும், பெரியவர்களும் இருக்கும் போதே குடிசைக்கு தீ வைத்து கொளுத்தி விடுவதுண்டு. அவ்வாறு குடிசை தீப்பிடித்து அந்த குடிசையில் உள்ளவர்கள் தீயிலிருந்து தப்பிக்க முடியாமல் உடல் கருகி மிகுந்த வேதனையோடு இறந்து விடுவார்கள்.

மேலும் சில இடங்களில் ஊர் பொதுவில் உள்ள கோயில்களில் ஒரு குறிப்பிட்ட இனத்தினருக்குத்தான் முதல் மரியாதை, பரிவட்டம் கட்டுதல் போன்ற நிகழ்ச்சிகள் நடத்தி அவர்களுக்கு அவ்வாலயத்தில் முதலிடம் தந்து

பிறரை புறக்கணித்து விடுவதும் உண்டு. அதனாலும் அவர்களுக்குள் கலவரம் ஏற்பட்டு அதனால் பலர் இறப்பதும் உண்டு. மேலும் ஆலயத்தில் ஒரு குறிப்பிட்ட இனத்தவர் வழிபட தடை விதிப்பதும், அதனால் கலவரம் ஏற்படுவதும் உண்டு. அதனாலும் ஒரு சில உயிர்கள் பலியாவது உண்டு. இவ்வாறு நிகழ்ச்சிகள் ஆங்காங்கே நடைபெறுவதாக கேள்விபடுகிறோம். அவ்வாறு நடக்கும் இனக்கலவரங்கள் போன்ற கலவரத்தின் போது அவ்வூருக்கே சம்பந்தமில்லாத, அவ்வூருக்கு வந்திருக்கும் வெளியூர்காரர்களும் கலவரத்தினால் உயிரிழப்பதும் உண்டு.

இது போன்று கலவரங்கள் நடக்கும் சமயங்களில் ஒருவரை ஒருவர் தாக்கி அழித்து கொள்வார்கள். அச்சமயங்களில் ஒரு இனத்தை சேர்ந்தவன் மற்றொரு இனத்தை சேர்ந்தவர்கள் வசிக்கும் பகுதிக்கு செல்வது உண்டு. அவ்வாறு சென்றபோது அத்தெருவைச் சார்ந்தவர்கள் அவனை இனம் கண்டு பிடித்து விரட்டினார்கள். அவனோ உயிருக்கு பயந்து அக்கும்பலிலிருந்து தப்பிக்கும் பொருட்டு அத்தெருவில் உள்ள ஒரு வீட்டில் புகுந்து விட்டான். அவ்வீட்டின் உரிமையாளரிடம் என்னை காப்பாற்றுங்கள் என தஞ்சம் புகுந்தான்.

வீட்டின் உரிமையாளர் வேற்றினத்தை சேர்ந்தவராக இருப்பினும் அவனது பதற்றத்தை கண்டு அவனை சமாதானப்படுத்தி பயப்படாதே! எனக்கூறி தனது வீட்டின் பூஜையறையில் அவனை வைத்து பூட்டிவிட்டார். வீட்டின் உரிமையாளரிடம் துரத்தி வந்தவர்கள் இங்கு வேறு இனத்தை சேர்ந்த ஒருவன் ஒடி வந்து உங்கள் வீட்டில் புகுந்ததை பார்த்தோம், உள்ளே இருக்கிறானா என மிரட்டியபோது அப்படி யாரும் இல்லை என கூறி அவர்களை அனுப்பிவிட்டு இரவு வரை காத்திருந்து ஊரில் இரவு பன்னிரெண்டு அல்லது ஒரு மணிக்கு மேல் மக்கள் நடமாட்டம் இல்லாத நேரம் பார்த்து அவனை பக்கத்து ஊரிலிருக்கும் அவனது உறவினர் வீட்டில் அவனை கொண்டு சேர்த்து பாதுகாக்கும்படி கூறி ஒப்படைத்து விட்டு கலவரம் முடிந்தவுடன் அவனை அனுப்பிவிடுங்கள் எனக்கூறி தனது சொந்த ஊருக்கு திரும்பினார்.

இவ்வாறு தன்னை நாடி வந்து தஞ்சம் புகுந்து காப்பாற்றும்படி அபயம் கேட்ட அந்த மாற்று இனத்தவனை உயிருக்கு பயப்படாமல் காப்பாற்றியது அவர் செய்த மிகப்பெரும் புண்ணியச் செயலாகும். கலங்கி ஒளிந்தவரை காட்டிக் கொடுக்காமல் இருப்பது புண்ணியச் செயலாகும். அவ்வாறு செய்யாமல் தனது உயிருக்கு இடையூறு வரும் எனப் பயந்து துரத்தி வந்தவர்களிடம் ஒப்படைத்திருந்தால் அவனை கொன்று இருப்பார்கள். அவன் இறந்து போவதற்கு இவன் காரணமானதால் இவன் பாவியாகி விடுவான்.

அதோடு மட்டுமல்லாது அவனை துரத்தி வந்தவர்கள் அவனை கொல்வதால் அவர்களுக்கும் கொலை செய்த பாவம் வந்து சேரும்.

எனவே கலங்கி ஒளிந்தோரை காட்டிக் கொடுக்கக் கூடாது. தன்னை நாடி வந்தவரைக் காட்டிக் கொடுக்காமல் அபயம் அளித்ததால் அவன் உயிரும் தப்பியது. வீட்டின் உரிமையாளருக்கும் பாவம் சேராது. துரத்தி வந்தவர்களும் கொலை பாதக பாவத்திலிருந்து தப்பித்தார்கள். இவ்வாறு ஒருவனது செயலால் அனைவரும் பாவியாகாது காப்பாற்றியதால் காட்டி கொடுக்காமலிருப்பது மிகப்பெரும் புண்ணியச் செயலாகும்.

21. கற்பழிந்தவளை கலந்திருந்தேனோ!

ஒருவன் திருமணம் செய்து மனைவியும் இரண்டு பிள்ளைகளுடனும் வாழ்ந்து வந்தான். அவ்வாறு வாழ்ந்து வரும் காலத்தில் அவ்வூரில் உள்ள தாசியின் அழகில் மயங்கி அவள்மேல் மோகம் கொண்டு அத்தாசியிடம் தான் சம்பாதித்த பொருள்களை எல்லாம் கொடுத்து அவளுடனேயே தங்கி விட்டான். அவனது மனைவியும், பிள்ளைகளும் வீட்டின் தலைவன் இல்லாமல் கஷ்டப்பட்டார்கள். மனைவியோ குழந்தைகளை காப்பாற்றும் பொருட்டு கூலி வேலைகள் செய்து காப்பாற்றி வந்தாள். ஆயினும் நாளடைவில் அவளால் குடும்பத்தை காப்பாற்ற இயலாமல் மிகுந்த சிரமத்துடன் ஏழ்மை வயப்பட்டு வீடிழந்து ஒரு குடிசையில் வசித்து வந்தாள்.

தாசியின் மேல் கொண்ட மோகத்தால் தன் கைப்பொருளனைத்தும் இழந்ததோடு தான் வாழ்ந்த வீட்டினையும் விற்று தாசிக்கு கொடுத்து விட்டான். இனியும் கொடுப்பதற்கு ஒன்றுமில்லை என்ற சூழ்நிலையில் தாசியினால் புறக்கணிக்கப்பட்டு துரத்தப்பட்டபின் ஆதரவற்ற அவன் தனது மனைவியை நாடிவரும் போது அவர்கள் வீடிழந்து ஒரு குடிசையில் மிகுந்த வறுமையில் வாழ்ந்து வருவது தெரிந்து அவர்களோடு சேர்ந்து தானும் கொடுமையான வறுமையில் வீழ்ந்து கஷ்டப்பட்டான். இச்சூழ்நிலை கற்பழிந்தவளை கலந்திருந்ததால் வந்த கேடாகும். அவ்வாறு தன்னையும் தனது குடும்பத்தையும் பாதிக்கும் இச்செயல் பெரும் பாவச்செயலாகும்.

அம்பி துணையாக ஆறிழிந்த ஆறொக்கும்
கொம்மை முலைபகர்வார் கொண்டாட்டம் – இம்மை
மறுமைக்கும் நன்றன்று மாநிதியம் போக்கி
வெறுமைக்கு வித்தாய் விடும்.

– நல்வழி – கவி எண் 20.

இல்லறம் என்ற ஆற்றைக் கடக்க வேண்டுமெனில் நல்ல வாழ்க்கை துணைவியுடன் கடக்க வேண்டும். அவ்வாறன்றி விலைமகளிர் தொடர்பு

கொண்டால் அது பல இன்னல்களை தரும். பொருள் ஒன்றையே குறிக்கோளாகக் கொண்ட விலைமகளிருடன் தொடர்பு கொண்டால் அது அவர்கள் கைப்பொருளை இழப்பதோடு மட்டுமன்றி இப்பிறப்பில் பெறும் ஆன்ம லாபத்தை இழப்பதோடு மட்டுமல்லாது மறுபிறப்பிலும் ஆன்மலாபத்தை இழக்க நேரிடும் என்பதை உணர வேண்டும். எனவே நல்ல மனைவியின் துணை கொண்டு இல்லறமாகிய ஆற்றைக்கடக்க வேண்டுமேயன்றி விலை மகளிருடன் தொடர்பு கொள்ளக்கூடாது.

பயன்தூக்கிப் பண்புஉரைக்கும் பண்பில் மகளிர்
நயன்தூக்கி நள்ளா விடல்.

– திருக்குறள் – வரைவில் மகளிர் – குறள் எண் 912.

கிடைக்கக்கூடிய பயனை அளந்து பார்த்து, அதற்கு ஏற்றவாறு இனியசொல் கூறுகின்ற பண்பற்ற பொது மகளிரின் இன்பத்தை ஆராய்ந்து பொருந்தாமல் விட வேண்டும்.

– மு.வரதராசனார்.

உ௨. காவல் கொண்டிருந்த கன்னியை அழித்தேனோ!

வீட்டில் வயதிற்கு வந்த பெண் அதாவது பருவமடைந்த பெண்களை வீட்டிலேயே வைத்து பெற்றோர்கள் பாதுகாப்பாக வைத்திருப்பது உண்டு. அதுபோல் ஒரு வீட்டில் பூப்பெய்தி பருவமடைந்த பெண்ணை பெற்றோர்கள் மிகுந்த ஜாக்கிரதையுடன் பாதுகாத்து வந்தார்கள். அண்டை வீட்டிலுள்ள வாலிபனொருவன் அப்பெண்ணின் அழகில் மயங்கி மோகம் கொண்டு அவளை அடைய தக்க சமயத்தை எதிர்பார்த்து காத்திருந்தான்.

ஒரு சமயம் வீட்டில் உள்ளோர் அனைவரும் வெளியே செல்லும் ஒரு சந்தர்ப்பம் வந்தது. அதுசமயம் பெற்றோர்கள் "எங்களுக்கு வயலில் வேலை இருக்கிறது. நாங்கள் வயலிற்கு சென்று வருகிறோம். அண்ணனும் பக்கத்து நகரத்தில் நமது தோட்டத்தில் விளைந்த காய்கறிகளை விற்று வருவான். எனவே நீ வீட்டில் தனியாக இருக்க நேரிடும், ஜாக்கிரதையாக இரு, உள்தாழ் போட்டு விட்டு வீட்டினுள் பாதுகாப்பாக இருக்க வேண்டும்" எனக்கூறி பெண்ணை பாதுகாப்பாக இருக்கச் சொல்லி சென்று விட்டார்கள்.

இதை கவனித்து கொண்டிருந்த அந்த மோகம் கொண்ட வாலிபன், இதுவே தக்க சமயம் பெண் தனியாக இருக்கிறாள் என எண்ணி கதவை தட்டினான். அந்த பெண்ணும் தனது சகோதரன்தான் நகரத்திற்கு சென்று திரும்பி வந்து விட்டான் போலும் என்றெண்ணி கதவைத் திறந்தாள். ஆனால் திறந்தவுடன் பக்கத்து வீட்டு வாலிபன் நிற்பதை பார்த்ததும் வீறிட்டு அலற

முயற்சித்தாள். ஆனால் அதற்கு முன்னமே அவ்வாலிபன் கத்தியைக் காட்டி கத்தினால் உன்னை குத்திவிடுவேன் என மிரட்டியதால் அப்பெண்ணும் கதவை திறந்து விட்டாள்.

அச்சந்தர்ப்பத்தை அவ்வாலிபன் பயன்படுத்தி அப்பெண்ணை பலவந்தமாக கற்பழித்து விட்டான். வெளியே சென்றவர்கள் வீடு திரும்பியபோது மகளிடம் உள்ள மாற்றத்தைக் கண்டு தாய் விசாரித்தபோது அவளும் நடந்ததை கூறினாள். அவர்கள் மோசம் போய் விட்டோமே, வெளியே தெரிந்தால் நமது குடும்ப கௌரவம் என்னாவது என்று எண்ணி அப்பிரச்சனையை வெளியே சொல்லாமல் தங்களுக்குள்ளேயே இரகசியமாக வைத்துக் கொண்டார்கள். ஆனாலும் மூன்று மாதங்களுக்கு பிறகு அந்தப்பெண் கருவுற்று இருப்பது தெரிய வந்ததும் ஊருக்கு தெரிந்தால் அவமானமாகிவிடும் என்றெண்ணி அப்பெண் தற்கொலை செய்து கொண்டாள்.

அதனால் மோகவயப்பட்டு காவல் கொண்ட பெண்ணின் கற்பை அழித்தவன் கொலை பாவியாகி விட்டான். சாதாரணமாக கொலை செய்தால் ஓருயிர்தான் போகும். ஆனால் இவனது செயலால் தாயின் உயிரும், அவள் வயிற்றில் வளர்ந்துள்ள கருவின் உயிரும் சேர்ந்து இரண்டு உயிரும் போனதால் இரண்டு கொலைகள் செய்த மாபாவியாகி விட்டான். எனவே காவல் கொண்டிருந்த கன்னியின் கற்பழிப்பது மிகப் பெரும் பாவச்செயலாகும்.

23. கணவன்வழி நிற்போரைக் கற்பழித்தேனோ!

கிராமங்களிலும் நகரங்களிலும் வசதி படைத்த குடும்பத்தினர்கள் இருப்பார்கள். அவர்கள் வீட்டில் கணவன் மனைவி இருவரும் ஒருவருக்கொருவர் மிக அன்யோன்யமாக வாழ்ந்து வருவார்கள். கணவன், தனது மனைவியானவள் இறைவனால் கொடுக்கப்பட்ட வரப்பிரசாதமாக எண்ணி மிகுந்த அன்பு செலுத்தி வருவான். மனைவியும் தனது கணவனை இறைவனால் கொடுக்கப்பட்ட வரப்பிரசாதமாக எண்ணி அன்பு செலுத்தி வாழ்ந்து வருவாள்.

மனைவியானவள் தனது கணவனுக்கு என்னென்ன பிடிக்கும்? என்பதை அறிந்து அவனது தேவைகளை பூர்த்தி செய்து அவனுக்கு பிடித்தமான உணவு வகைகளை சமைத்து, அவன் உண்பதை பார்த்து இரசித்து திருப்திபடுவாள். அதுமட்டுமல்லாது அவள் தனது வீட்டினை நாடிவரும் விருந்தினரையும் நன்கு உபசரித்து மகிழ்வாள். இவ்வாறு நன்றாக

வாழ்ந்து வரும் குடும்பத்தில் ஒரு நாள் ஒரு கயவன், கணவன் வீட்டிலில்லாத நேரத்தில் கதவை தட்டினான். உள்ளேயிருந்த மனைவியோ யாரோ விருந்தினர் தான் வந்துள்ளார்கள் என எண்ணி கதவைத் திறந்தாள். கதவைத் தட்டிய கயவனோ, கையில் கத்தியைக் காட்டி அப்பெண்ணை மிரட்டி அவளை பலாத்காரமாக கற்பழித்து விட்டான். கற்பழிக்கப்பட்ட அம்மனைவியானவள் இவ்வாறு நடந்து விட்டதே என்ன செய்வேன்? எப்படிச் சொல்வேன்? என மனதிற்குள்ளாகவே நொந்து நொந்து நோய்வாய்ப்பட்டு ஒரு சில நாட்களில் மனவேதனை தாங்காது இறந்து விட்டாள்.

தெய்வம் தொழாஅள் கொழுநன் தொழுதெழுவாள்
பெய்எனப் பெய்யும் மழை.

– திருக்குறள் – வாழ்க்கைத் துணைநலம் – குறள் எண் 55.

கணவனையே தெய்வமாக போற்றி வாழும் பெண்களை கற்பழிப்பது பாவமாகும்.

இதை அறியாத கணவனோ எனது அன்பான மனைவி இறந்து விட்டாளே இனி நான் எப்படி வாழ்வேன்? என அவனும் மனவேதனையால் நோய்வாய்ப்பட்டு இறந்து விட்டான். பொல்லாத கயவனின், காமுகனின் அந்த கொடூரமான செயலால் நன்றாய் வாழ்ந்த குடும்பத்தில் உள்ள கணவன் மனைவி இருவரும் இறக்க நேரிட்டது. இப்படி மாபாதகச் செயலை செய்த அக்கயவன் ஒரு சில காலத்திற்குள்ளாகவே கடுமையான நோய்வாய்ப்பட்டு படுத்த படுக்கையாக கட்டிலில் கிடந்து நாற்றமெடுத்து இறந்து போவதோடு அல்லாமல் அடுத்த பிறவியிலும் சொறிபிடித்த நாயாக பிறப்பான். எனவே கற்புநெறியில் வாழ்ந்து வரும் "கணவன் வழி நிற்போரைக் கற்பழித்தல்" என்பது பெரும் பாவச் செயலாகும்.

24. கருப்ப மழித்துக் களித்திருந்தேனோ!

கடவுளால் படைக்கப்பட்ட உயிர்களை காப்பதற்குத்தான் மனிதனுக்கு உரிமை உண்டே தவிர, அழிப்பதற்கு அல்ல. ஆனால் ஒரு சில மருத்துவர்கள் இரண்டு அல்லது மூன்று மாதங்கள் கர்ப்பமான பெண்ணின் கர்ப்பத்தை கலைக்க மருந்துகள் கொடுத்து அதன்மூலம் வரும் வருவாயினால் குடும்பம் நடத்தி வருவார்கள். இவ்வாறு ஒரு உயிரைக் கொன்று அதன் மூலம் கிடைக்கும் வருவாயினால் குடும்பம் நடத்துவது பாவச்செயலாகும் என்று மகான் இராமலிங்க சுவாமிகள் கூறுகிறார். இதையே "கருப்பமழித்து களித்திருந்தேனோ" என குறிப்பிடுகிறார்.

25. குருவை வணங்கக் கூசிநின்றேனோ!

குரு என்று சொல்லும் போது அவர் காரண குரு, காரிய குரு என இருவகையாய் உள்ளனர். இதில் காரிய குரு என்பவர் தன்னுடைய சுயலாபத்திற்காக பொய்தவவேடம் பூண்டு உலகோரை ஏமாற்றி பொய்சொல்லி வாழ்ந்து வருவான். அவன் போலிகுரு ஆவான். அதாவது காரியகுரு.

ஆனால் மெய்தவவேடம் பூண்டு மும்மலக்குற்றமற்று, முற்று பெற்றவர்களே காரணகுரு ஆவார். அவர்களே ஞானிகள் ஆவார்கள். அப்பேர்ப்பட்ட பிறவிக்கடலை கடந்த மகான்களின், ஞானிகளின் நட்பு கிடைப்பதும் அவர்கள் குருவாக கிடைப்பதும் பெறுதற்கரிய பெரும் பேறாகும். அப்படிப்பட்ட ஆற்றல் பொருந்திய காரண குருவாகிய ஞானிகளை வணங்க கூசி நின்றால் நமக்கு அவர்களது ஆசி கிடைக்காமல் போய்விடுவதோடு பெரும் பாவமாகிய பிறவித்துன்பத்தை தந்து மீண்டும் மீண்டும் பிறவியைக் கொடுத்து விடும். ஏனெனில் குருவை வணங்க கூசி நின்றால், குருவின் திருவடியை பணியாவிட்டால் சர்வ வல்லமை படைத்த கடவுளை அறியாது மீண்டும் மீண்டும் பாவியாகி பிறவித்துயரில் ஆழ்ந்து விடுவார்கள்.

குருவி னடிபணிந்து கூடுவ தெல்லார்க்
கருவமாய் நிற்குஞ் சிவம்.

– ஔவைக்குறள் – குருவழி – குறள் எண் 3.

என்று மகான் ஔவையார் தனது ஔவைக்குறளில் கூறுகிறார். குருவின் திருவடியைப் பற்றாவிடில் இறைவனை கண்டிப்பாக உணரமுடியாது என்கிறார்.

தலைப்பட்ட சற்குருவின் சன்னதியி லல்லால்
வலைப்பட்ட மானதுவே யாம்.

– ஔவைக்குறள் – குருவழி – குறள் எண் 4.

இறையடி தாழ்ந்தை வணக்கமும் எய்திக்
குறையது கூறிக் குணங்கொண்டு போற்றச்
சிறையுடல் நீயறக் காட்டிச் சிவத்தோ
டறிவுக் கறிவிப்போன் சன்மார்க்கி யாமே.

– திருமந்திரம் – பக்குவன் – கவி எண் 1701.

நீலச் சிகண்டி யிலேறும் பிரானெந்த நேரத்திலுங்
கோலக் குறத்தி யுடன்வரு வான்குரு நாதன்சொன்ன
சீலத்தை மெள்ளத் தெளிந்தறி வார்சிவ யோகிகளே
காலத்தை வென்றிருப் பார்மரிப் பார்வெறுங் கர்மிகளே.

– கந்தரலங்காரம் – கவி எண் 26.

பெறுதற்கரிய மானுடப்பிறவியைப் பெற்றும், சற்குருவின் தொடர்பை பெற்றும் அச்சற்குருவினை வணங்க கூசி நின்றால் பிறவித்துயராகிய பெரும் பாவச்சுமையில் வீழ்ந்து மீண்டும் மீண்டும் பிறந்து பிறந்து துன்பப்பட வேண்டி வரும். எனவே குருவை வணங்க கூசக்கூடாது. அவ்வாறின்றி "குருவை வணங்க கூசி நின்றால்" பாவச் செயலாகும்.

26. குருவின் காணிக்கை கொடுக்க மறந்தேனோ!

சற்குரு உபதேசம் பெற்றவர்கள் தவசிகளாவார்கள். அத்தவசிகள் தமது தவத்தை தொண்டர்கள் உதவியுடன் ஆரம்பிப்பார்கள். அத்தவசிகள் தமது தவக்காலத்தில் தனக்கென்று பணிசெய்து அதாவது தொழில் செய்து வருவாய் ஈட்டி தமது தவத்தை செய்ய இயலாது. ஆகவே அவர்கள் தமது தொண்டர்களின் உதவியுடன் தவம் செய்வார்கள். சற்குரு உபதேசம் பெற்ற தவசிகள் தமது தொண்டர்களுக்கு உபதேசிப்பார்கள். அவ்வுபதேசமானது தொண்டர்கள் வாழ்வை நெறிப்படுத்துவதோடு அல்லாமல் ஜென்மத்தை கடைத்தேற்றவும் செய்யும் வல்லமை உள்ள உபதேசங்களாகும்.

அத்தகைய ஜென்மத்தை கடைத்தேற்றும் உபதேசத்தை அளிக்கும், தம்மை நெறிப்படுத்தி வாழவைக்கும் தவசிகளுக்கு, தவக்காலத்தில் அவரது தொண்டர்கள்தான் தவசிக்கு தேவையான உணவு, உடை மற்றும் தவம் செய்வதற்கு உண்டான இடம், சூழ்நிலை போன்றவற்றை தர வேண்டும். தவக்காலத்தில் நித்தியமாக உள்ள தவக்கடமைகளை செய்யவும் நித்தியத்திற்குரிய தவ உணவினை அவ்வப்போது எவ்வித குறையுமின்றி தருவதோடு அவர் மேற்கொள்ளும் தவத்திற்கு உறுதுணையாக நின்று தவத்திற்கு பாதுகாவலர்களாகவும் இருக்க வேண்டும். சற்குரு என்பவர் மும்மலக்குற்றமற்றவரும், முதுபெரும் ஞானியும் ஆவார். அவர்கள் உபதேசித்தால் புண்ணியவான்களுக்கு மட்டும்தான் உபதேசிப்பார்கள். அப்பேர்ப்பட்ட புண்ணியவான்களான சொற்குருவின் உபதேசம் பெறும் வாய்ப்பை சீடர்கள் பெறுவதற்கு மாதவம் செய்திருக்க வேண்டும். பெரும் புண்ணியம் செய்த தொண்டர்களுக்கே இந்த வாய்ப்பு கிடைக்கும். அதாவது ஒரு தவசிக்கு தவக்காலத்தில் உதவி செய்யும் வாய்ப்பானது பெரும் புண்ணியம் செய்த தொண்டர்களுக்கு மட்டுமே கிடைக்கும்.

சற்குருவின் உபதேசம் பெற்ற சொற்குரு தொண்டர்களுக்கு ஜென்மத்தை கடைத்தேற்றும் பொருட்டும், வாழ்வை செம்மைப்படுத்தும் உபதேசங்களை கூறுகிறார். அச்சீடர்கள் ஆசானுக்கு குரு காணிக்கை செலுத்த வேண்டும். அவர் மேற்கொள்ளும் தவத்திற்கும் அவர் மேற்கொள்ளும் அறப்பணிகளுக்கும் உதவி செய்வது என்பதே குரு காணிக்கையாகும். அதை சீடர்கள் உணவாகவோ,

பொருளாகவோ இன்னும் பிற வகையிலான உடலுழைப்பாகவோ வேறுவிதங்களிலும் சொற்குரு மனம் மகிழும்படி செய்து குருஉபதேசம் பெற்றதிற்குண்டான குருகாணிக்கையை செலுத்த வேண்டும்.

சற்குருவின் உண்மைப் பொருள் உபதேசம் பெற்ற ஆசானுக்கு தவக்காலத்தில் உதவி செய்யும் வாய்ப்பு கிடைத்தும் அவ்வாய்ப்பை நழுவ விடுவது என்பது பாவச்செயலாகும்.

குரு உபதேசம் பெற்ற தொண்டர்கள் உபதேசித்த குருவின் காணிக்கையை செலுத்த வேண்டும். அவ்விதம் செலுத்த மறப்பதென்பது பாவமாகும்.

துறந்தார்க்குத் துப்புரவு வேண்டி மறந்தார்கொல்
மற்றை யவர்கள் தவம்?

– திருக்குறள் – தவம் – குறள் எண் 263.

துறந்தவர்க்கு உணவு முதலியவை கொடுத்து உதவ வேண்டும் என விரும்பி மற்றவர்கள் (இல்லறத்தினர்) தவம் செய்தலை மறந்தார்களோ?

– மு.வரதராசனார்.

அற்றுநின் றாருண்ணும் ஊணே அறனென்னுங்
கற்றன போதங் கமழ்பவர் மானிடர்
உற்றுநின் றாங்கொரு கூவற் குளத்தினிற்
பற்றிவந் துண்ணும் பயன்அறி யாரே.

– திருமந்திரம் – அறஞ்செய்வான் திறன் – கவி எண் 253.

கொள்ளினும் நல்ல குருவினைக் கொள்ளுக
உள்ள பொருளுடல் ஆவி யுடன்ஈக
எள்ளத் தனையும் இடைவிடா தேநின்று
தெள்ளி யறியச் சிவபதந் தானே.

– திருமந்திரம் – பக்குவன் – கவி எண் 1693.

சற்குருவின் உபதேசம் பெற்ற சொற்குருவும் தமது தவத்தின் முடிவில் சற்குருவாக மாறுவார். அப்பேர்ப்பட்ட குருவை, ஆசானை ஆராய்ந்து தேர்ந்தபின் சீடர்கள் தமது உடல், பொருள், ஆவி அனைத்தையும் குருநாதரின் திருவடிக்கு சமர்ப்பணம் செய்ய வேண்டும். அப்படி செய்தால் மட்டும் போதாது. அந்த சற்குரு ஆசிபெற்று தவம் செய்யும் சொற்குருவின் திருவடிபணிந்து அவருடைய நிழல்போல் தொடர்ந்து திருவடி நிழலில் இருந்து அவர்தம் உபதேசங்களைப் பெற்று ஜென்மத்தை கடைத்தேற்ற வேண்டும். அவ்வாறில்லாமல் இடையே அவர்தம் திருவடி நிழலை விட்டு சிறிது விலகினாலும் அச்சீடனுக்கு பந்தபாசம் சூழ்ந்து அவனை, ஜென்மத்தை கடைத்தேற்றவிடாமல் செய்துவிடும்.

27. கற்றவர் தம்மைக் கடுகடுத்தேனோ!

தேவாரம், திருவாசகம், திருப்புகழ் போன்ற ஞான நூல்களை கற்றுணர்ந்து இசையிலும் தேர்ச்சி பெற்றவர் தேவாரம், திருவாசகம், திருப்புகழ் போன்ற நூல்களை இசையோடு இனிமையாக பாடிக்கொண்டிருந்தார். அதை பக்தர்களும் மெய்மறந்து கேட்டுக் கொண்டிருந்தார்கள். நிகழ்ச்சி தொடர்ந்து நடந்து கொண்டிருந்தது. இரவு பத்து மணிக்கு மேலும் நிகழ்ச்சி தொடர்ந்து நடந்து கொண்டிருந்தது. நிகழ்ச்சி நடந்து கொண்டிருந்த வீட்டின் பக்கத்து வீட்டுக்காரர் மூர்க்கத்தனமானவர்.

அவர் நிகழ்ச்சி நடந்து கொண்டிருந்த இடத்திற்கு வந்து இரவு பத்து மணிக்கு மேல் ஆகிறது, இன்னும் ஏன் சத்தம் போட்டு கொண்டிருக்கிறீர்கள், நிகழ்ச்சியை நிறுத்துங்கள் என கடுமையாக பேசினார்.

பாடிக் கொண்டிருந்தவர் பக்கத்து வீட்டுக்காரரை அணுகி, ஐயா தேவாரம், திருவாசகம், திருப்புகழ் போன்ற நூல்கள் முதுபெரும் ஞானிகளால் இயற்றப்பட்டவை. அந்நூல்களை பார்ப்பதும், படிப்பதும், கேட்பதும் மிகப்பெரும் புண்ணியச் செயலாகும். அப்பேர்ப்பட்ட பாடல்களை கேட்டு பயன்பெறாமல் நிறுத்தச் சொல்கிறீர்களே, கடுமையாக பேசாதீர்கள் என மனவருத்தத்துடன் கூறினார்.

ஆனால் பக்கத்து வீட்டுக்காரரோ அதை ஏற்றுக் கொள்ளாமல் புண்ணியமெல்லாம் இருக்கட்டும். இரவு பத்து மணிக்கு மேல் ஆகிவிட்டது, அக்கம் பக்கத்தில் உள்ளவர்கள் தூங்க வேண்டாமா? தூக்கத்தை கெடுக்காதீர்கள் சத்தம் போடாமல் உடனே நிகழ்ச்சியை நிறுத்துங்கள் என கடுகடுப்பாக பேசி நிகழ்ச்சியை நிறுத்தச் சொன்னார்.

பாடியவரும், தொண்டர்களும் அவரது முசுடு சுபாவத்தை அறிந்து மிகுந்த மன வேதனையோடு வேறு வழியின்றி நிகழ்ச்சியை நிறுத்தி விட்டனர். இவ்வாறு கற்றவர்களை கடுகடுப்பாக பேசிய பக்கத்து வீட்டுகாரருக்கு பாடியவரது மனவேதனையும், பக்தர்கள் மனவேதனையும் பட்டதால் பாவம் சூழ்ந்து நாளடைவில் அவர் குடும்பத்தினர் நோய்வாய்ப்பட்டு துன்பப்பட்டனர். எனவே கற்றவர் தம்மை கடுகடுத்து பேசுவது பாவச்செயலாகும்.

ஞானிகள் இயல்பாகவே நினைத்த உடன் கவிபாடும் திறன் உடையவர்கள். அவர்கள் பள்ளிக்கு சென்று கற்காமலேயே அவர்களுக்கு இயற்கையாகவே கவித்திறன் இருக்கும். ஞானிகள் கவிகளை ஏட்டு கல்வியை கற்றறிந்த கல்வியாளர்கள் ஏளனம் செய்வதும், ஞானிகளை இகழ்ந்து பேசுவதுமாக இருப்பார்கள். அவர்களது செயலானது இறுதியில் அவர்களுக்கு மிகுந்த துன்பத்தை விளைவிக்கும்.

குணமென்னும் குன்றுஏறி நின்றார் வெகுளி
கணமேயும் காத்தல் அரிது.

– திருக்குறள் – நீத்தார் பெருமை – குறள் எண் 29.

அருணகிரிநாதர் முதுபெரும் ஞானியாவார். அவர் இளமை முதலே கல்விச் சாலைகளுக்கு செல்லவில்லை. ஆயினும் அவர் மிக அற்புதமாக கவி இயற்றி கவி பாடும் வல்லமை பொருந்தியவர். அவரது கவித்திறனும் இனிமையான பாடல்களும் அந்நாட்டு மன்னனை வெகுவாக கவர்ந்ததோடு மட்டுமல்லாது கவிமழை பொழியும் அருணகிரிநாதருடன் மிகுந்த மதிப்பும், மரியாதையும், பக்தியும், நட்பும் வைத்திருந்தான். இது அந்நாட்டிலுள்ள சம்மந்தாண்டான் என்ற மந்திரவாதிக்கு பிடிக்காமல் போனதுடன் பலவிதங்களில் அருணகிரிநாதருக்கு இன்னல்களை விளைவித்தான். இறுதியில் ஞானிகளின் கோபத்திற்கு உள்ளாகி சம்மந்தாண்டான் பல துன்பங்களை அனுபவித்து மரணித்தான். எனவே ஞானிகள், ஞானநூல் கற்ற பக்தர்கள் போன்ற கற்றவர் தம்மை கடுகடுத்தல் பாவச்செயலாகும்.

28. பெரியோர் பாட்டிற் பிழைசொன்னேனோ!

லபிக்கவழி (சித்திக்க வழி) சொல்லுகிறேன் ஆத்தாளே நந்தி திருமூலரையும்
லபிக்கக்காலாங்கியையும் ஆத்தாளே நாதாந்தபோகரையும்
சத்திசிதம்பரமும் ஆத்தாளே சட்டமுனி பூசைசெய்வாய்
உத்தமக்கொங்கணரை ஆத்தாளே உசிதமாய் பூசைசெய்வாய்
கருவூரார் ஆனந்தர் ஆத்தாளே கண்டு வழிதெரிந்தோர்
ஒருநெறியாய் இவர்களையும் ஆத்தாளே உண்மையுடன் பூசைசெய்தால்
சண்டாளன் ஆனாலும் ஆத்தாளே தான் வேதைகாண்பானே
கண்டசேதி சொன்னேன் நான் ஆத்தாளே.

– மகான் அழுகண்ணர் – 6.

மேற்கண்ட கவி ஆன்மீகவாதிகள் முன்னேறும் பொருட்டு மகான் அழுகண்ணர் என்பவரால் இயற்றப்பட்டதாகும். இதில் லபிக்க வழி சொல்கிறேன் என கூறுவது சித்தி பெறுவதற்குண்டான மார்க்கத்தை கூறுகிறேன் என கூறுகிறார். ஆன்மீகவாதிகள் சித்தி பெற வேண்டுமெனில் மகான் நந்தீசர், மகான் திருமூலதேவர், மகான் காலாங்கிநாதர், மகான் போகர், மகான் சட்டைமுனிவர், மகான் கொங்கணமகரிஷி, மகான் கருவூர்தேவர், மகான் சுந்தரானந்தர் போன்ற முற்றுப்பெற்ற ஞானிகள் திருவடியைப்பற்றி நெறியோடு பூஜித்து ஆசி பெறுபவர்கள் பல ஜென்மங்களில் செய்த பாவங்கள் நீங்கி புண்ணியவான்களாவதோடு, செய்வதற்கரிய வேதியலை செய்து மரணமில்லா பெருவாழ்வாகிய சித்தியையும் பெறலாம் என

மகான் அழுகண்ணிச்சித்தர் ஆன்மீகவாதிகளுக்கு சித்தி பெறும் உபாயத்தை உபதேசிக்கிறார்.

போடுவது திலதமடா மூலர் மைந்தர்
போகர் கருவூராரைத் தியானம் பண்ணு
நாடுநகர தனிலுள்ள ஜீவசெந்து
நாதாக்கள் சித்தருக்கும் தோணாதையா
ஏடுதனில் எழுதினதோர் பாடல் என்று
எண்ணாதே ஒருநாளும் தப்போ இல்லை
தேடினபேர் பொருள்கோடி தனமீந்தாலும்
செப்பாதே இக்கருவை (ரகசியத்தை) உலகத்தோர்க்கே.
– மகான் சட்டைமுனிநாதர் – 10.

சைவ சமயத்தை சார்ந்தவர்கள் நெற்றியில் திருநீறு இடும்போது ஓம் நமசிவாய, விக்னேஷ்வரா, விநாயகா, முருகா என்று கூறி விபூதி வைத்துக் கொள்வார்கள். வைணவ சமயத்தை சார்ந்தவர்கள் திருநாமம் இடும்போது ஓம் நமோ நாராயணா என்றோ, கிருஷ்ணா, ராமா என்றோ கூறி திருநாமம் இடுவார்கள். இது அவர்களது பழக்கம். இந்த பாடலில் மகான் சட்டைமுனிவர் நெற்றியில் விபூதி பூசும் போது, மகான் திருமூலரையும், அவர் மைந்தர் மகான் காலாங்கிநாதரையும், அவரது மைந்தர் மகான் போகரையும், அவரது மைந்தர் மகான் கருவூர்தேவரையும் எண்ணி அவர்கள் நாமத்தை சொல்லி விபூதி பூசிக்கொள்ள சொல்கிறார்.

மேற்கண்ட நான்கு மகான்களும் முதுபெரும் ஞானிகள். மகான் சட்டை முனிவரும் முதுபெரும் ஞானியாவார். அவர் கூறினால் காரணமில்லாமல் இருக்காது. எங்கும் வியாபித்த பரம்பொருளை, இறைவனை தம்முள் கண்டு தரிசித்தவர்கள் ஞானிகள். அந்த பரம்பொருளோடு இறைவனோடு, இறைவன்வேறு, ஞானிகள்வேறு என்றில்லாமல் இரண்டற கலந்தவர்கள் ஞானிகள். அப்பேர்ப்பட்ட ஞானிகளும் இறைவனும் ஒன்றேயாகும். இறைவனை நினைத்து விபூதி பூசுவதும், ஞானிகளை நினைத்து விபூதி பூசுவதும் ஒன்றேயாகும்.

ஆனால் இறைவன் நாமத்தை சொல்லாது ஞானிகள் நாமத்தை ஏன் சட்டைமுனிவர் கூறச் சொன்னார் என்றால், அந்த இறைவனை அடைய, அந்த பரம்பொருளை அடைய, ஞானிகள் ஆசியில்லாமல் அடைய முடியாது. ஞானிகளாகிய சற்குருவின் உபதேசம் இல்லாமல் இறைவனை அறியவோ, அடையவோ முடியாது. எனவே இறைவனின் நாமத்தை சொல்வதை விட, ஞானிகள் நாமத்தை சொல்லி முதலில் சற்குருவின் ஆசிபெற வேண்டும் என்பதை வலியுறுத்துகிறார்.

இதை அறியாமல் சிலர் இறைவனின் நாமத்தை சொல்லி விபூதி வைக்காமல், சித்தர்கள், ஞானிகள் நாமத்தை சொல்லி, ஏன் திருநீறு வைக்க வேண்டும் என்று குதர்க்கம் பேசுவார்கள். அன்றி இக்கவிகள் தவறு என்றும், உண்மை பொருள் உணராது ஞானிகள் பாடல்களை குறைகூறியும் அவதூறு செய்தும் வருவார்கள். இதுபோன்று செய்பவர்கள் ஞானிகளின் சீற்றத்திற்கு ஆளாவார்கள். அது பாவச்செயலாகும். இதையே வள்ளல் பெருமானார் பெரியோர் பாட்டில் பிழை சொல்வது பாவம் என்கிறார்.

காப்பான கருவூரார் போகநாதர்
கருணையுள்ள அகத்தீசர் சட்டைநாதர்
மூப்பான கொங்கணரும் பிரம்மசித்தர்
முக்கியமாய் மச்சமுனி நந்திதேவர்
கோப்பான கோரக்கர் பதஞ்சலியார்
கூர்மையுள்ள இடைக்காடர் சண்டிகேசர்
வாப்பான வாதத்திற்கு ஆதியான
வாசமுனி கமலமுனி காப்புத்தானே.

– மகான் உரோமரிஷி – 8.

மேற்கண்ட பாடலில் மகான் உரோமரிஷி மகான் கருவூர்தேவரையும், மகான் போகநாதர், மகான் அகத்தீசர், மகான் சட்டைநாதர், மகான் கொங்கணமகரிஷி, மகான் பிரம்மசித்தர், மகான் மச்சமுனிவர், மகான் நந்தீசர், மகான் கோரக்கர், மகான் பதஞ்சலி முனிவர், மகான் இடைக்காடர், மகான் சண்டிகேசர், மகான் தூர்வாசமுனிவர், மகான் கமலமுனிவர் போன்ற முதுபெரும் ஞானிகளை ஆன்மீகவாதிகள் முன்னேறும் பொருட்டு உலகிற்கு அறிமுகப்படுத்தியுள்ளார்கள்.

மகான் உரோமரிஷியும் பெரும் ஞானியாவார். அப்பேர்ப்பட்ட முதுபெரும் ஞானியாகிய உரோமரிஷியின் கவிகளை ஜென்மத்தை கடைத்தேற்ற விரும்புகிறவர்கள், படித்து பின்பற்ற வேண்டுமே அன்றி ஞானிகளின் பாடல்களின் உண்மைப் பொருள் உணராமல் தங்களுக்கு உண்மைப் பொருள் தெரியவில்லை என்ற காரணத்தில் குறைகூறக் கூடாது.

அவ்வாறன்றி குறை சொல்வது அதாவது "பெரியோர் பாட்டில் பிழை சொல்வதென்பது" பாவச்செயலாகும். சித்தர்கள் ஞானிகள் பாடல்களை தவறாக விமர்சிப்பதும், குறைசொல்வதும், ஏளனம் செய்வதும் பாவச்சுமையை சேர்ப்பதோடு மட்டுமல்லாது ஞானிகளின் சீற்றத்திற்கும் ஆளாக நேரிடும். அதுவே அவரை நரகத்திற்கும் செல்ல வைக்கும்.

அவ்வாறு உண்மைப்பொருள் உணரமுடியாவிட்டாலும் அமைதியாக இருக்க வேண்டும். தமக்கு பொருள் விளங்கவில்லை என்பதற்காக

பெரியோர்கள் (ஞானிகள்) பாடல்களை குற்றம் என்று குறைகூறக் கூடாது. ஏனெனில் சித்தர்களும் ஞானிகளும் தமது பாடல்களில் அவர்கள் வாழ்ந்த காலக்கட்டத்தில் உள்ள சமுதாய சூழலை ஒட்டியே பாடல் நடை அமைந்திருக்கும்.

மேலும் மக்களுக்கு புரியும் வகையில் எளிமையாகவும், அந்தந்த பகுதிகளில் உள்ள பேச்சு வழக்கிற்கேற்பவும் பாடல்களை அமைத்து இருப்பார்கள். எனவே பாடல்களின் நடையை பார்த்து கவிநயம் இல்லையென்று குறை கூறக்கூடாது.

மேலும் சித்தர்கள் இயற்றிய பாடல்களெல்லாம் பரிபாஷையாகத்தான் இருக்கும். அதாவது மேலோட்டமாக பார்த்தால் சாதாரணமான பொருளை விளக்குவதாகவும், அதுவே உண்மையில் இரகசியமான மற்றொரு பொருளை விளக்குவதாகவும் அமைக்கப்பட்டிருக்கும். ஏனெனில் அவர்களது பாடல்கள் அனைத்தும் ஞானத்துறையில் வரும் அன்பர்கள் மற்றும் ஆன்மீகவாதிகள் மட்டும் புரிந்து கொள்ளும்படி அமைக்கப்பட்டிருக்கும். அவர்களது பாடல்களை வழிவழியாக குருபாரம்பரியமாக வருபவர்களுக்கு மட்டுமே உண்மைப் பொருளை உணரமுடியும்.

வழுதலை வித்திடப் பாகன் முளைத்தது
புழுதியைத் தோண்டினேன் பூசணி பூத்தது
தொழுதுகொண் டோடினார் தோட்டக் குடிகண்
முழுதும் பழுத்தது வாழைக் கனியே.

– திருமந்திரம் – சூனிய சம்பாஷணை – கவி எண் 2869.

பார்ப்பான் அகத்திலே பாற்பசு ஐந்துண்டு
மேய்ப்பாரும் இன்றி வெறித்துத் திரிவன
மேய்ப்பாரும் உண்டாய் வெறியும் அடங்கினாற்
பார்ப்பான் பசுஐந்தும் பாலாச் சொரியுமே.

– திருமந்திரம் – சூனிய சம்பாஷணை – கவி எண் 2883.

மேற்கண்ட திருமந்திர பாடல்களில் மேலோட்டமாக பார்த்தால், சாதாரணமான பொருளும், கருத்துக்களும் இருப்பதுபோல தோன்றும். ஆனால் உண்மையில் மிகநுட்பமான கருத்துக்கள், இரகசியங்கள் ஆழப்புதைத்து வைத்து எழுதப்பட்டு உள்ளது. இப்படி பரிபாஷையாக இரகசியங்களை பொதித்து எழுதப்பட்டுள்ள கவிகளின் உண்மைப்பொருளை அறிய வேண்டுமானால், சாதாரண ஏட்டுக்கல்வியின் புலமை போதாது. ஞானத்துறையில் வழிவழியாக வரும் குருநாதரின் உபதேசமின்றி உணரமுடியாது.

29. பட்சியைக் கூண்டில் பதைக்க அடைத்தேனோ!

பறவை இனங்களில் பல பறவையினங்கள் சுதந்திரமாக சுற்றி பறந்து திரிபவைகளாகும். கிளி போன்ற பறவையினங்களை சிலர் கூண்டில் அடைத்து வளர்ப்பதும் உண்டு.

அவ்வாறு சுதந்திரமாக பறந்து திரியக்கூடிய கிளியைப்பிடித்து அதை கூண்டில் அடைத்து அதற்கு பேசக்கற்று கொடுப்பார்கள். கிளியும் வளர்ப்பவர்கள் கற்றுக் கொடுப்பதை கற்று வளர்ப்பவரது இல்லத்திற்கு வரும், அவரது நண்பர்களையும் உறவினர்களையும் பார்த்து வாங்க வாங்க என்று அழைக்கும்.

கிளியானது அவ்வாறு அழைக்கும்போது அது இனிமையாக இருக்கும். மேலும் கிளியானது பார்ப்பதற்கும் அழகாய் இருக்கும். அதன் ஓசையைக்கேட்டு வருபவர்களும் அதை வளர்ப்பவரும் மகிழ்வார்கள். ஆனால் கூண்டில் அடைபட்ட கிளியோ உயிருக்கு பயந்து அஞ்சி நடுங்கிக் கொண்டு எங்கே நம்மைக் கொன்று விடுவார்களோ என்று பயந்து கொண்டே இருக்கும்.

இவ்வாறு கிளியானது பயந்து நடுங்கும்போது அதை வளர்ப்பவர்கள் உணர மாட்டார்கள். ஆனால் மகான் இராமலிங்க சுவாமிகள், அத்தகைய உயிரினங்களின் அச்சத்தை உணர்ந்து பட்சியை கூண்டில் பதைக்க அடைத்தேனோ என கூறுகிறார்.

சுதந்திரமாக பறந்து திரிய வேண்டிய பட்சிகளை கூண்டில் பதைக்க அடைத்து வைப்பது பாவச்செயலாகும். மகான் இராமலிங்க சுவாமிகள் வாடிய பயிரை கண்டபோதெல்லாம் வாடினேன் என்கிறார். ஓரறிவு (தொடு உணர்ச்சி) மட்டுமே உள்ள தாவரவர்க்கம் வாடுவதைக் கண்டு மனம் பதைத்த வள்ளல்பெருமான் பட்சியை கூண்டில் பதைக்க அடைப்பதை ஏற்றுக் கொள்ளமாட்டார்.

30. கன்றுக்குப் பாலூட்டாது கட்டி வைத்தேனோ!

சிலர் பசுமாடுகள் வைத்து வளர்த்து வருவார்கள். காலையில் மாடுகளை மேய்ச்சலிற்கு ஓட்டிச் சென்று விட்டு மாலையில் வீட்டிற்கு ஓட்டி வருவார்கள். தாயை பார்த்த கன்று குட்டியானது "அம்மா" "அம்மா" என்று சத்தமிட்டு பால் குடிக்க வேண்டும் என்று சொல்லி தாயை அழைக்கும் பாவனையாக கத்தும்.

கன்றின் குரல் கேட்ட தாய்ப்பசுவும் வேகமாக கன்றை நோக்கி பால் கொடுக்க வரும். பால் மாட்டை வளர்ப்பவர் பால் கறக்க வேண்டும் என்று

எண்ணி கன்றினை அவிழ்த்து விடுவார். கன்றும் ஆவலோடு தாய்ப்பசுவினிடம் சென்று பால் குடிப்பதற்காக மடியில் தன் முகத்தை முட்டி, தாய்ப்பசு பால் சுரக்க தூண்டி, பால் குடிக்கும். தாய்ப் பசுவும் தனது கன்றினை அன்புடன் நாவால் தடவிக் கொடுக்கும்.

பால் கறந்து பயன்படுத்த வேண்டும் என்று எண்ணி, பசுவினை வளர்ப்பவர், மடியில் கன்று வாய்வைத்து தாய்ப்பசு பால் சுரக்க ஆரம்பித்த உடனேயே கன்றை தாய்பசுவிடமிருந்து பிரித்து, பால் அருந்த விடாமல் தடுத்து கன்றினை தனியே கட்டி வைத்துவிட்டு கன்றிற்கு உரிய பாலையும் சேர்த்து கறந்து பயன்படுத்தி விடுவார். தாயிடமிருந்து பிரிந்த கன்று பாலருந்த முடியாமல் ஏக்கத்தில் அம்மா! அம்மா! என்று கதறும். அதை வளர்ப்பவர்கள் உணராது கன்று பாலருந்த விடாது தடுத்து பெரும் பாவச்செயலை செய்வார்கள்.

மகான் இராமலிங்க சுவாமிகள் அந்த கன்று படும் துயரினை நன்கு உணர்ந்தவர். ஆகவே கன்றுக்கு பாலூட்டாது கட்டி வைத்தேனோ என கூறுவது மூலம் கன்றிற்கு பாலூட்டாமல் கட்டி வைப்பது பாவச்செயல் என்பதை உணர்த்துகிறார்.

ஒருவனுக்கு பாலுள்ள மாடுகள் அமைவது என்பது முற்பிறப்பில் செய்த புண்ணியத்தால் வந்ததாகும். இதைப் பால் பாக்கியம் என்பார்கள். அப்புண்ணியத்தால் கிடைத்த இந்த பால்மாடுகள் பெறும் பாக்கியத்தை, இது போன்று கன்றுக்கு பாலூட்டாமல் தடுத்து பாவத்திற்கு ஆளானால், அடுத்த ஜென்மத்தில் பால்பாக்கியமற்று போய்விடும் என்பதையும் உணரவேண்டும்.

31. ஊன்சுவை உண்டு உடல் வளர்த்தேனோ!

கத்தரி, முருங்கை, அவரை, கொத்தவரை, புடலை, வெண்டை, பாகல், பரங்கி, பூசணி இன்னும் அநேகவிதமான காய்கறிகளும் சிறுகீரை, பெருகீரை இன்னும்பல கீரைவகைகளும் ஆப்பிள், அன்னாசி, பலா, மா, வாழை, மாதுளை போன்ற அநேக கனிவர்க்கங்களும், முள்ளங்கி, பீட்ரூட், உருளை, வள்ளிகிழங்கு போன்ற அநேக வகை கிழங்கு வகைகளும், நெல், கோதுமை, கம்பு போன்ற தானிய வகைகளும், துவரை, கடலை, தட்டைப்பயிறு, பாசிப்பயிறு போன்ற பலவிதமான பயறு வகைகளும், முந்திரி, பாதாம், பிஸ்தா போன்ற சத்துள்ள உணவுப் பொருள்களும் இவை தவிர ஆங்கில காய்கறிகளும் இன்னும் அநேக உணவு பொருள்களையும் தாவர வர்க்கத்தில் மனிதன் உண்பதற்காகவே இறைவனால் இயற்கையில் படைக்கப்பட்டுள்ளது.

மேலும் பசும்பால், எருமைப்பால் போன்ற பால் வகைகளும், அவற்றிலிருந்து பெறப்படும் தயிர், மோர், வெண்ணெய், நெய் போன்ற பொருள்களும் மனிதனுக்காக படைக்கப்பட்டுள்ளது. இப்பொருள்களிலேயே மனிதனுக்கு தேவையான அனைத்து விதமான சக்தியும், ஊட்டச்சத்துக்களும் உள்ளது.

இவையெல்லாவற்றையும் பயன்படுத்தும் மனிதர்கள் இவை போதாதென்று நடமாடும் உயிரினங்களைக் கொன்று அதன் உடம்பை, மாமிசத்தை புசிப்பது எதனால்? அது பாவச்செயலாகும் என மகான் இராமலிங்க சுவாமிகள் கூறுகிறார். இது நம்மைப் படைத்தக் கடவுளும் ஏற்றுக் கொள்ள மாட்டார்.

மகான் திருமூலரும் தனது திருமந்திரம் என்ற நூலில்

பொல்லாப் புலாலை நுகரும் புலையரை
எல்லாருங் காண இயமன்றன் தூதுவர்
செல்லாகப் பற்றித் தீவாய் நரகத்தில்
மல்லாக்கத் தள்ளி மறித்துவைப் பாரே.

– திருமந்திரம் – புலால் மறுத்தல் – கவி எண் 199.

எனக் கூறுகிறார்.

ஒரு உயிரைக் கொன்று அதன் உடம்பை (மாமிசம்) உண்பது என்பது ஆன்மீகவாதிகளுக்கு பொருந்தாத உணவாகும். அவ்வாறு உண்டால் கண்டிப்பாக இறையருள் பெற முடியாது என்பது தெளிவு. மகான் திருவள்ளுவரும் தனது திருக்குறளில்

தன்ஊன் பெருக்கற்குத் தான்பிறிது ஊன்உண்பான்
எங்ஙனம் ஆளும் அருள்?

– திருக்குறள் – புலால் மறுத்தல் – குறள் எண் 251.

எனக் கூறுகிறார்.

தனது உடம்பினை பெருக்குவதற்காக பிற உயிர்களைக் கொன்று உண்பவர்களை இறைவன் எங்ஙனம் ஆட்கொண்டு அருள் செய்வான் என கூறுகிறார். ஆதலால் பிற உயிர்களை கொன்று உண்ணும், அதாவது (மாமிசம்) புலால் உண்ணும் மக்கள் இறையருள் பெறமுடியாது என்பதை தெளிவுபடுத்துகிறார்.

சிலர் பெண்களை வஞ்சித்து கெடுத்து ஏமாற்றி விட்டு பின்னர் திருமணம் செய்யாமல் விட்டுவிடுவார்கள். ஒரு சிலர் தர்மம் செய்பவர்களது தர்மத்தை இகழ்ந்து பேசுவார்கள். ஒரு சிலர் உத்தமமான பக்தர்களை இகழ்ந்து பேசுவார்கள். அவர் மனம் நோகும்படி செய்து விடுவார்கள்.

இன்னும் சிலர் ஞானிகளை ஏளனம் செய்து விடுவார்கள். இப்படிப்பட்ட பாவச்செயல்களை செய்தவர்களுக்கெல்லாம் பின்னாளில் உடம்பெங்கும் சொறி, சிரங்கு இன்னும் அநேக விதமான புண்கள் தோன்றி உடம்பெங்கும் அரிப்பெடுத்தும், நாற்றமெடுத்தும் உடம்பின் சதைகள் அழுகி துர்நாற்றமும் வீசும்.

இப்படிப்பட்டவர்களை பார்க்கவே அறுவெறுப்பாக இருக்கும். புலால் உண்ணாத பெரியோர் புலாலைப் பார்க்கும்போது அது உடம்பில் தோன்றிய புண் என்பதை உணர்ந்து அறுவெறுப்பாக பார்ப்பார்களே அன்றி உணவுப்பொருளாக எண்ண மாட்டார்கள்.

உண்ணாமை உள்ளது உயிர்நிலை ஊன்உண்ண
அண்ணாத்தல் செய்யாது அளறு.

– திருக்குறள் – புலால் மறுத்தல் – குறள் எண் 255.

உயிர்கள் உடம்பு பெற்று வாழும் நிலைமை, ஊன் உண்ணாதிருத்தலை அடிப்படையாகக் கொண்டது; ஊன் உண்டால் நரகம் அவனை வெளிவிடாது.

– மு.வரதராசனார்

செயிரின் தலைப்பிரிந்த காட்சியார் உண்ணார்
உயிரின் தலைப்பிரிந்த ஊன்.

– திருக்குறள் – புலால் மறுத்தல் – குறள் எண் 258.

குற்றத்திலிருந்து நீங்கிய அறிவை உடையவர், ஓர் உயிரினிடத்திலிருந்து பிரிந்துவந்த உடம்பாகிய ஊனை உண்ணமாட்டார்.

– மு.வரதராசனார்.

அவிசொரிந்து ஆயிரம் வேட்டலின் ஒன்றன்
உயிர்செகுத்து உண்ணாமை நன்று.

– திருக்குறள் – புலால் மறுத்தல் – குறள் எண் 259.

நெய் முதலிய பொருள்களைத் தீயில் சொரிந்து ஆயிரம் வேள்விகள் செய்தலைவிட, ஒன்றன் உயிரைக் கொன்று உடம்பைத் தின்னாதிருத்தல் நல்லது.

– மு.வரதராசனார்.

மகான் திருமூலதேவர், மகான் திருவள்ளுவர் இன்னும் அநேக ஞானிகளும் புலால் உண்பதை பாவம் என கூறுகின்றனர். மகான் இராமலிங்க சுவாமிகளும் “ஊன் சுவை உண்டு உடம்பை வளர்ப்பது” பெரும் பாவச்செயல் என கூறுகிறார். எனவே புலால் உண்ணாது இருக்க வேண்டும். அவ்வாறில்லாமல் புலால் உண்டால் இறைவனது ஆசியை பெறமுடியாது.

32. கல்லும் நெல்லும் கலந்து விற்றேனோ!

விவசாயிகள் வயலில் நெல்லை பயிரிடுகின்றனர். அவ்வாறு பயிரிடும்போது ஒரு ஏக்கருக்கு சுமார் இருபத்தைந்து கிலோ விதை நெல்லைப் பயன்படுத்தி, அவ்விதை நெல்லை நாற்றுக்களாக்கி பின்னர் அவற்றிற்கு தேவையான இடுபொருள்களை இட்டு விளைவித்தால், அந்த நெல்லானது ஒன்றுக்கு நூறாக ஆயிரமாக விளைந்து ஏக்கருக்கு சுமார் முப்பது முதல் நாற்பது குவிண்டால் நெல்லை நமக்கு தருகிறது. இது இறைவன் நமக்களித்துள்ள வரமாகும்.

இறைவன் ஆரம்பத்தில் ஒரு நெல்லை தோற்றுவித்து அந்த நெல்லிற்குள்ளேயே அது பல்கி பெருகுமாறு அமைப்பை வைத்து அந்த நெல்லையே நூறாகவும் பின்னர் ஆயிரமாகவும் பின்னர் கோடிக்கணக்கிலும் பல்கி பெருக வைத்து இந்த உலகிலுள்ள உயிர்கள் அனைத்தும் பயன்பெறும் பொருட்டு தந்தருளி உயிர்கள்பால் பெருங்கருணை கொண்டு அளித்துள்ளான்.

அவ்வாறு நம் மேல் இறைவன் கருணை கொண்டு அளிக்கும் அந்த நெல்லை சிலர் இலாபநோக்கு கருதி ஒரு மூட்டைக்கு அரை கிலோ கல்லை கலந்தால், நூறு மூட்டைக்கு ஐம்பது கிலோ நெல் நமக்கு இலாபமாகும் என எண்ணி இலாபநோக்கம் கருதி, பேராசை காரணமாக நெல்லில் கல்லைக் கலப்படம் செய்து விற்பார்கள். இறைவன் அளித்த உணவுப் பொருளில் கலப்படம் செய்து விற்பது என்பது மனித சமுதாயத்திற்கு செய்யும் துரோகமாகும். அது இறைவனுக்கு செய்யும் துரோகமாகும். எனவே நெல்லில் கல்லை கலந்து விற்பது என்பது பாவச்செயலாகும் என்பதை மகான் இராமலிங்க சுவாமிகள் கூறுகிறார்.

மேலும் அவர் இறைவன் நம்பால் கொண்டுள்ள கருணையை தமது அருட்பெருஞ்ஜோதி அகவலில் மேற்குறித்த கருத்தை ஒத்த விதத்தில் கூறுகிறார்.

13. எண் வகை

ஒன்றினில் ஒன்றே ஒன்றிடை ஆயிரம்
அன்றற வகுத்த அருட்பெருஞ்ஜோதி
பத்திடை ஆயிரம் பகர் அதில்கோடி
அத்துற வகுத்த அருட்பெருஞ்ஜோதி
நூற்றிடை இலக்கம் நுவல் அதில் அனந்தம்
ஆற்றிடை வகுத்த அருட்பெருஞ்ஜோதி
கோடியில் அனந்த கோடி பல்கோடி
ஆடுற வகுத்த அருட்பெருஞ்ஜோதி

14. வித்தும் விளைவும்

வித்தியல் ஒன்றாய் விளைவியல் பலவா
அத்தகை அமைத்த அருட்பெருஞ்ஜோதி
விளைவியல் அனைத்தும் வித்திடை அடங்க
அளவு செய்து அமைத்த அருட்பெருஞ்ஜோதி
வித்தும்பதமும் விளை உப கரிப்பும்
அத்திறல் அமைத்த அருட்பெருஞ்ஜோதி
வித்திடை முளையும் முளையிடை விளைவும்
அத்தக அமைத்த அருட்பெருஞ்ஜோதி
வித்தினுள் வித்தும் வித்ததில் வித்தும்
அத்திறம் வகுத்த அருட்பெருஞ்ஜோதி
விளைவினுள் விளைவும் விளைவதில் விளைவும்
அளையுற வகுத்த அருட்பெருஞ்ஜோதி
முளையதின் முளையும் முளையினுள் முளையும்
அளைதர அமைத்த அருட்பெருஞ்ஜோதி
வித்திடைப் பதமும் பதத்திடை வித்தும்
அத்துற அமைத்த அருட்பெருஞ்ஜோதி
பதமதிற் பதமும் பதத்தினுள் பதமும்
அதிர்வற வகுத்த அருட்பெருஞ்ஜோதி

– அருட்பெருஞ்ஜோதி அகவல்.

33. அன்புடை யவர்க்குத் துன்பஞ் செய்தேனோ!

சமுதாயத்தில் ஒருவருக்கு ஒருவர் அன்புடன் இனிமையாக ஒற்றுமையாக நட்புடன் பழகி வருவார்கள். அவ்வாறு பழகும் போது ஒருவருக்கு துன்பம் என்றால், மற்றொருவர் கைகொடுத்து தாங்கி நின்று காப்பாற்றி நட்புடன் இருப்பார்கள். அவ்வாறு ஒருவருக்கொருவர் அன்புடன் பழகிவரும் சமயத்தில் உதவி செய்பவரது உத்தியோகம் செய்யுமிடத்தில் ஏற்படும் பிரச்சனைகளாலோ, விவசாயத்தினாலோ, தொழிலினாலோ அல்லது குடும்பத்திலோ பலபிரச்சனைகள் ஏற்படும்.

அப்பிரச்சனைகள் காரணமாக மனவேதனையுடன் சில சமயங்களில் மற்றொருவரை கோபமாக பேசுவது உண்டு. அவ்வாறு கோபமாக பேசும் போது மற்றொருவர் அவர் தனக்கு முன்பு செய்த உதவிகளை எண்ணிப்பார்த்து அந்த நண்பரது கோபத்தை கருத்தில் கொள்ளாமல், அவரது கோபமான வார்த்தைகளை உடனே மறந்து மன்னித்து விடவேண்டும். அதை கருத்தில் கொண்டால் ஒருவருக்கு ஒருவர் பகை ஏற்படும்.

அவ்வாறில்லாமல் அவர் கோபத்துடன் பேசியதையெல்லாம் கருத்தில் கொண்டு மனதிற்குள்ளேயே வைத்து அவர் முன்பு செய்த நன்றிகளையும் உதவிகளையும் மறந்து துன்பம் செய்வது என்பது பாவச்செயலாகும் என்று மகான் இராமலிங்க சுவாமிகள் கூறுகிறார்.

நல்லார் எனத்தாம் நனிவிரும்பிக் கொண்டாரை
அல்லார் எனினும் அடக்கிக் கொளல்வேண்டும்;
நெல்லுக் குமியுண்டு; நீர்க்கு நுரையுண்டு;
புல்லிதழ் பூவிற்கும் உண்டு.

– நாலடியார் – நட்பிற் பிழை பொறுத்தல் – கவி எண் 221.

நல்லவரென்று ஆராய்ந்து தேர்ந்தபின், அந்நல்லவரிடம் நட்பு கொண்டபின், அந்நல்லவரிடமும் சில குறைகள் இருப்பது இயல்புதான். அதை பெருந்தன்மையோடு பொறுத்துக் கொள்ள வேண்டும்.

அச்சிறு குற்றத்திற்காக அவரைப் புறக்கணிக்காமல் ஏற்றுக் கொள்ள வேண்டும். நெல்லில் உமி இருப்பது இயல்புதான். ஆனால் உமியை நீக்கி அரிசியைகொள்கிறோமே அன்றி நெல்லைப் புறக்கணிப்பதில்லை. நீரில் நுரை இருப்பதும் இயற்கையே, அதற்காக நீரை பருகாமல் இருப்பதில்லை. அழகான பூவிற்கு கீழ் முள்ளோ இலையோ இருப்பது இயல்புதான். அதை நீக்கி பயன்படுத்துவமே அன்றி, பூவை நாம் புறக்கணிப்பதில்லை. அதுபோல தேர்ந்து ஆராய்ந்து அன்பு கொண்டவரிடம் உள்ள, சில குறைகளை நீக்கி ஒதுக்கிவிட்டு அவரிடமுள்ள நற்குணங்களை மட்டும் எடுத்துக் கொள்ள வேண்டுமேயன்றி அவரை புறக்கணிக்கக் கூடாது.

இக்கருத்தையே மகான் வள்ளுவரும்,

கொன்றன்ன இன்னா செயினும் அவர்செய்த
ஒன்றுநன்று உள்ளக் கெடும்.

– திருக்குறள் – செய்ந்நன்றி அறிதல் – குறள் எண் 109.

முன்உதவி செய்தவர் பின்பு கொன்றாற் போன்ற துன்பத்தைச் செய்தாரானாலும், அவர் முன் செய்த ஒரு நன்மையை நினைத்தாலும் அந்தத் துன்பம் கெடும். – மு.வரதராசனார்.

என கூறும் மகான் வள்ளுவரே இன்னாசெய்யாமை என்ற அதிகாரத்தில்,

இன்னாசெய் தாரை ஒறுத்தல் அவர்நாண
நன்னயம் செய்து விடல்.

– திருக்குறள் – இன்னா செய்யாமை – குறள் எண் 314.

இன்னா செய்தவரைத் தண்டித்தல், அவரே நாணும்படியாக அவர்க்கு நல்லுதவி செய்து, அவருடைய தீமையையும் நன்மையையும் மறந்து விடுதலாகும். – மு.வரதராசனார்.

எனக் கூறுகிறார்.

முன்குறளில் துன்பம் செய்தவரும், நமக்கு முன் செய்த நன்மைகளை நினைத்து அவர் செய்த துன்பத்தை மறக்க வேண்டும் என்றார். மேலும் நமக்கு துன்பம் செய்தவருக்கே அவர் நாணும்படியாக நன்மை செய்ய வேண்டும் எனக்கூறுகிறார் மகான் வள்ளுவர். அவ்வாறிருக்க நமக்கு நன்மைகள் பலசெய்த அன்புடையவருக்கு துன்பம் செய்தல் என்பது பாவச்செயலாகும் என்கிறார் மகான் இராமலிங்க சுவாமிகள்.

34. குடிக்கின்ற நீருள்ள குளந்தூர்த்தேனோ!

மன்னர்கள் ஆட்சி காலத்தில் ஒவ்வொரு மன்னரும் தனது ஆட்சிக்குட்பட்ட கிராமங்களிலும், ஊர்களிலும் அந்தந்த கிராமங்களின் தன்மை மற்றும் அளவிற்கேற்ப ஆங்காங்கே குளங்களை வெட்டி அவற்றில் மழை பெய்தால் நீர் வந்து தேங்கும்படி அமைத்து அக்குளங்களில் நீரைதேக்கி, பாதுகாத்து கிராமமக்கள் குடிநீராக பயன்படுத்த ஏதுவாக குளங்களை அமைத்து அக்குளங்களை பாதுகாத்தும் வந்தார்கள்.

இப்படிப்பட்ட குளங்கள் அநேகம் நமது நாட்டில் உண்டு. ஒரு கிராமத்தில் செல்வந்தர் ஒருவர் ஆட்படையுடனும், செல்வத்துடனும் குளக்கரையில் வசித்து வந்தார். அக்குளத்திற்கு குடிநீர் எடுப்பதற்காக உயர்குல மக்களும், சாதாரணமானவர்களும், தாழ்த்தப்பட்ட வகுப்பினரும் வந்து பொதுக்குளத்தில் தண்ணீர் எடுத்து செல்வது வழக்கமாக இருந்து வந்தது.

அவ்வாறு நீர் எடுக்கும்போது நாகரீகமாக பேசும் பெண்களும் உண்டு, சிலர் அநாகரிகமான வார்த்தைகளால் ஒருவருக்கு ஒருவர் மோசமாக பேசிக்கொள்வதும் உண்டு. சில தாழ்த்தப்பட்ட இனத்தை சேர்ந்தவர்களும் வந்து நீர் கொண்டு செல்வதும் உண்டு. குளக்கரையில் வசித்துவந்த செல்வந்தர் குளத்தில் தினசரி பெண்கள் அநாகரிகமாக பேசுவதை பொறுக்காமலும், தாழ்த்தப்பட்ட வகுப்பினர்கள் அக்குளத்தை பயன்படுத்துவதை சகித்து கொள்ள முடியாமலும், தன்னிடமுள்ள பணபலத்தாலும், ஆட்பலத்தாலும் இரவோடு இரவாக ஒருநாள் நன்னீர் குளத்தை மூடிவிட்டார்.

ஒருசிலர் செய்த தவறுக்காக பொறுத்துக் கொள்ளாமல், தம்மிடமுள்ள செல்வபலத்தால், ஆள்பலத்தால் ஊராருக்கு பயன்பட்டு வந்த அந்த ஒரே

குளத்தை மூடிவிட்டதால், ஊர் மக்களோ அவரது பணபலத்தின் முன்னும், ஆள்பலத்தின் முன்னும் ஒன்றும் செய்ய முடியாமல் தவித்தனர். வேறு வழியின்றி ஊர்மக்கள் சுமார் இரண்டு கிலோ மீட்டர் தொலைவில் உள்ள பக்கத்து கிராமத்திற்கு சென்று குடிநீர் கொண்டு வந்து மிகுந்த சிரமத்துடன் வாழ்ந்து வந்தார்கள்.

நாளடைவில் பக்கத்து கிராமத்து மக்களும் நீங்கள் இங்கே வந்து தண்ணீர் எடுத்து செல்லக்கூடாது என தண்ணீர் எடுப்பதற்கு தடை செய்தார்கள். இதனால் அந்த கிராமமக்கள் குடிப்பதற்கு கூட நல்ல தண்ணீர் கிடைக்காமல், குடிப்பதற்கு தகுதியற்ற உப்பு தண்ணீரையே குடிப்பதற்கும் பயன்படுத்தி மிகவும் கஷ்டப்பட்டார்கள்.

அந்த ஊர்மக்களின் வேதனையானது அந்த செல்வந்தரை தாக்கி, அந்த செல்வந்தருக்கு பாவம் சேர்ந்தது. இந்த ஜென்மத்தில் கடவுள் அருளால் கிடைத்த செல்வத்தினை பயன்படுத்தி நற்காரியங்கள் செய்யாமல் செல்வச் செருக்கால் குடிக்கின்ற நீருள்ள குளத்தை தூர்த்து பெரும்பாவத்தை சேர்த்ததால் அடுத்த ஜென்மத்தில் அவர் பெற்ற புண்ணியத்தை இழந்து, செல்வமழிந்து, வறுமைக்கு ஆட்பட்டு உண்ண உணவின்றி, உடுக்க உடையின்றி, குடிக்க நீரின்றி மிகுந்த கஷ்டத்திற்கு ஆளாக நேரிடும் என்பதை உணரவேண்டும்.

ஜீவகாருண்ய வள்ளலும், அருட்பெருட்ஜோதி ஆண்டவருமாகிய மகான் இராமலிங்க சுவாமிகள் "குடிக்கின்ற நீருள்ள குளந்தூர்த்தேனோ" என கூறுவதன் மூலம், பொதுமக்கள் பயன்படுத்தும் குடிநீர் குளத்தை தமது சொந்த நலனுக்காக தூர்ப்பது பாவச்செயலாகும் எனக் கூறுகிறார்.

35. வெய்யிலுக் கொதுங்கும் விருட்ச மழித்தேனோ!

மன்னர்கள் காலத்தில் மக்கள் பயணம் செய்யும் வழித்தடங்கள் மற்றும் பொது இடங்களில் ஆலமரம், அரசமரம், வேம்பு போன்ற கோடையிலும் குளிர்ச்சியான நிழலைத் தரக்கூடிய மரங்களை நட்டு வளர்த்து வருவார்கள். அம்மரத்தின் நிழலில் வழிப்போக்கர்கள் தங்கி இளைப்பாறுவார்கள்.

மேலும் ஆடு, மாடு போன்ற கால்நடைகளும் இளைப்பாறும். அதோடு மட்டுமன்றி ஆயிரக்கணக்கான பறவைகள் அந்த மரத்தில் தங்குவதோடு அம்மரத்திலுள்ள கனிகளை உணவாக உண்டும் வாழ்ந்திருக்கும்.

பங்குனி, சித்திரை போன்ற கோடைகாலங்களில் வெயிலின் கொடுமை தாங்காமல் கால்நடைகளும், மனிதர்களும் அம்மரம் தரும் குளிர்ந்த நிழலில் தங்கி இளைப்பாறி களைப்பு நீங்கி செல்வார்கள். இரவு நேரங்களில் சுமார்

பத்து மணிக்கு மேலாக சென்றால் அங்குள்ள பறவைகள் ஒன்றோடு ஒன்று இனிமையாக தனது பாஷைகளில் (பறவை மொழிகளில்) பேசிக் கொள்வதையும் கேட்க முடியும்.

இவ்வாறு எல்லா ஜீவராசிகளுக்கும் ஆதரவாக அம்மரம் இருக்கும். அம்மரத்தினை ஒட்டி பல ஏக்கர் நிலத்திற்கு சொந்தமான நிலக்கிழார் ஒருவரின் விளைநிலம் இருக்கும். இம்மரத்தின் நிழலானது அவரது நிலத்தில் படுவதால், நிழலடிப்பட்டு விளைச்சல் குன்றி விடும் என்று கருதி மனிதர்களுக்கும், கால்நடைகளுக்கும், பறவைகளுக்கும் பயன்தந்த அந்த மரத்தை தனது பணபலத்தாலும், ஆள்பலத்தாலும் சற்றும் யோசிக்காமல் வெட்டிவிட்டார்.

இதனால் கால்நடைகள் கோடைகாலங்களில் ஒதுங்க நிழலின்றி தவித்தன. வழிப்போக்கர்களும் துன்பப்பட்டார்கள். அங்கு வசித்த பறவைகளும் வசிக்க முடியாமல் போய்விட்டது. தனது சுயநலத்திற்காக பல உயிர்களுக்கு ஆதரவாக வெயிலிற்கு நிழல் கொடுத்த மரத்தை அழிப்பது பாவச்செயலாகும் என மகான் இராமலிங்க சுவாமிகள் கூறுகிறார்கள்.

பல உயிர்களுக்கு பயன்பட்டு வந்த நிழல் தரும் விருட்சத்தை (மரம்) அழித்ததால், அதனால் பாதிக்கப்பட்ட உயிர்களின் பாவம் சூழ்ந்து அம்மரத்தை வெட்டிய நிலத்துக்காரருக்கு பொல்லாத நோயும் வந்து, நோயை தீர்க்க தனது நிலங்களை விற்று நோயை தீர்த்ததனால், பொல்லாத வறுமையும் சூழ்ந்து மிகவும் அல்லலுற்ற வாழ்க்கை வாழ நேரிடும் என்பதை உணரவேண்டும்.

குறிப்பு : இரவு பத்து மணிக்கு மேல் அரசமரம், ஆலமரம் போன்ற மரங்களின் கீழ் சென்றால் அம்மரங்களிலுள்ள பறவைகள் ஒவ்வொன்றும் தம்தம் பாஷைகளில் இனிமையாக பேசிக்கொள்வதை கேட்டு மகிழலாம். இது எங்களது அனுபவம்.

36. பகைகொண்டு அயலோர் பயிரழித்தேனோ!

மன்னர்கள் காலத்தில் விவசாய நிலங்களுக்கு நீர்பாசனம் செய்வதன் பொருட்டு மழைக்காலங்களில் பெய்யும் மழைநீரைத் தேக்கி வைப்பதற்காக மழைநீர் செல்லும் பாதைகளில் வாய்ப்பான இடங்களில் குளங்கள், ஏரிகள் போன்றவற்றை அமைத்து அதன்மூலம் நிலங்களுக்கு நீர்பாசன வசதி செய்து தந்தார்கள்.

வீரநாராயணபுரம் (வீரானம்) ஏரி, மதுராந்தகம் ஏரி போன்றவைகளும் சோழர்கள் காலத்தில் மக்கள் வசதிக்காக ஏற்படுத்தப்பட்ட ஏரிகள்தாம்.

இதுபோன்று அமைக்கப்பட்ட ஏரிகளில் இருந்து அதன் அருகிலுள்ள நிலங்களுக்கு முறைவைத்து நீர்பாசனம் செய்வதுண்டு. அதை கண்காணிக்கும் பொருட்டு அந்த கிராமங்களில் ஒருவரை தேர்ந்தெடுத்து அவர் மூலமாக பாசனவசதியை பராமரிப்பார்கள். அவர் கரைக்காரர் எனப்படுவர்.

அவ்வாறு பாசனத்திற்கு நீர் பாய்ச்சுவதில் ஏற்படும் பிரச்சனைகளுக்கு ஊர் சபையில் பொதுவில் தீர்ப்பளிக்கும் பழக்கம் உண்டு. இவ்வாறு உள்ள சமயத்தில் ஏரியை ஒட்டி பல ஏக்கர் நிலம் உள்ள ஒரு பெரிய நிலக்கிழார் தமது நிலங்களை வைத்து விவசாயம் பண்ணிக் கொண்டிருந்தார். அவரது நிலத்திற்கு முன்னதாக ஏரியின் அடிகரையில் ஏழை விவசாயி தனது ஒரு ஏக்கர் நிலத்தை வைத்து பயிரிட்டு விவசாயம் செய்து, அதை வைத்து வாழ்க்கை நடத்தி வந்தார்.

நிலக்கிழார் அவ்விவசாயிக்கு வாழ்வாதாரமாக இருந்த அந்த ஒரு ஏக்கர் நிலத்தை தனக்கு விற்கும்படி பலமுறை அவனை கட்டாயப்படுத்தினார். ஆனால் அந்த ஏழை விவசாயியோ தனக்கு இருப்பது இந்த நிலம் ஒன்றுதான். இதை வைத்துதான் வாழ்க்கை நடத்தி வருகிறேன். இதையும் விற்றுவிட்டால் என்னால் வாழ்க்கை நடத்த இயலாது எனக்கூறி விற்க மறுத்து விட்டார். இதனால் கோபமுற்ற அந்த நிலக்கிழார் அவ்விவசாயி நிலத்தின் வழியாக செல்லும் நீர்மடையை அடைத்து வேறுபக்கமாக திருப்பி தனது நிலங்களுக்கு நீர் பாய்ச்சும்படி செய்து அவ்விவசாயிக்கு நீர் கிடைக்காமல் விவசாயத்தை சீர்குலைத்தார்.

இதனால் மனம்வருந்திய ஏழைவிவசாயி ஊர்சபை மற்றும் கரைக்காரரிடம் கூறி நியாயம் வேண்டினார். ஊர்சபையும் அந்த நிலக்கிழாரை அழைத்து விசாரித்து நீங்கள் செய்தது தவறு அந்த ஏழை விவசாயிக்கு முறைப்படி சேரவேண்டிய பாசனவசதியை தரவேண்டும் என தீர்ப்பளித்து நிலக்கிழாரை கண்டித்தனர்.

ஊர் பொதுமக்கள் முன்னிலையில் இவ்வாறு ஊர்சபை கண்டித்ததினால் ஊர் பொதுமக்கள் முன்னிலையில் அவமானப்பட நேரிட்டதே என அந்நிலக்கிழார் மனதில் பெரும் கோபத்துடன் விவசாயியை பழிவாங்கும் பொருட்டு காத்திருந்தார்.

அறுவடை சமயம் ஏழை விவசாயி வயலில் பயிர்கள் அறுவடை பருவம் எட்டி அறுவடை செய்ய வேண்டிய தருணத்தில் பழிஉணர்ச்சி கொண்ட அந்த நிலக்கிழார் தனது ஆட்களைக் கொண்டும், தம்மிடமுள்ள கால்நடைகளைக் கொண்டும் ஏழைவிவசாயி நிலத்தில் விளைந்து அறுவடைக்கு தயாராக உள்ள பயிர்களை, அழித்து நாசம் செய்து ஒன்றுமில்லாமல் செய்து விட்டார்.

இதைக்கண்ட ஏழை விவசாயி மனம் நொந்து அல்லலுற்றார். மிகுந்த வேதனைக்குள்ளாகி தனக்கென்றிருந்த அந்த வருட மகசூல் இல்லாமல் மிகுந்த சிரமத்திற்கு உள்ளானார். அவன் மனம் நொந்த அந்த பாவம் அந்நிலக்கிழாரை கடுமையான நோயில் ஆழ்த்தி அல்லலுறச் செய்து பலவிதமான நோய்கள் வந்து மிகுந்த துன்பத்திற்கு உள்ளாக்கியது. இறுதியில் அதன்பயனாய் தனது நிலத்தையும் இழக்க வேண்டி வந்தது. "பகைகொண்டு அயலார் பயிரழிப்பது" பாவம் என மகான் இராமலிங்க சுவாமிகள் கூறுவதை உணரவேண்டும்.

37. பொதுமண்டபத்தைப் போயிழத்தேனோ!

மன்னர்கள் காலத்தில் ஒவ்வொரு ஊரிலும் அவ்வூரில் வசித்து வரும் ஊனமுற்றோர் முதியோர் ஆதரவற்றோர்கள் தங்கும் பொருட்டும் வழிப்போக்கர்கள் தங்கி இளைப்பாறும் பொருட்டும் மண்டபங்கள் கட்டி வைத்து அவற்றை பொது பயன்பாட்டிற்கு விடுவதுண்டு.

அவ்வாறு உள்ள மண்டபங்களில் உள்ள ஊனமுற்றோர் மற்றும் முதியோர்களுக்கு உணவுதரும் பொருட்டு சில நல்ல உள்ளம் படைத்தோர் அன்னக்காவடி எடுப்பது உண்டு. அன்னக்காவடி என்பது ஒரு மொத்தமான கோலின் இருமுனையிலும் இரண்டு பாத்திரங்களை கட்டி தொங்க விட்டிருப்பார்கள். அவற்றில் ஒன்றில் உணவும் மற்றொன்றில் அதற்கு தேவையான குழம்பு போன்றவைகளும் வாங்கிவருவதற்காக ஒரு பாத்திரமும் இருக்கும்.

இவ்வாறு உள்ள அன்னக்காவடியை எடுத்து ஊரிலுள்ள வீடுகளுக்கு சென்று அன்னக்காவடி என சத்தமிடுவார்கள். வீட்டிலுள்ளோர் தருமம் செய்யும் பொருட்டு அவருக்கு தேவையான உணவையோ அல்லது குழம்பு போன்றவற்றையோ தருவார்கள். இவ்வாறு அன்னக்காவடி சுமப்போர் ஒவ்வொரு வீடாக சென்று உணவு சேகரித்து அதை பொது மண்டபத்தில் தங்கியிருக்கும் ஊனமுற்றோர் மற்றும் முதியோர்களுக்கும், அநாதைகளுக்கும் அளித்து அவர்கள் மனமாற உண்டு மகிழும்படி செய்வார்கள்.

அவ்வுணவினை உண்டவர்கள் இரவு நேரங்களில் உறங்குவதற்கு சற்று நேரமாகும். முதியவர்களுக்கு பெரும்பாலும் இரவில் உறக்கம் வருவதற்கு வெகுநேரம் ஆகும். மேலும் சரியாக உறக்கம் வராது. எனவே அவர்கள் இரவு பத்து மணிக்கு மேலாகவும் தங்களுக்குள்ளாக பேசிக்கொண்டு இருப்பார்கள்.

இவ்வாறு இருக்கும் பொழுது அந்த மண்டபத்தை ஒட்டியுள்ள மாடிவீட்டுக்காரர் இரவில் இந்த பெரியவர்கள் பேசுவதை, பெரியவர்கள்தானே ஏதோ பேசிவிட்டு போகிறார்கள் என படுத்துக் கொள்ளாமல் அவர்கள் பேசுவது தனது உறக்கத்தை கெடுப்பதாக எண்ணி தனது செல்வ பலத்தாலும், ஆள் பலத்தாலும் பொது மண்டபத்தை இடித்து விட்டார்.

இதனால் அந்த மண்டபத்தை நம்பி வாழ்ந்த ஊனமுற்றவர்களும், வயதானவர்களும், அநாதைகளும் நடுத்தெருவிற்கு வந்து தங்குவதற்கு இடமின்றி மரங்களுக்கு அடியில் தங்கி, வெயிலிலும் மழையிலும் அல்லலுற்றார்கள். அவ்வூர் வழியாக செல்லும் வழிப்போக்கர்களும் தங்கி செல்ல மண்டபமின்றி அல்லலுற்றார்கள். மண்டபத்தை இடித்தவர்கள் மீது மனவேதனைபட்டார்கள்.

இறுதியில் அவர்களது மனவேதனை அம்மாடி வீட்டுக்காரரை தாக்கி கடுமையான நோய்களுக்கு ஆளாகி இறுதியில் கொடுமையான துன்பத்துடன் கூடிய மரணத்தை அடைந்தார்.

அம்மண்டபத்தின்கண் தங்கியிருந்த ஊனமுற்றவர்களுக்கும் வயதானவர்களுக்கும் அன்னக்காவடி எடுத்து உணவளித்த அந்த நபர் அரசாளும் மன்னருக்கு நிகரான பதவியினைப் பெற்று சீரும்சிறப்புமாக வாழ்ந்தார். இதை மகான் அதிவீரராம பாண்டியர் தமது வெற்றி வேற்கை என்ற நீதிநூலில் குறிப்பிடுகிறார்.

அறத்துஇடு பிச்சைகூவி இரப்போர்
அரசரோடு இருந்து அரசாளினும் ஆள்வர்.

– வெற்றி வேற்கை – கவி எண் 52.

எனவே பிறர் வாழ பிச்சை எடுத்தாகிலும் தர்மம் செய்வோர் மன்னருக்கு நிகரான பதவியைப் பெறுவார் என்பதும் அவர்கள் தங்கிய பொதுமண்டபத்தை இடித்து பாவம் சேர்த்தால் துன்பமான மரணம் நேரிடும் என்பதையும் உணர்ந்து கொள்ள வேண்டும். இதையே “பொதுமண்டபத்தை போயிடிப்பது பாவம்” என மகான் இராமலிங்க சுவாமிகள் கூறுகிறார்.

குறிப்பு :– கடவுள் உண்டு என்றும் பாவபுண்ணியங்கள் உண்டென்றும் நம்புகின்றவர்கள் புண்ணியவான்களாவார்கள். அவர்கள் மற்ற உயிர்களுக்கு நன்மைகள் செய்து மகிழ்ச்சி அடைவார்கள். பாவிகளோ கடவுள் இல்லை பாவபுண்ணியம் இல்லை என்று மற்ற உயிர்களுக்கு துன்பம் செய்து மகிழ்ச்சி அடைவார்கள்.

38. ஆலயக் கதவை அடைத்து வைத்தேனோ!

மனிதன் ஆறறிவு படைத்தவன். ஆறறிவு படைத்த மனிதன் அறிவு வந்த போது கடவுள் உண்டென்று நம்பினான். பாவபுண்ணியம் உண்டென்றும் கடவுள் என்றொருவர் உண்டு என்றும் நம்பிய மனிதன் கடவுளுக்கென்று ஆலயம் அமைத்து அங்கு சென்று வழிபாடு செய்து தனது இறை நம்பிக்கையை வளர்த்து கொண்டான்.

ஒரு மனிதன் ஆன்மீக வாழ்வில் கடைத்தேற வேண்டுமெனில் அதன் முதற்படி ஆலய வழிபாடுதான் என்பதை உணர வேண்டும். இவ்வாறு கட்டப்பட்ட ஆலயங்கள் ஆயிரக்கணக்கில் நமது நாட்டில் உள்ளது. அவற்றுள் மகான் திருஞானசம்பந்தர், மகான் திருநாவுக்கரசர், மகான் சுந்தரமூர்த்தி நாயனார், மகான் மாணிக்கவாசகர், மகான் அருணகிரிநாதர் போன்ற முதுபெரும் ஞானிகளால் போற்றி வணங்கி பாடல்பெற்ற ஸ்தலங்கள் ஆயிரக்கணக்கில் உள்ளது. இவ்வாறு தொன்று தொட்டு வணங்கி வரும் ஆலயவழிபாடு மனிதசமுதாயத்திற்கு தேவை என்பதை முதுபெரும் ஞானி மகான் ஔவையார் அவர்கள் தமது கொன்றை வேந்தன் எனும் நூலில்

ஆலயம் தொழுவது சாலவும் நன்று.

– கொன்றை வேந்தன் – 2

எனக் குறிப்பிடுகிறார். மேலும் உலகநாதப்புலவரும் தமது உலகநீதி எனும் நூலில்

குற்றமொன்றும் பாராட்டித் திரிய வேண்டாம்
 கொலைகளவு செய்வாரோடு இணங்க வேண்டாம்
கற்றவரை ஒருநாளும் பழிக்க வேண்டாம்
 கற்புடைய மங்கையரைக் கருத வேண்டாம்
கொற்றவனோடு எதிர்மாறு பேச வேண்டாம்
 கோயிலில்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்
மாற்றுநிகர் இல்லாத வள்ளி பங்கன்
 மயிலேறும் பெருமாளை வாழ்த்தாய் நெஞ்சே!

– உலக நீதி – கவி எண் 4.

என்று கூறுகிறார். மகான் ஔவையார் ஆலயம் தொழுவது நன்று என்று குறிப்பிடாமல் சாலவும் நன்று எனக்கூறுவதன் மூலம் ஆலய வழிபாட்டின் அவசியத்தை உணர வேண்டும். உலகநாதப்புலவரோ கோயிலில்லா ஊரில் வசிக்க வேண்டாம் எனக்கூறுவதால் ஆலய வழிபாட்டின் சிறப்பை உணரலாம்.

ஞானவாழ்வு என்பது நான்கு படிக்கட்டுகளை கொண்டதாகும். அவை சரியை, கிரியை, யோகம், ஞானம் என்பதாகும்.

சரியை என்பது முதற்படியாகும். நெறிக்கு உட்பட்டு பொருள் சேர்த்தும், தாய்தந்தை, மனைவி, மக்கள், அன்புடைய சுற்றத்தார், பண்புள்ள நண்பர்கள் இவர்களுக்கு உதவிகரமாக இருந்தும் தம்மை நோக்கி வரும் விருந்தை உபசரித்தும் பசித்த ஏழைகளுக்கு பசியாற்றுவிப்பதும் உயிர்க்கொலை தவிர்த்தும், புலால் மறுத்தும், ஜீவகாருண்யத்தோடு வாழ்ந்து வருவதே சரியை மார்க்கமாகும்.

கிரியை மார்க்கம் என்பது இரண்டாம் படியாகும். உண்மைப்பொருள் உணர்ந்தவர்கள் இறைவனை வழிபடும் முறையை உபதேசித்தப்பின் அதனடிப்படையில் ஆலயத்திற்கு சென்று வழிபடும் கோவில் வழிபாடே கிரியை மார்க்கமாகும்.

ஆகம முறைப்படி அமைக்கப்பட்ட சிவாலயங்களில் நமது உடல் தத்துவத்தைத்தான் அடிப்படையாக வைத்து ஆலயங்களை அமைத்துள்ளார்கள். ஆலயத்தின் முகப்பு வாசலில் விநாயகரும், சுப்ரமணியரும் இருப்பார்கள்.

வாசி வசப்பட்டவர்களுக்கு தமது உடலில் முதலில் தோற்றம் தருவது ஒரு பதுமை போன்ற பெண்ணும், தும்பிக்கை போன்ற ஒரு முகம் தோன்றும். அதை குறிக்கவே விநாயகர் உருவம் வைக்கப்பட்டுள்ளது. இதை அறிய வேண்டுமெனில் முதுபெரும் ஞானத்தலைவனாகிய சுப்ரமணியர் ஆசி இல்லாமல் அறிய முடியாது என்பதை உணர்த்தவே சுப்ரமணியரையும், விநாயகரையும் முகப்பில் அமைத்துள்ளனர்.

அதைக்கடந்து நுழைந்தால் நுழைவாயிலில் சூரியன், சந்திரன் உருவங்கள் பொறிக்கப்பட்டிருக்கும். அந்த உருவங்கள் இடகலையாகிய சந்திரகலையையும், பின்கலையாகிய சூரியகலையையும் குறிக்கும்.

ஆலயப் பிரவேசத்தின் போது இடது புறமாக செல்லச் சொல்வார்கள். அதுபோலவே வாசிப்பயிற்சியில் நுழையும்போது இடது பக்கமாகிய இடகலையில் செல்லவேண்டும். பின்னர் இப்பயிற்சி செய்து வெற்றிபெற வேண்டுமெனில் தலைவனாகிய சுப்ரமணியர் ஆசி வேண்டும். ஆனால் அவரது ஆசிபெற வேண்டுமெனில் குருவினது ஆசி வேண்டும்.

ஆகவே இடதுபுறம் குருவை குறிக்கும் வண்ணம் குருவாகிய தட்சணாமூர்த்தி சிலையை வைத்திருப்பார்கள். அந்த குருவின் சிலை தென்திசையில் இருக்கும். தென்திசை அதிபதியாகிய எமனை வெல்ல வேண்டுமெனில் அதாவது மரணமில்லா பெருவாழ்வு பெற வேண்டுமெனில், தென்திசையை காக்கும் தட்சிணாமூர்த்தியாகிய குருவின் அருள் வேண்டும்.

அகத்தியரைத்தான் குரு தட்சணாமூர்த்தி என கூறுவர். அதாவது தென்திசையை காப்பவர். அதாவது எமனை அவனது செயலைத் தடுத்து நம்மை காப்பவர், எமபயத்தை தடுப்பவர்.

இப்படிப்பட்ட குருநாதனாகிய தட்சிணாமூர்த்தி ஆசி பெறாமல் அவருக்கு அடுத்தபடியாக மேற்புறம் உள்ள ஞானத்தலைவனான சுப்ரமணியரது ஆசிபெற இயலாது. சுப்ரமணியரைத் தரிசித்து மேலும் வலப்புறமாக வந்தால் காளியையும், சண்டிகேசரையும் வைத்திருப்பார்கள்.

வாசிவசப்பட்ட ஒருவர் யார் இகழ்ந்தாலும், புகழ்ந்தாலும் அவற்றை இலட்சியம் செய்யாமல் தவம் செய்வதை மட்டுமே குறிக்கோளாக இலட்சியமாகக் கொண்டு தவத்தை இடையறாது மேற்கொள்ள வேண்டும். இலட்சியம் செய்தால் தவத்தை இழந்துவிட வேண்டிவரும்.

ஆகவே தவம் மேற்கொள்பவர் மானாபிமானம் விட்டு ஒரே குறிக்கோளாக தவத்தை மேற்கொண்டால் மூலக்கனல் தோன்றும் என்பதை குறிக்க யோகநிலையில் உள்ள மகான் சண்டிகேசர் உருவத்தை அமைத்துள்ளார்கள்.

அப்பேர்ப்பட்ட தவசிகளை அழைத்து மனமுருகி வேண்டுகோள் விடுத்தால் மட்டுமே அவர்கள் யோகநிஷ்டையிலிருந்து நம்மை கவனிப்பார்கள் என்பதை குறிக்கவே கைதட்டி சப்தம் எழுப்பும் முறையை வைத்துள்ளார்கள். அவ்விதம் இடையறாது தவம் மேற்கொள்ள மூலக்கனல் தோன்றும் என்பதை குறிக்க சண்டிகேசருக்கு எதிரில் காளிசிலை அமைத்திருப்பார்கள்.

ஏனெனில் மூலக்கனல் தோன்றியவுடன் நமது தேகம் அளவுகடந்த வெப்பத்தினால் கொதிப்படைந்து காளி போன்று மிகுந்த துன்பத்திற்குள்ளாகும். அந்த வெப்பத்தினால்தான் அறியாமையாகிய எருமையையும், மும்மலமாகிய அசுரனையும் வதம் செய்ய முடியும் என்பதைக் குறிக்கவே காளிஉருவம் அமைக்கப்பட்டுள்ளது.

அறியாமையும், அதன்பின் மும்மலக்குற்றமும் நீங்கநீங்க காளியாகிய மிகுவெப்பம் படிப்படியாக குறைந்து சாந்தமே வடிவான தாய் போன்று இந்த உடம்பு மாறிவிடும். அதைக்குறிக்க அருகில் தாயார் (சக்தி) சன்னதி வைத்திருப்பார்கள்.

அதாவது மூலக்கனல் தோன்றி படிப்படியாக மிகுதியாகி காளி போன்று அதிகமாகி பின்னர் அதுவே மாசுள்ள தேகம் சுத்தமாகி குளிர்ந்து தாய்போல மாறிவிடும் என்பதை குறிக்கிறது.

ஆலயத்தில் முதலில் நேராக பலிபீடம் இருக்கும். அது நம்மிடமுள்ள தீயகுணங்களையெல்லாம் வதம் செய்ய வேண்டும் என்பதை குறிக்க வைத்துள்ளனர். அவ்வாறு தீயகுணங்களை வதம் செய்தால்தான் மூலக்கனல் தோன்றும். அதற்கு முக்கியமானதும் மூலமுமாக இருப்பது வினாத்தண்டாகும்.

அந்த வினாத்தண்டை அதாவது முதுகெலும்பை குறிக்க கொடிமரம் வைத்துள்ளார்கள். அந்த கொடிமரத்தின் உச்சியில் மணிகள் கட்டி

தொங்கவிடப்பட்டிருக்கும். அதாவது இந்த வகையில் வினாத்தண்டில் வாசிப்பயிற்சியின்போது மூலக்கனலானது மேலே செல்லசெல்ல இறுதியில் மணியோசை கேட்கும். அதைக்குறிப்பதற்காகவே மணியை அமைத்துள்ளார்கள்.

அந்த மணிகள் மூன்று வரிசைகளாக குறுக்காக கட்டைகளில் அமைக்கப்பட்டிருக்கும். அது நமது உடம்பில் வினாத்தண்டின் மையத்தில் மயிரிழை போன்ற நரம்பு ஒன்று உள்ளது. அது மூலாதாரத்திலிருந்து துவங்கி கண்டஸ்தானம் வரை சென்று பின் பின்னி மூன்று பிரிவுகளாக பிரிந்து இரண்டு பிரிவுகள் கண்ணிற்கு மேலும் மற்றொன்று புருவமத்தியில் ஆலவிழுதுபோல் தொங்கி தொட்டுக் கொண்டிருக்கும்.

இந்த மூன்று நாடிகளை குறிக்கவே மூன்று வரிசைகளாக அமைத்துள்ளனர். இந்த அளவு மூலக்கனல் உச்சியை புருவமத்தியை சென்றடைந்தால் தசநாதமும் நம்முள் கேட்கும். நந்தி என்பது மூச்சுக் காற்றாகும். கருவறையில் உள்ள மூலவரே ஆன்ம ஜோதியாகும். அந்த கருவறைக்கு நேராக மூலவரை மறைத்து பலிபீடமும், நந்தியும், கொடிமரமும் இருக்கும்.

அதாவது இவற்றையெல்லாம் கடந்தால்தான் ஆன்மஜோதி வெளிப்படும். மூலவருக்கு முன்உள்ள சிறு பலிபீடம் மும்மலக்குற்றத்தை முற்றிலும் பலியிட்டால்தான் ஆன்மஜோதி வெளிப்படும் என்பதை குறிக்க அமைத்துள்ளார்கள்.

மணிகடல் யானை வார்குழல் மேகம்
அணிவண்டு தும்பி வளைபேரி கையாழ்
தணிந்தெழு நாதங்கள் தாமிவை பத்தும்
பணிந்தவர்க் கல்லது பார்க்கஒண் ணாதே.
– திருமந்திரம் – தியானம் – கவி எண் 606.

நடுவுநில் லாதிவ் வுலகஞ் சரிந்து
கெடுகின்ற தெம்பெரு மானென்ன ஈசன்
நடுவுள அங்கி அகத்திய நீபோய்
முடுகிய வையத்து முன்னிரென் றானே.
– திருமந்திரம் – அகத்தியம் – கவி எண் 337.

அங்கி உதயம் வளர்க்கும் அகத்தியன்
அங்கி உதயஞ்செய் மேல்பா லவனொடு
மங்கி உதயஞ்செய் வடபால் தவமுனி
எங்கும் வளங்கொள் இலங்கொளி தானே.
– திருமந்திரம் – அகத்தியம் – கவி எண் 338.

நடுவு என்ற புருமத்தியாகிய சுழிமுனை இரகசியத்தை அறியாமல் இந்த உலக மக்கள் அழிந்து போகிறார்கள் என்பதற்காக உலக மக்கள்பால் கருணைகொண்ட இறைவன் உலக மக்களை காக்கவேண்டும் என்று மகான் அகத்திய பெருமானை அனுப்பினார்.

அவ்வாறு அனலேறி அடங்கிய தேகம் சுமார் எட்டு முதல் பத்து வருடங்கள் வரை சாந்தமாக இருக்கும். அந்த காலகட்டத்தில் தேகத்தை மீண்டும் வலுவுள்ளதாக மாற்றி, பின்னர் மீண்டும் நந்தியாகிய மூச்சுக்காற்றை இயக்கி தவத்தை மேற்கொண்டு படிப்படியாக கனலேற்ற அது அதிவேகமாக சென்று தேகத்திலுள்ள அனைத்து குற்றங்களையும், மும்மலக்குற்றத்தையும் முற்றிலும் அழித்து புருவமத்தியாகிய சுழிமுனையை தாக்கி ஜோதியை தோன்ற செய்யும். அந்த ஜோதியே ஆன்மஜோதி அதாவது சிவலிங்கமாகும். இதுவே இறுதிநிலையாகும்.

ஆன்மஜோதி தரிசனம் கிடைக்கப்பெற்றவர்களுக்கு மரணமில்லை என்பதை குறிக்கவே ஆலயங்களை அமைத்தனர்.

மேற்கண்ட தத்துவங்களில் கடுகளவுதான் சொல்லப்பட்டுள்ளது. உடம்பை குறித்த இரகசியங்கள் கடல்போன்று உள்ளது. இவையனைத்தும் குருஅருளால்தான் அறிந்து கொள்ள முடியும்.

கோயில் வழிபாட்டில் பக்தி செலுத்தி இறையருள் பெற்றவர்களுக்கு ஞானிகள் யோகமார்க்கத்தை உபதேசிப்பார்கள். அவ்வாறு உபதேசம் பெறும் யோகமார்க்கம் என்பது இடகலையாகிய சந்திரகலையையும், பின்கலையாகிய சூரியகலையைப் பற்றியும், புருவமத்தியாகிய சுழிமுனைப்பற்றியும் அவற்றின் தன்மைகள் பற்றியும் அவற்றின் செயல்முறைகள் பற்றியும் சொல்லுவதே யோகமார்க்கமாகும்.

இவ்வாறு குருவருளால் பெறப்பட்ட யோகத்தினால் அக்குருவின் துணையுடனும், ஆசியுடனும் இடகலையையும், பின்கலையையும் இரேசித்து, பூரித்து, புருவமத்தியில் ஸ்தம்பித்தால் அக்காற்று மூலாதாரத்தில் தங்கி மூலக்கனல் தோன்றும், அதன் காரணமாக தேகக்கசடாகிய, அதற்கு காரணமாகிய மும்மல குற்றம் நீங்கி புருவமத்தியாகிய சுழிமுனை கதவு திறக்கும்.

சுழிமுனை கதவு திறந்தவுடன் ஆசான் சுப்ரமணியரே வந்து உடம்பைசார்ந்து கனலை எழுப்புகின்ற முறையை உணர்த்தி, கனலை எழும்பச்செய்து கண்டஸ்தானத்தில் காற்றை நிறுத்தி புருவமத்தியில் காற்றை இழுக்கச் செய்து ஸ்தம்பிக்கச் செய்வார்.

அப்போது கனலானது வினாத்தண்டின் வழியாக வந்து உள்நாவில்

மோதும், மேலும் செல்லவிடாமல் உள்நாவில் ஊசிமுனை அளவுள்ள ஐவ்வொன்று அடைத்திருக்கும். அந்த ஐவ்வை கரைப்பதற்காக அனலை ஏற்றி மீண்டும் மீண்டும் ஸ்தம்பிப்பார்கள். அனலானது மேலும்மேலும் படிப்படியாக ஏறி உள்நாவிலுள்ள ஜவ்வில் மோதி அந்த ஜவ்வை கரைத்துவிடும்.

அந்த ஜவ்வை கரைத்தவுடன் மீண்டும் காற்றை உள்ளிழுத்து ஸ்தம்பிக்க ஸ்தம்பிக்க அக்காற்றானது உள்நாவிலுள்ள ஜவ்வையும் தாண்டி மேல்நோக்கி சென்று கபாலத்தை அடைந்து அமிர்தத்தை சிந்தும்.

அந்த அமிர்தத்தை உண்டால் அந்த அமிர்தம் நமது உடம்பில் கலந்தால் தேகமானது ஒளி தேகமாக மாறும். அவ்வாறு ஒளிதேகமாக மாறிய தேகத்தின்கண் உள்ள புருவமத்தியில் சந்திரஒளி, சூரியஒளி, அக்னிஒளி ஆகிய மூன்றும் மாறிமாறி தோன்றும். அந்த ஜோதியானது காண்பதற்கு பரவசமாகவும், சொல்லொண்ணா மகிழ்ச்சியையும் உண்டுபண்ணும். சிந்துகின்ற அமிழ்தபானமே மரணமில்லா பெருவாழ்வைத் தரும்.

மகான் மஸ்தான்சாகிபு அவர்கள் தமது ஆனந்தக்களிப்பு என்று நூலில்

சொற்கடங் காச்சுக ஞானம் – தன்னிற்
சும்மாவிருக்குஞ் சுகமதே மோனம்
எட்கிடை யாயினும் பானந் – தன்னை
எடுத்துண் டிருப்பதற் கிச்சித்தே யானும்.
– மகான் மஸ்தான் சாகிபு – ஆனந்தக்களிப்பு– கவிஎண் 245.

ஆடிய கூத்தினைப் போற்றி – அருள்
ஆனந்தஞ் சேரர்க்கு அருளினிற் றோற்றி
ஓடிய காற்றினை யேற்றி – அதில்
உருகியொழுகும மிர்தத்தைத் தேற்றி.
– மகான் மஸ்தான் சாகிபு – ஆனந்தக்களிப்பு– கவிஎண் 256.

என மேற்கண்டவாறு கூறுவதன் மூலம் உணரலாம். ஆன்மீக வாழ்வின் முடிவாகிய மரணமில்லா பெருவாழ்வாகிய முற்றுப்பெற்ற நிலையாகிய பேரின்ப வாழ்வை அடைய வேண்டும் எனில் நான்கு படிகளையும் கடைப்பிடிக்க வேண்டும்.

அப்பேரின்ப நிலையை அடைவதற்கு முதற்படியாக இருப்பதே கோயில் வழிபாடாகும். அதாவது ஆலய வழிபாடாகும். ஒரு மனிதன் தனது ஜென்மத்தை கடைத்தேற்றி மரணமில்லா பெருவாழ்வை பெறுவதற்கு முதற்படியாக இருக்கக்கூடிய ஆலயங்களில் கதவை அடைத்து வைத்து பலபேர் இறைவனை வணங்கி மேன்மை பெறவிடாமல் தடுப்பது என்பது பெரும் பாவச்செயலாகும் என மகான் இராமலிங்க சுவாமிகள் கூறுகிறார்.

ஆலயங்களில் அந்த ஆலயம் யாருக்கு சொந்தம் என்பதிலும்

அவ்வாலயங்களில் தரப்படும் பரிவட்டம் கட்டுதல் போன்ற மரியாதைகள் காரணமாக ஒருவருக்குள் ஒருவருக்கு ஏற்படும் போட்டி பொறாமைகள் காரணமாகவும், இன்ன இனத்தவர்கள்தான் பூஜிக்க வேண்டும், மற்றவர் வரக்கூடாது என்பது, தடைசெய்வது போன்ற இனப்பிரச்சனைகள் காரணமாகவும் இன்னும் சில மனிதர்களில் தனிப்பட்ட விரோதங்களினாலும் பொதுமக்கள் வழிபட்டு வரும் ஆலயக் கதவினை அடைத்து விடுவார்கள்.

இவ்வாறு ஞானத்துறைக்கு அடிப்படையாக இருக்கும் ஆலயத்தின் கதவினை அடைத்து வைத்து வழிபடுவதை தடுப்பதால் இறைவனை வழிபட்டவர்கள் மனம் நொந்து போவார்கள். அந்த பக்தர்களது மனக்கஷ்டமானது அந்த ஆலயத்தை யார் அடைக்க காரணமாக இருந்தார்களோ அவர்களைத் தாக்கி அந்த நபரை மீளா நரகத்தில் ஆழ்த்திவிடும். எனவே ஆலயக் கதவை அடைப்பது மாபெரும் பாவச்செயல் என உணர வேண்டும்.

39. சிவனடி யாரைச் சீறி வைதேனோ!

பெரிய நகரம் ஒன்றில் உயிர்க்கொலை தவிர்த்தும், புலால் மறுத்தும் சுத்த சைவத்தை மேற்கொண்டும் காலை மாலை இருவேளையிலும் தவறாது சிவனை பூஜித்தும் வாழ்ந்து வந்தார் சிவனடியார் ஒருவர். அவர் ஒவ்வொரு சிவராத்திரியன்றும் பக்தர்களையும், தமது நண்பர்களையும், உறவினர்களையும் அழைத்து இரவு உணவளித்து சிறந்த பாடகர் ஒருவரை வரவழைத்து தேவாரம், திருவாசகம், அருணகிரிநாதர் திருப்புகழ் போன்ற முற்றுப்பெற்ற ஞானிகளின் பாடல்களை பாடச்செய்து அனைவரும் கேட்டு மனம்மகிழும் படி நிகழ்ச்சிகள் அமைத்து அனைவரையும் பக்திநெறியில் ஈடுபடுத்தி சிவதொண்டு செய்து வாழ்ந்து வரலானார்.

அவரது வீட்டிற்கு பக்கத்தில் உள்ள வீட்டில் ஆள்படையுடன் உள்ள போக்கிரி ஒருவன் வசித்து வந்தான். அவன் அவ்வூரிலுள்ள பணக்காரர்களை மிரட்டி பணம் வசூலித்து வாழ்ந்து வந்தான். பணக்காரர்களிடம் சென்று ஐந்து லட்சம் தா, பத்து லட்சம் தா இல்லையென்றால் உன் குடும்பத்திற்கு இடையூறு செய்வேன், அடித்து விடுவேன் என பலவாறு மிரட்டுவான்.

அவர்களும் அந்த போக்கிரியின் மிரட்டல்களுக்கு பயந்து நாம் வாழ வேண்டும், நமது குடும்பத்தாரும் வாழவேண்டும். இவனிடம் வம்பு வேண்டாம் என எண்ணி ஐந்து லட்சத்தையோ பத்து இலட்சத்தையோ தந்து விடுவார்கள். இவ்வாறு பலபேர்களை மிரட்டி பணம்பறித்து தானும் தன்னுடன் உள்ள அடியாட்களும் அப்பணத்தை பகிர்ந்து வாழ்க்கை நடத்தி வந்தான். ஊரிலுள்ளோர் அந்த போக்கிரியை பார்த்து அச்சத்துடன் வாழ்ந்து வந்தனர்.

இவ்வாறு இருக்கையில் ஒரு சிவராத்திரி அன்று வழக்கம்போல அந்த சிவனடியார் தனது குடும்பத்தினர், உறவினர், நண்பர்கள், சிவபக்தர்கள் ஆகியோர்களை அழைத்து பூஜித்தும், சிறந்த பாடகரையும் அழைத்து அவர் மூலம் தேவாரம், திருவாசகம், திருப்புகழ் போன்ற பாடல்களை பாடச்செய்து பெரியோர்கள் பாடல்களை மெய்மறந்து அனைவரும் கேட்டுக் கொண்டிருந்தனர்.

நிகழ்ச்சி இரவு பதினோரு மணிக்கு மேலும் தொடர்ந்து நடந்து கொண்டிருந்தது. அதுசமயம் பக்கத்து வீட்டிலுள்ள போக்கிரி வீட்டிற்கு வந்து படுக்கச் சென்றான். சிவனடியார் வீட்டில் பாடும் சத்தம் கேட்டு கோபத்துடன் வெளியே வந்து அநாகரிகமான முறையில் சிவனடியார் வீட்டில் காலில் உள்ள செருப்பைக் கூட கழற்றாமல் நுழைந்து, இரவு பதினோரு மணி ஆகிறது இன்னும் என்னய்யா பாடிக்கொண்டிருக்கிறீர்கள். அக்கம்பக்கத்தில் உள்ளவன் தூங்க வேண்டாமா? எல்லோரும் உடனே பாட்டை நிறுத்திவிட்டு வெளியேறுங்கள் என மூர்க்கத்தனமாக கூறி மிரட்டினான்.

சிவனடியாரோ அப்பொல்லாத போக்கிரியிடம் வம்பு வேண்டாமென்று பாடல்கள் பாடுவதை நிறுத்திவைத்து, எல்லோரையும் வீட்டிற்கு செல்லுமாறு வேண்டிக் கொண்டார். பாடகரைப் பார்த்து இனிமேல் பாடக்கூடாது என போக்கிரி மிரட்ட அவரும் வேறுவழியின்றி வெளியேறினார்.

அங்கு மெய்மறந்து பாடல்களை கேட்டுக் கொண்டிருந்த சிவனடியார்களும், பக்தர்களும், உறவினர்களும், நண்பர்களும் இறைவனை புகழ்ந்து பாடும் பாடல்களை கேட்கமுடியவில்லையே என எண்ணி மனவேதனையுடன் வெளியேறினர்.

ஏற்கனவே பல்வேறு பாவங்களை செய்திருந்த அந்த போக்கிரி சிவனடியாரைச் சீறி வைததால் வெகுவிரைவில் பல்வேறு நோய்களுக்கு ஆட்பட்டு நெடுநாட்கள் மீளாதநோயில் ஆட்பட்டு கடுமையான துன்பத்திற்கு ஆளாகி இறுதியில் இறந்துவிட்டான்.

எனவே சிவனடியார்களை சீறிவைதல் பாவம் என மகான் இராமலிங்க சுவாமிகள் கூறுகிறார்.

மகான் திருமூலரும் இக்கருத்தை தமது திருமந்திரம் என்ற நூலில் கவி எண் 534ல் கூறுகிறார்.

ஈச னடியார் இதயங் கலங்கிடத்
தேசமும் நாடுஞ் சிறப்பும் அழிந்திடும்
வாசவன் பீடமும் மாமன்னர் பீடமும்
நாசம தாகுமே நந்நந்தி யாணையே.

– திருமந்திரம் – குருநிந்தை – கவி எண் 534.

பதப்பொருள்: ஈசன் அடியார் இதயம் கலங்கிட – சிவனடியார் மனம் கலங்கினால், தேசமும் நாடும் சிறப்பும் அழிந்திடும் – தேசமும் நாடும் பிறசிறப்புகளும் அழியும், வாசவன் பீடமும் மாமன்னர் பீடமும் நாசமதாகுமே – இந்திரனது ஆட்சி பீடமும் பெரிய மன்னரது ஆட்சி பீடமும் நாசமாகுமே, நம் நந்தி ஆணை – இது நம் சிவபெருமான்மேல் ஆணையாகும்.

விளக்கம் : தேசம் பெரியது, நாடு சிறியது, மாமன்னர் – சக்கரவர்த்தி, பீடம் – ஆட்சி.

கருத்து : ஈசனடியார்க்குத் துன்பம் விளைவித்தோர் பெரும்பதவி இழப்பர்.

– நன்றி : ஜீ.வரதராசனார், பழனியப்பா பிரதர்ஸ்.

40. தவஞ்செய் வோரைத் தாழ்வு சொன்னேனோ!

ஒரு ஊரில் ஒரு சிவபக்தர் தனது குடும்பத்துடன் வாழ்ந்து வந்தார். அவருக்கு இரண்டு ஆண் குழந்தைகளும், இரண்டு பெண் குழந்தைகளும் இருந்தன. அவர் அக்கிராமத்தில் விவசாயம் செய்து வந்தார். மேலும் வியாபாரமும் செய்து வந்தார். அவரது இரண்டு பெண் பிள்ளைகளுக்கும் திருமணம் முடித்து விட்டார். மூத்தப்பையனுக்கும் திருமணம் செய்து வைத்தார். அனைவரும் நலமுடன் வாழ்ந்து வந்தார்கள்.

கடைசி மகனுக்கு மட்டும் திருமணம் ஆகவில்லை. அவர் தமது நிலத்தில் மிகவும் கவனமாக விவசாயம் செய்து வந்தார். அவர் ஆன்மீக நாட்டமுடையவர். காலையில் வயலிற்கு சென்று விவசாய வேலைகளை செய்துவிட்டு மாலை வீடு திரும்புவார். மிகுந்த சிரத்தையோடு விவசாயத்தை செய்து வந்தார். மாலை வீடு திரும்பிய பின் இரவு பத்துமணி வரை தியானம் செய்து பின்னர் உறங்குவார்.

எத்தனையோ தொழில்கள் இருக்கும் போது அவர் ஏன் கிராமத்தில் விவசாயம் செய்து வந்தாரெனில் விவசாயத்தினால் தனது குடும்பம் பயன்பெற்று வாழ்வதோடு மட்டுமல்லாமல் அங்கு விளையும் விளை பொருள்களினால் உலக மக்களும் பயன்பெறவேண்டும் என்ற உயர்ந்த நோக்கத்தினால் தான், மற்ற தொழில்களைவிட விவசாயத்தை உயர்வாக எண்ணி செய்து வந்தார். அத்தகு விவசாயத்தின் சிறப்பை (உழவு) மகான் வள்ளுவரும் தமது திருக்குறள் என்ற நூலில் உழவு என்ற ஒரு அதிகாரத் தலைப்பாக வைத்து பத்து குறள்களை இயற்றியுள்ளார் என்றால் விவசாயத்தின் பெருமை எத்தகையது என்பதை உணரவேண்டும்.

உழுவார் உலகத்தார்க்கு ஆணிஅஃது ஆற்றாது
எழுவாரை எல்லாம் பொறுத்து.

– திருக்குறள் – உழவு – குறள் எண் – 1032.

உழவு செய்ய முடியாமல் உயிர் வாழ்கின்றவர் எல்லாரையும் தாங்குவதால், உழவு செய்கின்றவர் உலகத்தார்க்கு அச்சாணி போன்றவர்.

– மு.வரதராசனார்.

உழவினார் கைம்மடங்கின் இல்லை விழைவதூஉம்
விட்டேம்என் பார்க்கும் நிலை.

– திருக்குறள் – உழவு – குறள் எண் – 1036.

உழவருடைய கை, தொழில் செய்யாமல் மடங்கி யிருக்குமானால், விரும்புகின்ற எந்தப் பற்றையும் விட்டு விட்டோம் என்று கூறும் துறவிகளுக்கும் வாழ்வு இல்லை.

– மு.வரதராசனார்.

வள்ளுவரால் மேன்மையாக போற்றப்பட்ட உழவுத் தொழிலை செம்மையாக முழு திருப்தியுடன் செய்தும், தனது தியானத்தையும் விடாது தொடர்ந்து செய்துவரும் காலத்தில், அவருக்கு இருபத்தெட்டு வயதிற்கு மேல் ஆகிவிட்டது.

அவரது பெற்றோர்கள் பையனுக்கு திருமணம் செய்து வைக்க வேண்டும் என விரும்பி அவரை அணுகி வயது அதிகமாகிவிட்டது, திருமணம் செய்து கொண்டு நல்லபடியாக இருப்பா! என்று கேட்டார்கள். அதற்கு அவரோ மன்னிக்க வேண்டும், நான் திருமணம் செய்து கொள்வதாக இல்லை. துறவு மேற்கொள்ள போகிறேன் எனக்கூறி விட்டார். இதையறிந்த உறவினர்களும் அவரை அணுகி "அப்பா! நீ என்ன இளைஞன் தானே, இந்த சிறு வயதில் திருமணம் செய்து கொண்டு காலாகாலத்தில் நடக்க வேண்டியவைகளை கவனித்துக்கொண்டு இல்லறத்தில் இருந்து சுகமாக இருப்பதை விட்டுவிட்டு ஏதோ இல்லறம் வேண்டாம், துறவறம் மேற்கொள்கிறேன் என்கிறாயே, நீ என்ன பெரிய தவசியா, கடவுளைக் கண்டாயா? ஏன் இப்படி செய்கிறாய்? திருமணம் செய்து கொள்" என வற்புறுத்தினார்கள்.

அதற்கும் அவர் மறுத்து நான் துறவுதான் மேற்கொள்ள போகிறேன் எனக்கூறினார். நண்பர்களும் அவரை அணுகி இளமையான வயதில் திருமணத்தை செய்து இந்த இளமையை சுகபோகத்தில் அனுபவிக்காமல் ஏதோ கடவுளை காணப்போகிறேன், தவம் செய்கிறேன் என்றெல்லாம் சொல்லி இந்த இளமையை வீணடிக்காமல், திருமணம் செய்து கொள் என வற்புறுத்தினார்கள். இன்னும் பலர் இதுகுறித்து அவரிடம் சொன்னபடியாலும் அவர் அதற்கெல்லாம் கட்டுப்படாமல் துறவுதான் மேற்கொள்வேன், தவம் செய்வேன், கடவுளை நோக்கி தவம் செய்து ஜென்மத்தை கடைத்தேற்ற வேண்டும் என உறுதியாக கூறி துறவு மேற்கொண்டார்.

ஆனால் நண்பர்களோ மீண்டும் மீண்டும் அவரை வற்புறுத்தினார்கள். வற்புறுத்தியதோடு மட்டுமின்றி மனைவி மக்கள் இன்றி இவர் பெரிய ஞானி ஆகப்போகிறாராம், என்று எள்ளி நகைத்தனர். அதற்கு அவர் மனைவி மக்கள் என்பவர்கள் துறவுக்கு தடையாக இருப்பார்கள்.

பெண்கொண்ட சுகமதே கண்கண்ட பலன்இது
பிடிக்கஅறி யாதுசிலர்தாம்
பேர்ஊர் இலாதஒரு வெறுவெளியி லேசுகம்
பெறவே விரும்பிவீணில்
பண்கொண்ட உடல்வெளுத் துள்ளே நரம்பெலாம்
பசைஅற்று மேல்எழும்பப்
பட்டினி கிடந்துசா கின்றார்கள் ஈதென்ன
பாவம்இவர் உண்மைஅறியார்
கண்கொண்ட குருடரே என்றுவாய்ப் பல்எலாங்
காட்டிச் சிரித்துநீண்ட
கழுமரக் கட்டைபோல் நிற்பார்கள் ஐயஇக்
கயவர்வாய் மதமுழுதுமே
மண்கொண்டு போகஓர் மருந்தருள்க தவசிகா
மணிஉலக நாதவள்ளல்
மகிழவரு வேளூரில் அன்பர்பவ ரோகமற
வளர்வைத் தியநாதனே.

– திருஅருட்பா – வைத்தியநாதர் பதிகம் – கவி எண் 3097.

என்று மகான் இராமலிங்க சுவாமிகள் கூறுவதால் அத்தகு நிலையாமை உடைய இல்லறம் எனக்கு வேண்டாம், நான் துறவு மேற்கொள்வேன், தவம் செய்வேன் என பிடிவாதமாக மறுத்து விட்டார். ஆனால் நண்பர்களோ அவரது மேன்மையான நோக்கத்தை புரிந்து கொள்ளாது அவரை பலவாறாக இகழ்ந்து பேசலாயினர். மேலும் அவதூறும் செய்து இழிவாக பேசினர்.

ஏதோ தவம் செய்கிறானாம், கடவுளை பார்க்கிறானாம், பெரிய தவசி ஆகப் போகிறானாம் என்றெல்லாம் இகழ்ந்து பேசலாயினர். இவ்வாறு துறவு மேற்கொண்டு தவம் செய்யும் தவசிகளை இகழ்ந்து பேசுதல் என்பது மாபெரும் பாவச்செயலாகும்.

ஒருவன் மனதில் தவம் செய்ய வேண்டும் என்ற உணர்வு வருவதே மிகப்பெரிய விசயமாகும். அவ்வாறு உணர்வு வந்து தவம் செய்யவும், துறவு மேற்கொள்ள எண்ணுபவர்களையும் இகழ்ந்து பேசக்கூடாது.

ஏனெனில் ஒருவர் தவம் மேற்கொண்டு சித்தி பெற்றால் அவரை சார்ந்த முன் ஏழு ஜென்மத்திலுள்ள உற்றார் உறவினர் குடும்பத்தினர்களும்,

தற்போது தவக்காலக்கட்டத்திலுள்ள ஏழு ஜென்ம குடும்பம், உற்றார் உறவினர்களும், அவர் தவம் சித்தி பெற்றதற்கு பின் அவரது குடும்பத்தின் பிற உறுப்பினர்கள் வாயிலாக தோன்றும் ஏழு ஜென்மத்திலுள்ள குடும்பத்தினர், உற்றார் உறவினர்களும், ஆக மொத்தம் இருபத்தியோரு ஜென்மங்களில் உள்ள அவரது உற்றார் உறவினர்கள், குடும்பத்தினர், தமது வினை நீங்கி மேன்மை பெறுவார்கள் என்பது உண்மை. இதையே மாணிக்க வாசகர் தமது திருவாசகம் என்ற நூலில் போற்றிதிருஅகவலில்

மூவேழ் சுற்றம் முரணுறு நரகிடை
ஆழா மேயருள் அரசே போற்றி.

– திருவாசகம் – போற்றித்திருஅகவல் – வரிஎண் 120.

என்ற வரிகள் மூலம் உணர்த்துகிறார். இத்தகு பெருமை வாய்ந்த தவசிகளை அவர்களது உண்மை நோக்கம் அறியாமல் இகழ்ந்து பேசினால், இகழ்ந்து பேசியவர் பலவித துன்பங்களுக்கு ஆளாக நேரிடும்.

மேலும் கடவுளின் கோபத்திற்கும் ஆளாக நேரிடும் என்பதையும் உணர்ந்து "தவம் செய்வோரை தாழ்வு சொல்லாது" தம்மை காத்துக்கொள்ள வேண்டும். தவம் செய்வோருக்கு உதவி செய்வது புண்ணியச் செயலாகும். அவரை இகழ்ந்து பேசுவது பாவச்செயலாகும் என்பது மகான் இராமலிங்கசுவாமிகளின் வாக்காகும். இதுபோன்ற தவசிகள் சமுதாயத்தில் வாழ்ந்து கொண்டு இருப்பதோடு மட்டுமல்லாமல் தவத்தையும் வெளியே தெரியாமல் செய்து கொண்டு இருப்பார்கள்.

எத்தொழிலைச் செய்தாலும் ஏதவத்தைப் பட்டாலும்
முத்தர் மனமிருக்கும் மோனத்தே – வித்தகமாய்க்
காதிவிளை யாடியிரு கைவீசி வந்தாலுந்
தாதிமனம் நீர்க்குடத்தே தான்.

– மகான் பட்டினத்தார் பாடல் – திருக்குற்றாலம் – கவி எண் 29.

எனக்கூறும் மகான் பட்டினத்தார் கப்பல் வியாபாரம் செய்தார்கள். மகான் ஜனகர் அரசராய் இருந்து அரசாட்சியும் செய்தார். மகான் பட்டினத்தார் வியாபாரம் செய்யும்போது தனது நித்திய கடமையாகிய வியாபாரத்தையும் செம்மையாக செய்ததோடு மட்டுமல்லாது, விடாது தவத்தையும் மேற்கொண்டார்.

அதுபோலவே அரசராயிருந்த ஜனகரும் அரசாட்சி செய்து வந்தபோதும், தவறாது தவத்தை மேற்கொண்டு தவத்திலும் சித்தி பெற்றார். மகான் கௌசிகர் அரசாட்சி செய்தார். தவத்திலும் சித்தி பெற்றார். ஆகவே அவரது தொழிலைக் கொண்டோ, புறச்செயல்களைக் கொண்டோ அவரை

தவறாக கருதாமல் அவரது தவத்தினை இகழ்ந்து பேசி இடையூறு செய்யாமல் இருப்பது நல்லதாகும்.

அவ்வாறன்றி அவர்களது உண்மை தவநிலை தெரியாமல் இகழ்ந்து பேசுவதென்பது பாவச்செயலாகும்.

ஒருவர் உண்மை பொருளறிந்து தவம் மேற்கொண்டால் அவரும் அவரை சார்ந்திருக்கக் கூடிய தொண்டர்களும் மகிழ்ச்சியோடு இருப்பார்கள்.

41. சுத்த ஞானிகளைத் தூஷணஞ் செய்தேனோ!

ஒருவருக்கு பல ஜென்மங்களில் செய்த புண்ணியத்தின் காரணமாக, உண்மைப் பொருளறிந்த குருநாதரின் நட்பு கிடைத்தது. அவர் குருநாதரிடம் நான் ஞானத்துறையில் தவம் செய்து பிறவிப்பயனை அடைய விரும்புகிறேன், எனக்கு உபதேசம் செய்யுங்கள் என குருவை பணிந்து கேட்டார். அவரும் அவரை சீடனாக ஏற்றுக்கொண்டு, அச்சீடன் பல ஜென்மங்களில் புண்ணியம் செய்திருப்பதை உணர்ந்து அச்சீடனுக்கு பிரணவ மந்திரத்தை உபதேசித்தார். மேலும் அச்சீடன் தவத்தினை எப்படி மேற்கொள்ள வேண்டும்? என்று கேட்டதற்கு, குருநாதர், அதற்கான சாதனங்களையும், உணவு முறைகள், இன்னும் பற்பல உபதேசங்களையும் கூறி இவற்றை முறையாக சுமார் ஐந்து வருடங்கள் செய்து வா, தவத்தில் நீ சித்தி பெறலாம் எனக் கூறினார்.

அச்சீடனும் குருநாதர் வாக்கை சிரமேற் கொண்டு ஐந்து வருடங்கள் அவர் கூறிய முறைகளைப் பின்பற்றி தவம் மேற்கொண்டு தவம் செய்து வரலானான். ஐந்து வருடங்கள் முடிந்தவுடன் குருநாதரிடம் சென்று ஐயா தாங்கள் கூறியபடி ஐந்து வருடங்கள் தவம் செய்தேன், இன்னும் எனக்கு எந்த ஒரு சித்தியும் கைகூடவில்லை எனக்கூறினான். அதற்கு குருநாதர் மேலும் ஒரு ஐந்து வருடங்கள் தவம் செய்தால் தவம் சித்திக்கும் எனக்கூறி, மேலும் ஐந்து வருடங்கள் தவம் மேற்கொள்ள சொல்லி அதற்கான வழிமுறைகளையும், இன்னும்பல உபதேசங்களையும் கூறி தவம் செய்ய சொன்னார்.

அவனும் குருவின் திருவாக்கை சிரமேற்கொண்டு, மேலும் ஐந்து வருடங்கள் தவம் செய்து வந்து, ஐந்து வருடங்கள் முடிவில் மீண்டும் குருவை சந்தித்தான். ஐயா நான் தவம் மேற்கொண்டு பத்து ஆண்டுகள் முடிந்து விட்டது. இன்னும் எனக்கு எந்த ஒரு சித்தியும் கைகூடவில்லை. எனவே எனக்கு தவம் சித்தியடைய நல்லதொரு மார்க்கம் கூறுங்கள் எனக்கேட்டான்.

குருநாதரும் அச்சீடனை நோக்கி சீடனே உனது தவம் இன்னும் முடிவடையவில்லை. நீ விரைவில் தவத்தில் சித்தியடைவாய், மேலும் ஒரு ஐந்து வருடங்கள் தவத்தினை சலிப்படையாது தொடர்ந்து செய்து வா எனக்கூறி

அதற்குரிய வழிமுறைகளையும் கூறி உபதேசித்தார். சீடனும் குருவின் வாக்கை மேற்கொண்டு தவம் செய்தான். நாளாக நாளாக தவத்தில் எந்தஒரு முன்னேற்றமும் இல்லாததை கண்டு அவன் மனம் சலிப்படைந்து தவம் மேற்கொள்வதில் விரக்தியடைந்தான்.

இவ்வாறு சுமார் இரண்டு வருடங்கள் சென்றவுடன் மீண்டும் குருநாதரை அணுகி, ஐயா இதுவரை எந்தஒரு முன்னேற்றமும் இல்லை, என்னால் ஏன் தவத்தில் சித்தி பெற முடியவில்லை? எனக்கேட்க அதற்கு குருநாதரோ சீடனே தவம் என்பது மிகநீண்ட நெடிய பயணமாகும். தவம் செய்வோர் அனைவரும் தவம் செய்தவுடன் அடுத்தடுத்து அத்தவத்தில் உடனடியாக வெற்றிபெற வேண்டும் என நினைப்பார்கள். ஆனால் அவரவர் செய்த பாவபுண்ணியங்களுக்கு ஏற்பத்தான் தவத்தின் சித்தி அமையும். எனவே மனந்தளராதே தவத்தை தொடர்ந்து செய்து வா எனக்கூறியதோடு,

வரும்வழி போம்வழி மாயா வழியைக்
கருவழி கண்டவர் காணா வழியைப்
பெரும்வழி யாநந்தி பேசும் வழியைக்
குருவழி யேசென்று கூடலு மாமே.

– திருமந்திரம் – சற்குரு நெறி – கவி எண் 2056.

என்ற மகான் திருமூலர் வாக்கையும்,

சீசனாம் எனத்தேர்ந்தால் மௌனம்சொல்வார்
சிற்றெறும்பு ஊரையிலே கற்குழிந்தாப்போலே
பாசமங்கே வைக்கவைக்கப் பாவமெல்லாம்
பர்வதம்போல் பஞ்சுவைத்து அணுவளவுதீயை
நேசமுடன் வைத்தகதை போலேயாச்சு
நிலைத்துநின்ற குருவுக்கு மனங்கோணலாகா
வேசைமனம் போலாகி அலையாதேநீ
வேதாந்த குருபதத்தை மேவுமேவே.

– மகான் கொங்கண மகரிஷி அருளிய கடைக்காண்டம் கவி.270.

என்ற சித்தரின் பாடலையும் கூறி அவனை சமாதானப்படுத்தி பல்வேறு முறைகளில் தவத்தின் இயல்பையும், அதன் போக்கையும் விளக்கி கூறினார். மேலும் தவம் என்பது குறைந்தது முப்பத்தியாறு ஆண்டு காலமாவது ஆக வேண்டும். அப்படி ஆனால் தான் தவம் சித்தி பெறும். அதுவரையாவது பொறுமையாக இருக்க வேண்டும். ஒரு சிலருக்கு விரைவில் தவம் சித்திக்கிறது என்றால் அது அவரவர் செய்த பாவபுண்ணியங்களின் அடிப்படையினால்தான் சித்திக்கிறது என்பதையும் எடுத்துக் கூறினார்.

ஆனால் அச்சீடனோ அவற்றையெல்லாம் கேட்காமல், இத்தனை காலம் பல ஜென்மங்களாக ஆசானுக்காக பாடுபட்டு தொண்டு செய்திருக்கிறேன். ஆனால் எனக்கு தவத்தின் உண்மையை தாங்கள் கூறாமல் ஏதோ தவறான வழி காண்பித்து விட்டீர்கள், என்னை ஏமாற்றி விட்டீர்கள், எனது முன்னேற்றத்தை தாங்கள் தடுக்கிறீர்கள், உங்களை நம்பிய என்னை மோசம் செய்து விட்டீர்கள், என்றெல்லாம் பலவாறாக அந்த உண்மைப் பொருள் உரைத்த குருநாதரை தூஷணம் செய்து பேசலானான். ஒருவன் மேற்கொள்ளும் தவமானது, சித்தி பெறுவது என்பது அத்தவம் மேற்கொள்பவனது பாவபுண்ணியத்தை பொறுத்ததாகும்.

அவரவர் செய்த வினையளவுக்கு ஏற்பத்தான் அவரது தவச்சித்தியானது அமையும். அச்சீடன் பல ஜென்மங்களில் செய்த தொண்டினாலும், புண்ணியத்தாலும், அவனுக்கு தவம் மேற்கொள்ளும் வாய்ப்பும், உண்மை பொருளறிந்த குருநாதரின் நட்பும் உபதேசமும் கிடைத்தது.

ஆனால் அவன் செய்த பாவமானது அவனது தவம் சித்திபெற தடையாய் இருந்ததோடு மட்டுமல்லாது, உண்மைப் பொருளை உபதேசித்த குருநாதரை தூஷணம் செய்ய வைத்தது. பற்றற்ற உண்மைப் பொருளறிந்த மகான்களை தூஷணம் செய்தால் எக்கதி ஏற்படும் என்பதை மகான் திருமூலர் தமது திருமந்திரத்தில் குரு நிந்தை என்ற தலைப்பில் கூறியுள்ளார்கள்.

ஓரெழுத் தொருபொருள் உணரக் கூறிய
சீரெழுத் தாளரைச் சிதையச் செப்பினோர்
ஊரிடைச் சுணங்கனாய்ப் பிறந்தங் கோருகம்
பாரிடைக் கிருமியாய்ப் பழகுவர் மண்ணிலே.

– திருமந்திரம் – குரு நிந்தை – கவி எண் 531.

எனவே சுத்த ஞானிகளை தூஷணம் செய்வது என்பது மாபாவச்செயலாகும் என்பதை உணர வேண்டும்.

உண்மைப் பொருளறிந்த பற்றற்ற ஞானிகள் சமுதாயத்தில் இருந்து கொண்டே தவம் மேற்கொண்டு இருப்பார்கள். தவசிகள் அனைவரும் அடக்கமாக இருப்பார்கள். அப்படிப்பட்ட சுத்த ஞானிகளை தோற்றத்தினைக் கண்டு முடிவெடுக்க கூடாது. அந்த ஞானிகள் செயல்பாடுகளை புரிந்து கொள்ளாமல் அவர்களுக்கு இடையூறு செய்தாலோ, தூஷணம் செய்தாலோ மகாபாவத்திற்கு ஆளாக நேரிடும் என்பதை உணரவேண்டும்.

அதனால்தான் சுத்த ஞானிகளை தூஷணம் செய்தல் பாவம் என்று மகான் இராமலிங்க சுவாமிகள் கூறுகிறார். சுத்த ஞானிகளை ஒருவன் இகழ்ந்து பேசினால் அந்த உண்மைப் பொருளறிந்த ஞானிகள் மனம் வேதனைப்படும். அவர்கள் வேதனைப்பட்டால் வேதனைப்பட காரணமாய் இருந்தவர்கள் பெரும் பாவச்சுமைக்கு ஆளாவார்கள் என்பதை அறிய வேண்டும்.

42. தந்தைதாய் மொழியைத் தள்ளி நடந்தேனோ!

ஒரு கிராமத்தில் நல்ல பண்புள்ள, நாள்தோறும் சிவபூஜை செய்து வரும், சைவத்தை மேற்கொண்ட சிவபக்தர் குடும்பத்தில் ஒருவன் பிறந்தான். அவனை நன்றாக அவனது தாய்தந்தையர் பாசத்துடன் வளர்த்து வந்தனர். அவனுக்கு நல்ல கல்வியையும் கற்பித்து கல்வியாளனாக வளர்த்தனர்.

ஆனால் அவனோ நல்ல நண்பர்களை தனது நட்பாக கொள்ளாமல், தீய நண்பர்களை நட்பாக கொண்டு பல தீய வழிகளிலே செல்லலானான். இதை கவனித்த அவனது தந்தை, மகனை அழைத்து மகனே நீ செல்லும் வழி சரியல்ல, உனது நண்பர்களைப் பற்றி நானறிவேன். அவர்கள் நல்லவர்கள் அல்ல. அவர்களுடன் பழக வேண்டாம். பழகினால் பாவச்செயல்கள் செய்து பாவத்திற்கு ஆளாவாய் என எச்சரித்தார்.

ஆய்ந்துஆய்ந்து கொள்ளாதான் கேண்மை கடைமுறை
தான்சாம் துயரம் தரும்.

– திருக்குறள் – நட்பு ஆராய்தல் – குறள் எண் 792.

ஒருவர் நட்பு கொள்ளும்போது அவர் நட்பு கொள்ளும் நண்பனது குடும்பத்தை ஆராய்ந்து, அவர் உயர்ந்த குடிப்பிறப்பில் பிறந்தவரா, தாழ்ந்த குடிப்பிறப்பில் பிறந்தவரா என ஆராய்ந்து உயர்குடி பிறப்பில் பிறந்தவரது நட்பை கொளல் வேண்டும். அவ்வாறு உயர்குடிபிறப்பில் கொள்ளும் நட்பு வாழ்க்கை முழுதும் நமக்கு நன்மை பயக்கும்.

அவ்வாறு இல்லாமல் தாழ்ந்த குடியில் கீழ்த்தரமான குடும்பத்தில் பிறந்தவரிடம் நட்பு கொண்டால், அது நமக்கு சாகும்வரை துன்பத்தை தரும் என்று கூறினார்.

இங்கு நட்பை மட்டும் மிகவலியுறுத்தி சொல்வதன் நோக்கம், மகான் திருவள்ளுவர் ஒருவன் நட்பு கொள்ளும்போது மிகவும் எச்சரிக்கையாக நட்பு கொள்ள வேண்டும் என்பதை வலியுறுத்தி, நட்பின் தன்மையும் அதனால் விளையும் விளைவுகளையும் குறித்து தமது திருக்குறளில் நட்பு, நட்பாராய்தல், தீநட்பு, கூடாநட்பு என நான்கு அதிகாரங்களில் நாற்பது குறள்களில் சொல்லியுள்ளார்கள். ஆகவே அவனது தந்தை நட்பு கொள்வதை குறித்து அவனுக்கு விளக்கமாக எடுத்துரைத்தார்.

நட்பு, நட்பின் தன்மையையும் அதன் விளைவுகளையும் நட்பு என்ற அதிகாரத்தை எடுத்துரைத்து விளக்கினார்.

நட்பு

781. செயற்குஅரிய யாவுள நட்பின்? அதுபோல்
வினைக்குஅரிய யாவுள காப்பு?

நட்பைப்போல் செய்துகொள்வதற்கு அருமையானவை எவை உள்ளன? அதுபோல் தொழிலுக்கு அரிய காவலாக இருப்பவை எவை உள்ளன?

782. நிறைநீர நீரவர் கேண்மை பிறைமதிப்
பின்நீர பேதையார் நட்பு.

அறிவுடையவரின் நட்பு பிறை நிறைந்துவருதல் போன்ற தன்மையுடையன; அறிவில்லாதவரின் நட்பு முழுமதி தேய்ந்து பின்செல்லுதல் போன்ற தன்மையுடையன.

783. நவில்தொறும் நூல்நயம் போலும் பயில்தொறும்
பண்புடை யாளர் தொடர்பு.

பழகப் பழக நற்பண்பு உடையவரின் நட்பு இன்பம் தருதல், நூலின் நற்பொருள் கற்கக் கற்க மேன்மேலும் இன்பம் தருதலைப் போன்றதாகும்.

784. நகுதல் பொருட்டன்று நட்டல்; மிகுதிக்கண்
மேற்சென்று இடித்தல் பொருட்டு.

நட்புச் செய்தல் ஒருவரோடு ஒருவர் சிரித்து மகிழும் பொருட்டு அன்று; நண்பர் நெறி கடந்து செல்லும்போது முற்பட்டுச் சென்று இடித்துரைப்பதற்காகும்.

785. புணர்ச்சி பழகுதல் வேண்டா; உணர்ச்சிதான்
நட்புஆம் கிழமை தரும்.

நட்புச் செய்வதற்குத் தொடர்பும் பழக்கமும் வேண்டியதில்லை; ஒத்த உணர்ச்சியே நட்பு ஏற்படுவதற்கு வேண்டிய உரிமையைக் கொடுக்கும்.

786. முகம்நக நட்பது நட்பன்று; நெஞ்சத்து
அகம்நக நட்பது நட்பு.

முகம் மட்டும் மலரும்படியாக நட்புச் செய்வது நட்பு அன்று; நெஞ்சமும் மலரும்படியாக உள்ளன்புகொண்டு நட்புச் செய்வதே நட்பு ஆகும்.

787. அழிவின் அவைநீக்கி ஆறுஉய்த்து அழிவின்கண்
அல்லல் உழப்பதாம் நட்பு.

அழிவைத் தரும் தீமைகளிலிருந்து நீக்கி, நல்ல வழியில் நடக்கச் செய்து, அழிவு வந்த காலத்தில் உடனிருந்து துன்பப்படுவதே நட்பாகும்.

788. உடுக்கை இழந்தவன் கைபோல ஆங்கே
இடுக்கண் களைவதுஆம் நட்பு.

உடை நெகிழ்ந்தவனுடைய கை, உடனே உதவிக் காப்பது போல், (நண்பனுக்குத் துன்பம் வந்தால்) அப்பொழுதே சென்று துன்பத்தைக் களைவது நட்பு.

789. நட்பிற்கு வீற்றிருக்கை யாதெனில் கொட்புன்றி
ஒல்லும்வாய் ஊன்றும் நிலை.

நட்புக்குச் சிறந்த நிலை எது என்றால், எப்போதும் வேறுபடுதல் இல்லாமல், முடியும்போதெல்லாம் உதவி செய்து தாங்கும் நிலையாகும்.

790. இனையர் இவர்எமக்கு இன்னம்யாம் என்று
புனையினும் புல்என்னும் நட்பு.

'இவர் எமக்கு இத்தன்மையானவர், யாம் இவர்க்கு இத்தன்மையுடையேம்' என்று புனைந்துரைத்தாலும் நட்புச் சிறப்பிழந்துவிடும்.

அவ்வாறு நட்புகொள்ளும்போது ஒருவன் தனது நட்பை எவ்விதம் தேர்ந்தெடுக்க வேண்டும் என்பதை வலியுறுத்தி நட்பாராய்தல் என்ற அதிகாரத்தை எடுத்துரைத்தார்.

நட்பு ஆராய்தல்

791. நாடாது நட்டலின் கேடுஇல்லை; நட்டபின்
வீடுஇல்லை நட்பாள் பவர்க்கு.

நட்புச் செய்தபிறகு நட்பை உடையவர்க்கு அதிலிருந்து விடுதலை இல்லை; ஆகையால் ஆராயாமல் நட்புச் செய்வதைப் போல் கெடுதியானது வேறு இல்லை.

792. ஆய்ந்துஆய்ந்து கொள்ளாதான் கேண்மை கடைமுறை
தான்சாம் துயரம் தரும்.

ஆராய்ந்து ஆராய்ந்து நட்புக் கொள்ளாதவனுடைய நட்பு, இறுதியில் தான் சாவதற்குக் காரணமான துயரத்தை உண்டாக்கிவிடும்.

793. குணனும் குடிமையும் குற்றமும் குன்றா
இனனும் அறிந்துயாக்க நட்பு.

ஒருவனுடைய குணத்தையும் குடிப்பிறப்பையும், குற்றத்தையும், குறையாத இனத்தாரின் இயல்பையும் அறிந்து அவனோடு நட்புக் கொள்ளவேண்டும்.

794. குடிப்பிறந்து தன்கண் பழிநாணு வானைக்
கொடுத்தும் கொளல்வேண்டும் நட்பு.

உயர்ந்த குடியில் பிறந்து, தன்னிடத்தில் வரக்கூடிய பழிக்கு நாணுகின்றவனைப் பொருள் கொடுத்தாவது நட்புக் கொள்ள வேண்டும்.

795. அழச்சொல்லி அல்லது இடித்து வழக்குஅறிய
வல்லார்நட்பு ஆய்ந்து கொளல்.

நன்மையில்லாத செயலைக் கண்டபோது வருந்தும்படியாக இடித்துச் சொல்லி, உலக நடையை அறிய வல்லவரின் நட்பை ஆராய்ந்து கொள்ள வேண்டும்.

796. கேட்டினும் உண்டுஓர் உறுதி கிளைஞரை
நீட்டி அளப்பதோர் கோல்.

கேடு வந்தபோதும் ஒருவகை நன்மை உண்டு; அக்கேடு ஒருவனுடைய நண்பரின் இயல்புகளை நீட்டி அளந்து பார்ப்பதொரு கோலாகும்.

797. ஊதியம் என்பது ஒருவற்குப் பேதையார்
கேண்மை ஒரீஇ விடல்.

ஒருவனுக்கு ஊதியம் என்று சொல்லப்படுவது, அறிவில்லாதவருடன் செய்து கொண்ட நட்பிலிருந்து நீங்கி அவரைக் கைவிடுதலாகும்.

798. உள்ளற்க உள்ளம் சிறுகுவ; கொள்ளற்க
அல்லல்கண் ஆற்றுஅறுப்பார் நட்பு.

ஊக்கம் குறைவதற்குக் காரணமான செயல்களை எண்ணாமலிருக்க வேண்டும்; அதுபோல் துன்பம் வந்த போது கைவிடுகின்றவரின் நட்பைக் கொள்ளாதிருக்க வேண்டும்.

799. கெடுங்காலைக் கைவிடுவார் கேண்மை அடும்காலை
உள்ளினும் உள்ளம் சுடும்.

கேடு வரும் காலத்தில் கைவிட்டு ஒதுங்குகின்றவரின் நட்பு, எமன் கொல்லும் காலத்தில் நினைத்தாலும் நினைத்த உள்ளத்தை வருத்தும்.

800. மருவுக மாசற்றார் கேண்மை;ஒன்று ஈத்தும்
ஒருவுக ஒப்பிலார் நட்பு.

குற்றமற்றவருடைய நட்பைக் கொள்ள வேண்டும்; ஒத்த பண்பு இல்லாதவருடைய நட்பை ஒன்றைக் கொடுத்தாவது கைவிட வேண்டும்.

அப்படி நட்பு கொள்ளும்போது அது தீய நட்பாக அமைந்து விட்டால் என்னென்ன விளைவுகள் ஏற்படுத்தும் என்பதை விளக்க தீநட்பு என்ற அதிகாரத்தை எடுத்துரைத்தார்.

தீ நட்பு

811. பருகுவார் போலினும் பண்புஇலார் கேண்மை
பெருகலின் குன்றல் இனிது.

அன்பு மிகுதியால் பருகுவார்போல் தோன்றினாலும் நற்பண்பு இல்லாதவரின் நட்பு, வளர்ந்து பெருகுவதை விடத் தேய்ந்து குறைவது நல்லது.

812. உறின்நட்டு அறின்ஒரூஉம் ஒப்பிலார் கேண்மை
பெறினும் இழப்பினும் என்?

தமக்குப் பயன் உள்ளபோது நட்புச் செய்து, பயன் இல்லாதபோது நீங்கிவிடும் தகுதியில்லாதவரின் நட்பைப் பெற்றாலும் என்ன? இழந்தாலும் என்ன?

813. உறுவது சீர்தூக்கும் நட்பும் பெறுவது
கொள்வாரும் கள்வரும் நேர்.

கிடைக்கும் பயனை அளந்து பார்க்கும் நண்பரும், அன்பைக் கொள்ளாமல் பெறுகின்ற பொருளைக் கொள்ளும் விலைமகளிரும், கள்வரும் ஒரு நிகரானவர்.

814. அமரகத்து ஆற்றுஅறுக்கும் கல்லாமா அன்னார்
தமரின் தனிமை தலை.

போர் வந்தபோது களத்தில் தள்ளிவிட்டு ஓடும் அறிவில்லாத குதிரை போன்றவரின் உறவைவிட, ஒரு நட்பும் இல்லாமல் தனித்திருத்தலே சிறந்தது.

815. செய்துஏமம் சாராச் சிறியவர் புன்கேண்மை
எய்தலின் எய்தாமை நன்று.

காவல் செய்து வைத்தாலும் காவல் ஆகாத கீழ்மக்களின் தீய நட்பு, ஒருவனுக்கு ஏற்படுவதைவிட ஏற்படாமலிருப்பதே நன்மையாகும்.

816. பேதை பெருங்கெழீஇ நட்பின் அறிவுஉடையார்
ஏதின்மை கோடி உறும்.

அறிவில்லாதவனுடைய மிகப் பொருந்திய நட்பைவிட அறிவுடையவரின் நட்பில்லாத தன்மை கோடி மடங்கு நன்மை தருவதாகும்.

817. நகைவகையர் ஆகிய நட்பின் பகைவரால்
பத்துஅடுத்த கோடி உறும்.

(அகத்தில் அன்பு இல்லாமல் புறத்தில்) நகைக்கும் தன்மை உடையவரின் நட்பைவிட, பகைவரால் வருவன பத்துக்கோடி மடங்கு நன்மையாகும்.

818. ஒல்லும் கருமம் உடற்று பவர்கேண்மை
சொல்ஆடார் சோர விடல்.

முடியும் செயலையும் முடியாதபடி செய்து கெடுப்பவரின் உறவை, அவர் அறியுமாறு ஒன்றும் சொல்லாமலே தளரச் செய்து கைவிட வேண்டும்.

819. கனவினும் இன்னாது மன்னோ வினைவேறு
சொல்வேறு பட்டார் தொடர்பு.

செய்யும் செயல் வேறாகவும் சொல்லும் சொல் வேறாகவும் உள்ளவரின் நட்பு, ஒருவனுக்குக் கனவிலும் துன்பம் தருவதாகும்.

820. எனைத்தும் குறுகுதல் ஓம்பல் மனைக்கெழீஇ
மன்றில் பழிப்பார் தொடர்பு.

தனியே வீட்டில் உள்ளபோது பொருந்தியிருந்து, பலர் கூடிய மன்றத்தில் பழித்துப் பேசுவோரின் நட்பை எவ்வளவு சிறிய அளவிலும் அணுகாமல் விடவேண்டும்.

அப்படி நட்புகொள்ளும்போது எவரெவருடன் நட்புகொள்ளக்கூடாது எந்த விதங்களில் நட்பு கொள்ளக்கூடாது என்பதை வலியுறுத்தி கூடாநட்பு என்ற அதிகாரத்தை எடுத்துரைத்தார்.

கூடா நட்பு

821. சீர்இடம் காணின் எறிதற்குப் பட்டடை
நேரா நிரந்தவர் நட்பு.

அகத்தே பொருந்தாமல் புறத்தில் பொருந்தி நடப்பவரின் நட்பு, தக்க இடம் கண்டபோது எறிவதற்கு உரிய பட்டடையாகும்.

822. இனம்போன்று இனம்அல்லார் கேண்மை மகளிர்
மனம்போல வேறு படும்.

இனம் போலவே இருந்து உண்மையில் இனம் அல்லாதவரின் நட்பு, பொதுமகளிரின் மனம்போல உள்ளொன்று புறமொன்றாக வேறுபட்டு நிற்கும்.

823. பலநல்ல கற்றக் கடைத்தும் மனம்நல்லர்
ஆகுதல் மாணார்க்கு அரிது.

பல நல்ல நூல்களைக் கற்றுத் தேர்ந்தபோதிலும், அவற்றின் பயனாக நல்ல மனம் உடையவராகப் பழகுதல், (உள்ளன்பினால்) மாட்சியடையாதவர்க்கு இல்லை.

824. முகத்தின் இனிய நகாஅ அகத்துஇன்னா
வஞ்சரை அஞ்சப் படும்.

முகத்தால் இனிமையாகச் சிரித்துப் பழகி அகத்தில் தீமை கொண்டுள்ள வஞ்சகருடன் நட்புக் கொள்வதற்கு அஞ்சவேண்டும்.

825. மனத்தின் அமையா தவரை எனைத்துஒன்றும்
சொல்லினால் தேறற்பாற்று அன்று.

மனத்தால் தம்மொடு பொருந்தாமல் பழகுகின்றவரை அவர் கூறுகின்ற சொல்லைக் கொண்டு எத்தகைய ஒரு செயலிலும் நம்பித் தெளியக்கூடாது.

826. நட்டார்போல் நல்லவை சொல்லினும் ஒட்டார்சொல்
ஒல்லை உணரப் படும்.

நண்பர்போல் நன்மையானவற்றைச் சொன்ன போதிலும் பகைமை கொண்டவர் சொல்லும் சொற்களின் உண்மைத் தன்மை விரைவில் உணரப்படும்.

827. சொல்வணக்கம் ஒன்னார்கண் கொள்ளற்க வில்வணக்கம்
தீங்கு குறித்தமை யான்.

வில்லின் வணக்கம் வணக்கமாக இருந்தாலும் தீங்கு செய்தலைக் குறித்தமையால், பகைவரிடத்திலும் அவருடைய சொல்லின் வணக்கத்தை நன்மையாகக் கொள்ளக்கூடாது.

828. தொழுதகை உள்ளும் படைஒடுங்கும் ஒன்னார்
அழுதகண் ணீரும் அனைத்து.

பகைவர் வணங்கித் தொழுத கையினுள்ளும் கொலைக் கருவி மறைந்திருக்கும், பகைவர் அழுது சொரிந்த கண்ணீரும் அத்தன்மையானதே.

829. மிகச்செய்து தம்எள்ளு வாரை நகச்செய்து
நட்பினுள் சாப்புல்லல் பாற்று.

புறத்தே மிகுதியாக நட்புத் தோன்றச்செய்து அகத்தில் இகழ்கின்றவரைத், தாமும் அந்நட்பில் நகைத்து மகிழுமாறு செய்து அத்தொடர்பு சாகுமாறு நடக்க வேண்டும்.

830. பகைநட்பாம் காலம் வருங்கால் முகம்நட்டு
அகம்நட்பு ஒரீஇ விடல்.

பகைவர் நண்பராகும் காலம் வரும்போது முகத்தளவில் நட்புக்கொண்டு அகத்தில் நட்பு நீங்கி வாய்ப்புக் கிடைத்தபோது அதையும் விடவேண்டும்.

மேலும் அவர் தனது மகனை நோக்கி விலைமாதர் தொடர்பினால் மனிதன்படும் துன்பம் குறித்து, மகான் திருவள்ளுவரின் வரைவில் மகளிர் என்ற அதிகாரத்திலுள்ள பத்து குறள்களையும் கூறினார்.

வரைவில் மகளிர்

911. அன்பின் விழையார் பொருள்விழையும் ஆய்தொடியார்
இன்சொல் இழுக்குத் தரும்.

அன்பினால் விரும்பாமல் பொருள் காரணமாக விரும்புகின்ற பொதுமகளிர் பேசுகின்ற இனிய சொல், ஒருவனுக்குத் துன்பத்தைக் கொடுக்கும்.

912. பயன்தூக்கிப் பண்புஉரைக்கும் பண்பில் மகளிர்
நயன்தூக்கி நள்ளா விடல்.

கிடைக்கக்கூடிய பயனை அளந்து பார்த்து, அதற்கு ஏற்றவாறு இனியசொல் கூறுகின்ற பண்பற்ற பொதுமகளிரின் இன்பத்தை ஆராய்ந்து பொருந்தாமல் விட வேண்டும்.

913. பொருட்பெண்டிர் பொய்ம்மை முயக்கம் இருட்டுஅறையில்
ஏதில் பிணம்தழீஇ யற்று.

பொருளையே விரும்பும் பொதுமகளிரின் பொய்யான தழுவுதல், இருட்டறையில், தொடர்பு இல்லாத ஒரு பிணத்தை தழுவினாற் போன்றது.

914. பொருட்பொருளார் புன்நலம் தோயார் அருட்பொருள்
ஆயும் அறிவி னவர்.

பொருள் ஒன்றையே பொருளாகக் கொண்ட பொதுமகளிரின் புன்மையான இன்பத்தை, அருளாகிய சிறந்த பொருளை ஆராயும் அறிவுடையோர் பொருந்தமாட்டார்.

915. பொதுநலத்தார் புன்நலம் தோயார் மதிநலத்தின்
மாண்ட அறிவி னவர்.

இயற்கை அறிவின் நன்மையால் சிறப்புற்ற அறிவுடையோர், பொருள் தருவார் எல்லார்க்கும் பொதுவாக இன்பம் தரும் மகளிரின் புன்மையான நலத்தைப் பொருந்தார்.

916. தம்நலம் பாரிப்பார் தோயார் தகைசெருக்கிப்
புன்நலம் பாரிப்பார் தோள்.

அழகு முதலியவற்றால் செருக்குக்கொண்டு தம் புன்மையான நலத்தை விற்கும் பொதுமகளிரின் தோளை, தம் நல்லொழுக்கத்தைப் போற்றும் சான்றோர் பொருந்தார்.

917. நிறைநெஞ்சம் இல்லவர் தோய்வர் பிறநெஞ்சின்
பேணிப் புணர்பவர் தோள்.

நெஞ்சத்தை நிறுத்தி ஆளும் ஆற்றல் இல்லாதவர், தம் நெஞ்சில் வேறு பொருள்களை விரும்பிக் கூடும் பொது மகளிரின் தோளைப் பொருந்துவர்.

918. ஆயும் அறிவினர் அல்லார்க்கு அணங்குஎன்ப
மாய மகளிர் முயக்கு.

வஞ்சம் நிறைந்த பொதுமகளிரின் சேர்க்கை, ஆராய்ந்தறியும் அறிவு இல்லாதவர்க்கு அணங்கு தாக்கு (மோகினி மயக்கு) என்று கூறுவர்.

919. வரைவுஇலா மாணிழையார் மென்தோள் புரையிலாப்
பூரியர்கள் ஆழும் அளறு.

ஒழுக்க வரையறை இல்லாத பொதுமகளிரின் மெல்லிய தோள், உயர்வில்லாத கீழ்மக்கள் ஆழ்ந்து கிடக்கின்ற நரகமாகும்.

920. இருமனப் பெண்டிரும் கள்ளும் கவறும்
திருநீக்கப் பட்டார் தொடர்பு.

இருவகைப்பட்ட மனம் உடைய பொதுமகளிரும் கள்ளும் சூதுமாகிய இம்மூவகையும் திருமகளால் நீக்கப்பட்டவரின் உறவாகும்.

மேலும் அவர் தனது மகனை நோக்கி சூதினால் விளையும் விளைவுகள் குறித்து திருக்குறளில் உள்ள சூது என்ற அதிகாரத்தை எடுத்துரைத்தார்.

சூது

931. வேண்டற்க வென்றிடினும் சூதினை; வென்றதூஉம்
தூண்டில்பொன் மீன்விழுங்கி யற்று.

வெற்றியே பெறுவதானாலும் சூதாட்டத்தை விரும்பக்கூடாது. வென்ற வெற்றியும், தூண்டில் இரும்பை இரை என்று மயங்கி மீன் விழுங்கினாற் போன்றது.

932. ஒன்றுஎய்தி நூறுஇழக்கும் சூதர்க்கும் உண்டாம்கொல்
நன்றுஎய்தி வாழ்வதோர் ஆறு.

ஒரு பொருள்பெற்று நூறுமடங்கு பொருளை இழந்து விடும் சூதாடிகளுக்கும், நன்மை பெற்று வாழும் ஒரு வழி உண்டோ?

933. உருள்ஆயம் ஓவாது கூறின் பொருளாயம்
போஒய்ப் புறமே படும்.

ஒருவன் உருளுகின்ற கருவியால் வரும் பொருளை இடைவிடாமல் கூறிச் சூதாடினால், பொருள் வருவாய் அவனைவிட்டு நீங்கிப் பகைவரிடத்தில் சேரும்.

934. சிறுமை பலசெய்து சீர்அழிக்கும் சூதின்
வறுமை தருவதுஒன்று இல்.

ஒருவனுக்குத் துன்பம் பலவற்றையும் உண்டாக்கி அவனுடைய புகழைக் கெடுக்கின்ற சூதைப்போல் வறுமை தருவது வேறொன்றும் இல்லை.

935. கவறும் கழகமும் கையும் தருக்கி
இவறியார் இல்லாகி யார்.

சூதாடு கருவியும், ஆடும் இடமும், கைத்திறமையும் மதித்துக் கைவிடாதவர், (எல்லாப் பொருள் உடையவராக இருந்தும்) இல்லாதவர் ஆய்விடுவர்.

936. அகடுஆரார் அல்லல் உழப்பர் சூதுஎன்னும்
முகடியால் மூடப்பட் டார்.

சூது என்று சொல்லப்படும் மூதேவியால் விழுங்கப்பட்டவர், வயிறு நிறைய உணவும் உண்ணாதவராகிப் பல துன்பப்பட்டு வருந்துவர்.

937. பழகிய செல்வமும் பண்பும் கெடுக்கும்
கழகத்துக் காலை புகின்.

சூதாடுமிடத்தில் ஒருவனுடைய காலம் கழியுமானால், அது அவனுடைய பழைமையாய் வந்த செல்வத்தையும் இயல்பான நற்பண்பையும் கெடுக்கும்.

938. பொருள்கெடுத்துப் பொய்மேல் கொளீஇ அருள்கெடுத்து
அல்லல் உழப்பிக்கும் சூது.

சூது, உள்ள பொருளை அழித்துப் பொய்யை மேற்கொள்ளச் செய்து அருளையும் கெடுத்துப் பலவகையிலும் துன்பமுற்று வருந்தச் செய்யும்.

939. உடைசெல்வம் ஊண்ஒளி கல்விஎன்று ஐந்தும்
அடையாவாம் ஆயம் கொளின்.

சூதாடுதலை ஒருவன் மேற்கொண்டால் புகழ், கல்வி, செல்வம், உணவு, உடை ஆகிய ஐந்தும் அவனைச் சேராமல் ஒதுங்கும்.

940. இழத்தொறூஉம் காதலிக்கும் சூதேபோல் துன்பம்
உழத்தொறூஉம் காதற்று உயிர்.

பொருள் வைத்து இழக்க இழக்க மேன்மேலும் விருப்பத்தை வளர்க்கும் சூதாட்டம்போல், உடல் துன்பப்பட்டு வருந்த வருந்த உயிர் மேன்மேலும் காதல் உடையதாகும்.

மேலும் அவர் கள்ளுண்ணுவதால் வரும் கேடுகள் பற்றியும் திருக்குறளில் கள் உண்ணாமை என்ற அதிகாரத்தை எடுத்துரைத்தார்.

கள் உண்ணாமை

921. உட்கப் படாஅர் ஒளிஇழப்பர் எஞ்ஞான்றும்
கள்காதல் கொண்டொழுகு வார்.

கள்ளின்மேல் விருப்பம் கொண்டு நடப்பவர், எக்காலத்திலும் பகைவரால் அஞ்சப்படார்; தமக்கு உள்ள புகழையும் இழந்துவிடுவர்.

922. உண்ணற்க கள்ளை; உணில்உண்க சான்றோரான்
எண்ணப் படவேண்டா தார்.

கள்ளை உண்ணக்கூடாது; சான்றோரால் நன்கு எண்ணப்படுவதை விரும்பாதவர் கள்ளை உண்ண வேண்டுமானால் உண்ணலாம்.

923. ஈன்றாள் முகத்தேயும் இன்னாதால்; என்மற்றுச்
சான்றோர் முகத்துக் களி?

பெற்ற தாயின் முகத்திலும் கள்ளுண்டு மயங்குதல் துன்பம் தருவதாகும்; அப்படியானால் குற்றம் கடியும் இயல்புடைய சான்றோரின் முகத்தில் அது என்னவாகும்?

924. நாண்என்னும் நல்லாள் புறம்கொடுக்கும் கள்என்னும்
பேணாப் பெருங்குற்றத் தார்க்கு.

நாணம் என்று சொல்லப்படும் நல்லவள், கள் என்று சொல்லப்படும் விரும்பத்தகாத பெருங்குற்றம் உடையவர்க்கு எதிரே நிற்காமல் செல்வாள்.

925. கையறி யாமை யுடைத்தே பொருள் கொடுத்து
மெய்அறி யாமை கொளல்.

விலைப்பொருள் கொடுத்துக் கள்ளுண்டு தன் உடம்பைத் தான் அறியாத நிலையை மேற்கொள்ளுதல், செய்வது இன்னதென்று அறியாத அறியாமை உடையதாகும்.

926. துஞ்சினார் செத்தாரின் வேறுஅல்லர் எஞ்ஞான்றும்
நஞ்சுஉண்பார் கள்உண் பவர்.

உறங்கினவர், இறந்தவரைவிட வேறுபட்டவர் அல்லர்; அவ்வாறே கள்ளுண்பவரும் அறிவு மயங்குதலால் நஞ்சு உண்பவரே ஆவர்.

927. உள்ஒற்றி உள்ளூர் நகப்படுவர் எஞ்ஞான்றும்
கள்ஒற்றிக் கண்சாய் பவர்.

கள்ளை மறைந்திருந்து குடித்து அறிவு மயங்குபவர், உள்ளூரில் வாழ்கின்றவரால் உள்ளான செய்திகள் ஆராயப்பட்டு எந்நாளும் சிரிக்கப்படுவர்.

928. களித்துஅறியேன் என்பது கைவிடுக; நெஞ்சத்து
ஒளித்ததூஉம் ஆங்கே மிகும்.

கள்ளுண்பவன் 'யான் ஒருபோதும் கள்ளுண்டறியேன்' என்று சொல்வதை விடவேண்டும்; நெஞ்சில் ஒளித்திருந்த குற்றமும் கள்ளுண்டபோதே வெளிப்படும்.

929. களித்தானைக் காரணம் காட்டுதல் கீழ்நீர்க்
குளித்தானைத் தீத்துரீஇ யற்று.

கள்ளுண்டு மயங்கினவனைக் காரணம் காட்டித் தெளிவித்தல், நீரின்கீழ் மூழ்கின ஒருவனைத் தீவிளக்குக் கொண்டு தேடினாற் போன்றது.

930. கள்உண்ணாப் போழ்தில் களித்தானைக் காணுங்கால்
உள்ளான்கொல் உண்டதன் சோர்வு.

ஒருவன் தான் கள் உண்ணாதபோது கள்ளுண்டு மயங்கினவனைக் காணுமிடத்தில் உண்டு மயங்குவதால் வரும் சோர்வை நினைக்கமாட்டானோ?

இங்கு கள் என்பது பலதரப்பட்ட மது வகைகளையும் குறிக்கும்.

தந்தை என்பவர் இதை தனது மகனுக்கு மகனின் மேல் உள்ள பாசத்தினால் சொன்னார். தந்தையானவர் அவரது அனுபவத்தால் எது சரி? எது தவறு? என உணர்ந்தவராவார். மேலும் அவ்வூரிலுள்ளவர்கள் அனைவரது குணங்களையும் பண்புகளையும் பற்றி நன்கு அறிந்தவராவார். அவரது அந்தபுத்திமதியை மந்திரம் போல பாவித்து நடக்க வேண்டும்.

ஆனால் அவனோ அவ்வாறு இல்லாமல் தந்தை சொல்லை மீறி நடந்து வரலானான். இறுதியில் அவனது தீய நட்பால் சூதாடுதல், மதுப்பழக்கம்

போன்றவற்றிற்கு அடிமையானதோடு மட்டுமல்லாமல் விலைமகளிர் இல்லங்களுக்கும் சென்று வரலானான். அதனால் ஊரார் அவனை ஏளனமாக பார்த்தனர்.

இவனது செய்கையால் அவனது குடும்பத்தின் மரியாதை குறைந்ததோடு மட்டுமன்றி அவனது குடும்பத்திற்கென்று இருந்த நல்லபெயரும் கெட்டுவிட்டது. அவனது தாயும் இதைக்கண்டு மனம் வருந்தினாள்.

தாயானவள் அவன் சிறுவனாக உள்ளபோது ஒரு மழைக்காலத்தில் கடுமையான காய்ச்சலுக்கு உள்ளானான். அப்போது அவனது தாய் இரண்டாவது மகனை பெற்றெடுத்து மூன்று மாதம் தான் ஆகியிருந்தது. இவனுக்கு ஐந்து வயதிருக்கும். இவன் காய்ச்சலில் பாதிக்கப்பட்டு கடுமையான அவதியில் இருந்தபோது அவனை இரவுபகல் பாராது கண்விழித்துப் பார்த்துக் கொண்டாள். சிறிய குழந்தைக்கும் வயிற்றோட்டம் ஏற்பட்டுவிட்டது.

பொதுவாக பிள்ளைபிறந்தவுடன் தாயின் உடம்பு மிகவும் நொந்து இருக்கும். அந்நிலையில் அவளால் கடுமையான வேலைகள் ஏதும் செய்ய முடியாது. அந்நிலையில் இவனது காய்ச்சலுக்கு மருந்து கொடுத்து உறங்க செய்துவிட்டு சென்றாள். குழந்தை மலம் கழித்துவிட்டது. அந்த நள்ளிரவிலும் அவள் அதை சகித்துக் கொண்டு, பிஞ்சு குழந்தையாயிற்றே அவனுக்கு குளிர்ந்த நீர் ஒத்துக் கொள்ளாது போய்விடுமே என வருந்தி அந்த நேரத்திலும் சிரமப்பட்டு வெந்நீர் வைத்து, சுத்தம் செய்து விட்டாள்.

காய்ச்சலிலிருந்த இவனோ துன்பம் தாளாது முனகினான். இவனை ஆறுதல் படுத்தி உறங்கவைத்தாள். சிறிது நேரம் கழித்து குழந்தை மீண்டும் மலம் கழித்து விட்டது. அவள் சலிக்காமல் மீண்டும் வெந்நீர் வைத்து சுத்தம் செய்தாள். இப்படி இரவு முழுவதும் தூக்கமின்றி இவர்களை பாதுகாப்பதே, தனது கடமையாக எண்ணி தனது சுகதுக்கங்களை சற்றும் கருதாது குழந்தைகள் நலன்தான் தன்நலமாக கொண்டு பாசத்துடன் கவனித்து வந்தாள்.

இப்படியெல்லாம் பார்த்து பார்த்து வளர்த்த மகன் வீணாகின்றானே என வருந்தி அவனை அழைத்து, தந்தையானவர் நமக்கு நல்லதைதான் சொல்வார், செய்வார். அவரது வார்த்தையை மீறி நடக்காதே, நடந்தால் அது உனக்கு துன்பத்தை தரும் என பலமுறை எடுத்து சொன்னாள். ஆனால் அவனோ மிகக் கடுமையாக தாயை வசைமொழிகளால் திட்டிவிட்டு சென்றுவிட்டான்.

மறுநாள் காலையில் அவனைக்கண்ட தாய், முதல் நாள் அவன் திட்டியதையெல்லாம் சற்றும் கருத்தில் கொள்ளாமல் அவனை பாசத்துடன் பார்த்து, ஐயோ நேரமாகிவிட்டதே, பிள்ளை சாப்பிட்டானோ இல்லையோ என பதறி, மகனே உணவு சாப்பிடவா என பாசத்துடன் அழைத்து உணவு கொடுத்தாள்.

இப்படி தன்னை துன்புறுத்திய போதும் அதை மனதில் சற்றும் வைக்காமல் மறந்து பாசத்துடன் தன்னை வளர்த்த தாயின் சொல்லையும் கேட்காமல், அவன் தனது தீய நண்பர்களுடன் தொடர்ந்து பழகி வரலானான். இறுதியில் அவனது தீயபழக்கவழக்கங்களினால் அவனுக்கும் அவனது குடும்பத்திற்கும் அவப்பெயரை தேடித்தந்தான்.

இவ்வாறு தம்மேல் அன்புள்ள தந்தை, தாய் சொல்லை தள்ளி நடந்ததால் அடுத்த ஜென்மத்தில் அவன் தாழ்ந்த குடியில் வறுமையில் பிறந்து துன்பத்திற்கு ஆளாக நேரிட்டது. இதையே தந்தை தாய் சொல்லை தள்ளி நடந்தால் பாவம் என்று மகான் இராமலிங்க சுவாமிகள் கூறுகிறார்.

மேலும் மகான் ஔவையாரும் இக்கருத்தையே தமது நூலான கொன்றை வேந்தனில் கூறுகிறார்.

அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்.

– மகான் ஔவையார் – கொன்றை வேந்தன் – எண் 1.

ஏனெனில் அன்னையானவள் தான் கருவுற்றிருக்கும்போது குழந்தைக்கு பாதிக்குமென தனக்கு விருப்பமான உணவுகளை தள்ளி பத்தியமாக இருந்து தனது குழந்தையை மரணத்திற்கு ஒப்பான துன்பத்திற்கு இடையில் பெற்றெடுக்கிறாள். மேலும் அக்குழந்தையின் மலஜலங்களை சுத்தம் செய்து தனது வாழ்க்கையே அக்குழந்தைக்காக அர்ப்பணிக்கிறாள். அத்தகு பாசமுள்ளவளும் கருணையானவளும் அன்புடையவளுமாக இருக்கும் தாய் தெய்வத்திற்கு ஒப்பானவள்.

தந்தையானவர் தெய்வத்திற்கு ஒப்பான தாய்க்காகவும் தனது பிள்ளைகளுக்காகவும் தனக்கென்று எதுவும் சிறப்பாக செய்து கொள்ளாமல், தனது குழந்தைகளுக்கு நல்ல பண்புகளையும் நல்ல கல்வியையும் அளித்து அவர்கள் சிறப்பாக வாழ்வதற்கு தேவையான பொருளையும் தந்து பராமரிக்கிறார். அதனால் அவரும் தெய்வத்திற்கு ஒப்பானவராகவும் கூறுகிறார்.

மேலும்,

தந்தை சொல் மிக்க மந்திரம் இல்லை.

– மகான் ஔவையார் – கொன்றை வேந்தன் – எண் 37.

ஏனெனில் தந்தை என்பவர் தனது அனுபவத்தினால் அனைத்தையும் கற்ற அனுபவ அறிவுள்ளவராகிறார். அவரது சொற்கள் நம்மை நெறிப்படுத்துகிறது. எனவே அவரது சொற்கள் மந்திரம் போன்றவைகளாகும் என்றும்,

தாயிற் சிறந்த ஒரு கோயிலும் இல்லை.

– மகான் ஔவையார் – கொன்றை வேந்தன் – எண் 38.

என்றும் கூறுகிறார். ஏனெனில் தாயானவள் மிகுந்த அன்பும், பாசமும் உடைய அந்த தாயானவள்தான் நாம் வணங்கும் ஆலயமாக, இறைவன் குடிகொண்ட ஆலயமாக எண்ணி, வணங்குவதற்கு உரிய ஆலயமாக எண்ணி வணங்க வேண்டுமெனவும் கூறுகிறார் மகான் ஔவையார்.

மேலும் அவர் தனிப்பாடல் ஒன்றில், "தாயுடன் அறுசுவை போம், தந்தையோடு கல்வி போம்" எனவும் குறிப்பிடுகிறார். ஆதலால் அத்தகைய உயர்வுபெற்ற தெய்வத்திற்கு ஒப்பான தந்தைதாய் சொல்லை தள்ளி நடப்பது என்பது பாவச்செயலாகும். இப்படி நம்மை பெற்று வளர்த்து ஆளாக்கி நமக்காகவே வாழ்கின்ற தாய்தந்தையை பராமரிப்பது என்பது மனிதனாக பிறந்த ஒவ்வொருவரது கடமையாகும். அதைவிடுத்து சிலர் வயதான தாய்தந்தையரை அவர்களது கடைசிகாலத்தில் சரியாக கவனிக்காமல் விட்டு விடுவார்கள். இது மிகப்பெரிய பாவச்செயலாகும்.

ஒருவன் தனது வாழ்க்கையில் உயர்வதும், அவன் நல்ல நிலையில் இருப்பதற்கும், அவனது தாய்தந்தையரே காரணமாக உள்ளனர். ஒருவன் மிகப்பெரிய பொறியாளராக இருக்கலாம். ஒருவன் மிகப்பெரிய மருத்துவராக இருக்கலாம். ஒருவன் மிகப்பெரிய பேச்சாளனாக இருக்கலாம். ஒருவன் மிகப்பெரிய விஞ்ஞானியாக இருக்கலாம். ஒருவன் மிகப்பெரிய எழுத்தாளனாக இருக்கலாம். ஒருவன் மிகச்சிறந்த பாடகனாக இருக்கலாம். ஒருவன் மிகச்சிறந்த இசை வல்லுநராகவும், பல்துறை வல்லுநராகவும் இருக்கலாம். ஒருவன் மிகஉயர்ந்த பதவியில் இருக்கலாம். மிகப்பெரிய அந்தஸ்தில் இருக்கலாம். மிகப்பெரும் செல்வந்தனாகவும் இருக்கலாம்.

இந்நிலைகளெல்லாம் அவரவர் தாய்தந்தையர்களின் கருணையினால் வந்ததாகும் என்பதை அறிய வேண்டும். தாய்தந்தை கருணையினால்தான் ஒரு மனிதன் தனது நிலையில் மேம்பட்டு விளங்குகிறான். அப்பேர்ப்பட்ட தாய்தந்தையர் சொற்களை மதித்து நடப்பதோடு, அவர்களுக்கு முதுமை வந்த காலத்திலும் அவர்களை நன்றாக பராமரித்து, நமக்கு அவர்கள் செய்த கருணைக்கு நன்றி செலுத்தி புண்ணியம் தேடிக்கொள்ள வேண்டும். இப்படி தாய் தந்தையரை பராமரிப்பது இல்லறத்தார்களின் கடமை மட்டும் அன்று,

துறவு மேற்கொண்டவர்களும் தம்மை ஈன்றோர்களுக்கு சிறப்பான கடமையை செய்துள்ளார்கள் என்பதை பல இடங்களில் காணலாம்.

உதாரணமாக மகான் பட்டினத்தார் தமது தாயின் பால் கொண்ட அன்பையும், கடமையையும் தமது தாயாருக்குத் தகனக்கிரியை செய்யும்போது, நினைவுகூர்ந்து பாடுகிறார்.

தாயாருக்குத் தகனக் கிரியை செய்கையிற் பாடியது.

ஐயிரண்டு திங்களாய் அங்கமெலாம் நொந்துபெற்றுப்
பையலென்ற போதே பரிந்தெடுத்துச் - செய்யவிரு
கைப்புறத்தி லேந்திக் கனகமுலை தந்தாளை
எப்பிறப்பிற் காண்பேன் இனி. 1.

முந்தித் தவங்கிடந்து முந்நூறு நாட்சுமந்தே
அந்திபக லாச்சீவனை ஆதரித்துத் - தொந்தி
சரியச் சுமந்துபெற்ற தாயார் தமக்கோ
எரியத் தழல்மூட்டு வேன். 2.

வட்டிலிலுந் தொட்டிலும் மார்மேலும் தோள்மேலுங்
கட்டிலிலும் வைத்தென்னைக் காதலித்து - முட்ட
சிறகிலிட்டுக் காப்பாற்றிச் சீராட்டுந் தாய்க்கோ
விறகிலிட்டுத் தீமூட்டு வேன். 3.

நொந்து சுமந்துபெற்று நோவாமல் ஏந்திமுலை
தந்து வளர்த்தெடுத்துத் தாழாமே - அந்திபகல்
கையிலே கொண்டென்னைக் காப்பாற்றுந் தாய்தனக்கோ
மெய்யிலே தீமூட்டுவேன். 4.

அரிசியோ நானிடுவேன் ஆத்தாள் தனக்கு
வரிசையிட்டுப் பார்த்து மகிழாமல் - உருசியுள்ள
தேனே அமிர்தமே செல்வத் திரவியப்பூ
மானே எனவழைத்த வாய்க்கு. 5.

அள்ளி யிடுவ தரிசியோ தாய்தலைமேற்
கொள்ளிதனை வைப்பேனோ கூசாமல் - மெள்ள
முகம்மேல் முகம்வைத்து முத்தாடி என்றன்
மகனே எனவழைத்த வாய்க்கு. 6.

முன்னை யிட்டதீ முப்புரத்திலே
பின்னை யிட்டதீ தென்னி லங்கையில்
அன்னை இட்டதீ அடிவ யிற்றிலே
யானும் இட்டதீ மூள்க மூள்கவே. 7.

வேகுதே தீயதனில் வெந்து பொடிசாம்பல்
ஆகுதே பாவியேன் ஐயகோ - மாகக்
குருவி பறவாமற் கோதாட்டி யென்னைக்
கருதி வளர்த்தெடுத்த கை. 8.

வெந்தாளோ சோணகிரி வித்தகா நின்பதத்தில்
வந்தாளோ என்னை மறந்தாளோ - சந்ததமும்
உன்னையே நோக்கி உகந்து வரம்கிடந்தென்
தன்னையே யீன்றெடுத்த தாய். 9.

வீற்றிருந்தாள் அன்னைவீதி தனிலிருந்தாள்
நேற்றிருந்தாள் இன்றுவெந்து நீறானாள் - பாற்றெளிக்க
எல்லீரும் வாருங்கள் ஏதென் றிரங்காமல்
எல்லாஞ் சிவமயமே யாம். 10.

– மகான் பட்டினத்தார்.

என கூறுகிறார்.

அத்தகு உயர்வு பெற்ற தாயின் கடமைகளை துறவு மேற்கொண்ட பற்றற்ற ஞானிகளும் செய்துள்ளார்கள் என்பதை அறிந்து கொள்ள வேண்டும். மகான் திருவள்ளுவர் தந்தையின் கடமையாக கூறுவது.

தந்தை மகற்குஆற்றும் நன்றி அவையத்து
முந்தி யிருப்பச் செயல்.

– திருக்குறள் – மக்கட்பேறு – குறள் எண் 67.

தந்தை தன் மகனுக்குச் செய்யத்தக்க நல்லுதவி, கற்றவர் கூட்டத்தில் தன் மகன் முந்தியிருக்கும்படியாக அவனைக் கல்வியில் மேம்படச் செய்தலாகும்.

என கூறிய மகான் திருவள்ளுவரே, அப்படி நமக்கு கல்விச் செல்வத்தை அளித்த அத்தந்தைக்கு அவரது மகன் என்ன செய்யவேண்டும் என்பதையும் கூறுகிறார்.

மகன்தந்தைக்கு ஆற்றும் உதவி இவன்தந்தை
என்நோற்றான் கொல்எனும் சொல்.

– திருக்குறள் – மக்கட்பேறு – குறள் எண் 70.

மகன் தன் தந்தைக்குச் செய்யத்தக்க கைம்மாறு "இவன் தந்தை இவனை மகனாக பெற என்ன தவம் செய்தானோ" என்று பிறர் புகழ்ந்து சொல்லும் சொல்லாகும்.

– நன்றி மு.வரதராசனார்.

ஆகவே இத்தகு பெருமை வாய்ந்த தந்தை தாயின் சொற்களை பின்பற்றி நடந்து அவரது முதுமை காலத்தில் அவர்களை பராமரித்து புண்ணியத்தை பெறுவோமாக.

43. தெய்வ மிகழ்ந்து செருக்கடைந்தேனோ!

ஊர்வ பதினொன்றாம் ஒன்பது மானுடம்
நீர்பறவை நாற்காலோர் பப்பத்துச் – சீரிய
பந்தமாந் தேவர் பதினா லயன்படைத்த
அந்தமில் சீர்த்தாவர நா லைந்து.

– தனிப்பாடல்.

இந்த உலகில் இறைவனால் யானைமுதல் எறும்பு வரை எண்பத்தி நான்கு இலட்ச பேதமுள்ள உயிரினங்கள் தோற்றுவிக்கப்பட்டுள்ளன. அவற்றுள் மனிதனுக்கு மட்டுமே சிறப்பான உடலமைப்பைத் தந்துள்ளான் இறைவன். மற்ற உயிரினங்களுக்கு ஒன்று முதல் ஐந்து அறிவுகள் வரை தந்த இறைவன் மனிதனுக்கு மட்டும் ஆறாவது அறிவையும் சேர்த்து தந்துள்ளான். இந்த எண்பத்தி நான்கு இலட்ச பேதமுள்ள உயிர்களின் தேகத்தில் இல்லாத சிறப்புகள் அனைத்தும் சேர்த்து மனித தேகத்தில் அமைத்துள்ளான் இறைவன்.

அப்படி சிறப்பான தேகத்தை அமைத்ததோடு மட்டுமல்லாமல் புறஉடம்பாகிய தூலதேகத்தையும், அகஉடம்பாகிய சூட்சும தேகத்தையும் அதனுள்ளேயே அமைத்துள்ளான். இவ்வற்புத தேகத்தின்கண், எல்லாம் வல்ல இறைவனால் தோற்றுவிக்கப்பட்ட மற்றைய உயிரினங்களின் பரிணாமமாகிய தோற்றம், வளர்ச்சி, அழிவு என்ற சுழற்சியில் அனைத்து உயிர்களும் ஒரு கட்டத்தில் அழிந்துவிடுகிறது.

பிறகு வேறொரு தேகமெடுத்து மீண்டும் தோன்றி வளர்ந்து மீண்டும் அழிந்துவிடும். அந்த இயற்கை அமைப்பை விஞ்சும் விதத்தில் எந்த இறைவன் தோற்றுவித்தானோ அதே இறைவன் மரணத்தை வெல்லுவதற்கான அதாவது மரணமில்லா பெருவாழ்வை அடையக்கூடிய தேகமாகவும், இம்மனித தேகத்தை அமைத்துள்ளான். விஞ்ஞானத்தில் மனிததேகத்தின் அற்புதங்களை விரிவாக குறிப்பிடுவார்கள்.

இப்பிரபஞ்சத்தில் அதிஅற்புதமாக செயல்படக்கூடிய புரிந்து கொள்ள முடியாத ஒரு சிக்கலான அமைப்பை உடைய அற்புதமான அமைப்பு இம்மனித தேகம்தான் என்பார்கள். இந்த மனித தேகத்தை விஞ்ஞானத்தில்,

1. SKELETAL SYSTEM	-	எலும்பு மண்டலம்
2. MUSCULAR SYSTEM	-	தசை மண்டலம்
3. NERVOUS SYSTEM	-	நரம்பு மண்டலம்
4. LYMPHATIC & IMMUNE SYSTEM	-	நிண மண்டலம்
5. CIRCULATORY SYSTEM	-	ரத்த ஓட்ட மண்டலம்
6. RESPIRATORY SYSTEM	-	சுவாச மண்டலம்
7. URINARY SYSTEM	-	கழிவு மண்டலம்
8. DIGESTIVE SYSTEM	-	ஜீரண மண்டலம்
9. REPRODUCTIVE SYSTEM	-	இனப்பெருக்க மண்டலம்
10. ENDOCRINE SYSTEM	-	நாளமிலாசுரப்பி மண்டலம்

என்றவாறு பல விதமான தொகுப்பு அமைப்புகளாக அமைத்து அதை ஆராய்ந்து பார்த்து அதன் செயல்பாடுகளை வகுத்தும், தொகுத்தும் வைத்துள்ளார்கள். ஆனாலும் இத்தேகத்தின் இரகசியத்தை அவர்களால் முழுதும் அறிந்து கொள்ள முடியவில்லை. ஆயினும் இத்தேகம் மிகஅற்புதமான ஒரு அமைப்பு என்பதை ஒப்புக் கொள்கிறார்கள்.

ஆனால் மெய்ஞானத்தில் இத்தேக அமைப்பு விஞ்ஞானம் சொல்லுவதை கூறுவதோடு மட்டுமல்லாமல் ஞானதலைவன் சுப்ரமணியர் காலம் தொட்டு வழிவழி வந்த இந்த சித்தர் மரபில் வந்தவர்களுக்கு மட்டுமே இவற்றிற்கெல்லாம் அப்பால் ஒரு சக்தி உண்டு என்பதை உணர்ந்து, அது மரணமில்லா பெருவாழ்வை அடைய உதவுகிறது என்பதை உணர்ந்து இந்த மானுட தேகத்தால் மட்டுமே அதை அடைய முடியுமென்பதையும் உணர்ந்து இம்மானுட தேகத்தை போற்றி பாதுகாத்தார்கள்.

உள்ளம் பெருங்கோயில் ஊனுடம் பாலயம்
வள்ளற் பிரானார்க்கு வாய்கோ புரவாசல்
தெள்ளத் தெளிந்தார்க்குச் சீவன் சிவலிங்கங்
கள்ளப் புலனைந்துங் காளா மணிவிளக்கே.

– திருமந்திரம் – சிவபூசை – கவி எண் 1823.

மானுட ராக்கை வடிவு சிவலிங்கம்
மானுட ராக்கை வடிவு சிதம்பரம்
மானுட ராக்கை வடிவு சதாசிவம்
மானுட ராக்கை வடிவு திருக்கூத்தே.

– திருமந்திரம் – பிண்டலிங்கம் – கவி எண் 1726.

என்கிறார் மகான் திருமூலர். மேலும்,

உடம்பினை முன்னம் இழுக்கென் றிருந்தேன்
உடம்பினுக் குள்ளே யுறுபொருள் கண்டேன்
உடம்புளே உத்தமன் கோயில்கொண் டான்என்
றுடம்பினை யானிருந் தோம்புகின் றேனே.

– திருமந்திரம் – சரீர சித்தி உபாயம் – கவி எண் 725.

என்பதால் உடம்பைப்பற்றி அவர் அறியாத போது இந்த தேகம் கசடாக இருந்ததாகவும், இத்தேகத்தின் இரகசியம் தெரிந்ததால் இதன் அற்புதத்தை உணர்ந்ததாகவும் கூறுகிறார் மகான் திருமூலர்.

மேலும் இத்தேகத்தில் விஞ்ஞானத்திற்கு அகப்படாத ஒன்று உள்ளதென்றும் இத்தேகம் அனைத்தும் மொத்தமாக நாடிகளால் கட்டுப்படுத்தபடுகிறது என்றும், அவை மொத்தம் எழுபத்தி இரண்டாயிரம் நாடிகளாகவும், அவற்றுள் பத்து நாடிகள் முக்கியமானவை என்றும், அவற்றுள் முக்கியமானது ஒரு நாடி உண்டென்றும், அதுவே பிரம்மநாடி, ஈஸ்வர நாடி என்றெல்லாம் சொல்லப்படும்.

புருவமத்திக்கும், மூலாதாரத்திற்கும் தொட்டு நிற்கும் சுழிமுனை நாடி என்றும் சொல்லி மிகப்பெரும் இரகசியத்தை இம்மானுட தேகத்தின் உச்சபட்சமான இரகசியத்தை நமக்கு வெளிப்படுத்துகிறார் மகான் ஔவையார்.

நாடி தாரணை

1. எழுபத்தீ ராயிர நாடி யவற்றுள்
   முழுபத்து நாடி முதல்.
2. நரம்பெனு நாடி யிவையினுக் கெல்லா
   முரம்பெறு நாடியொன் றுண்டு.
3. உந்தி முதலா யுறுமுடிகீழ் மேலாய்ப்
   பந்தித்து நிற்கும் பரிந்து.
4. காலொடு கையி னடுவிடத் தாமரை
   நூல்போலு நாடி நுழைந்து.
5. ஆதித்தன் றன்கதிர் போலவந் நாடிகள்
   பேதித்துத் தாம்பரந்த வாறு.
6. மெய்யெல்லா மாகி நரம்போ டெலும்பிசைந்து
   பொய்யில்லை நாடிப் புணர்வு.
7. உந்தி முதலாகி யோங்காரத் துட்பொருளாய்
   நின்றது நாடி நிலை.

8. நாடிகளூடு போய்ப் புக்க நலஞ்சுடர்தான்
வீடு தருமாம் விரைந்து.

9. நாடி வழக்க மறிந்து செறிந்தடங்கி
நீடொளி காண்ப தறிவு.

10. அறிந்தடங்கி நிற்குமந் நாடிக டோறுஞ்
செறிந்தடங்கி நிற்குஞ் சிவம்.

இவ்வாறாக மற்றெந்த உயிரினங்களிலும் இல்லாத, மனித தேகத்தில் மட்டுமே காணப்படும் இவ்வற்புத நாடி அமைப்பை மகான் ஔவையார் மனித சமுதாயத்திற்காக வெளிப்படுத்துகிறார்.

இன்று பலராலும் ஏற்றுக் கொள்ளப்படும் விஞ்ஞானத்தின் தலைவனும் ஆசான் ஞானப்பண்டிதன்தான். வாழையடி வாழையென தொன்றுதொட்டு வரும் சித்தமரபினர் மட்டுமே அறிந்த மெய்ஞானத்திற்கும் தலைவன் ஆசான் ஞானப்பண்டிதனாகிய சுப்ரமணியரே ஆவார். அதுமட்டுமல்லாது மற்றெல்லா கலைகளுக்கும் அவரே தலைவராவார்.

தன்னிகரில்லா தலைவன் ஆசான் சுப்ரமணியரால்தான், இந்த இயற்கை நமக்களித்த தேகத்தின் இரகசியத்தை இந்த மனிதசமுதாயம் அறிந்து கொண்டது. அவர்தான் முதன்முதலில் இயற்கையை வென்று மரணமில்லா பெருவாழ்வு பெற்றவராவார். அவருக்கு பின் அவரது சீடர் மகான் அகத்தியரும், அதன்பின் மாமேருவான அகத்தியரால் நவகோடி சித்தரிஷி கணங்களும் உருவானார்கள்.

இவ்வாறாக அற்புதங்கள் கொண்டதும், தோற்றுவித்த இறைவனைப் போலவே நாமும் இரண்டறக் கலக்கக்கூடிய அமைப்பையும் கொண்டதுமான இந்த தேகத்தை இறைவன் நமக்கு அளித்துள்ளான். அவ்வற்புத தேகத்தை அளித்த இறைவனை, நன்றி மறந்து உண்மையறியாது இகழ்ந்து பேசினால் பாவம் என்று மகான் இராமலிங்க சுவாமிகள் கூறுகிறார்.

இறைவனின் பெருமையை பல ஞானிகள் பலவிதமாக புகழ்ந்து பாடியும், கூறியும் இருக்கிறார்கள்.

புவனம் என்றால் கணப்போதே அழித்திடச்
சிவனாலே ஆகுமடி – குதம்பாய்
சிவனாலே ஆகுமடி
அவன் அசையாவிடின் அணுஅசையாது என்று
புவனத்தில் உண்மையடி – குதம்பாய்
புவனத்தில் உண்மையடி

– மகான் குதம்பைச் சித்தர்.

என்கிறார் மகான் குதம்பைச் சித்தர்.

பரந்து விரிந்த புவனமனைத்தையும் கணப்பொழுதில் அழிக்கும் வல்லமை பெற்ற இறைவனால் கணப்பொழுதில் இப்புவனம் அனைத்தையும் படைக்கவும் முடியுமென்பதையும் அறிந்து ஆற்றல் பொருந்திய இறைவனை அதியற்புத ஆறறிவு படைத்த இந்த மானுட தேகத்தையும் கொடுத்து நம்மை வாழவும் வைக்கும் இறைவனை, அவனை உணராது யான் என்ற கர்வத்தால் இகழ்ந்து பேசினால் நரகம் வரும் என்பதை தெரிந்து கொள்ள வேண்டும்.

மேலும் மகான் திருமூலர் தனது திருமந்திரத்தில் கவி எண் 526ல் சிவநிந்தை செய்பவர்கள் அடையும் கேடுநிலையும் பற்றி கூறுகிறார்.

தெளிவுறு ஞானத்துச் சிந்தையின் உள்ளே
அளிவுறு வாரம ராபதி நாடி
எளியனென் றீசனை நீசர் இகழில்
கிளியொன்று பூனையாற் கீழது வாகுமே.

– திருமந்திரம் – சிவ நிந்தை – கவி எண் 526.

என கூறுகிறார் மகான் திருமூலர். எனவே தெய்வமிகழ்ந்து செருக்கடைதல் பாவம் என தெரிந்துகொண்டு தெய்வத்தை இகழாது இருப்பது நலமாகும்.

இதுவரை மனுமுறை கண்ட வாசகத்துக்கு ஆசான் இராமலிங்க சுவாமிகளை வணங்கி விளக்கம் தந்துள்ளோம். அதில் குற்றங்குறைகள் இருந்தால் கற்றுணர்ந்த பெரியோர்கள் பொறுத்துக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

சிவனரு ளாற்சிலர் தேவரு மாவர்
சிவனரு ளாற்சிலர் தெய்வத்தோ டொப்பர்
சிவனரு ளால்வினை சேரகி லாமை
சிவனருள் கூறில்அச் சிவலோக மாமே

– திருமந்திரம் – அருளுடைமையின் ஞானம் வருதல் – கவி எண் 1649.

....



துவக்கப்பாடல்

திருவடி ஞானம் சிவமாக்கு விக்கும்
திருவடி ஞானம் சிவலோகம் சேர்க்கும்
திருவடி ஞானம் சிறைமலம் மீட்கும்
திருவடி ஞானமே திண்சித்தி முத்தியே.

திருமந்திரம் : திருவடிப்பேறு : 1598

ஞானியர்களின் திருவடி பூஜைதான் உண்மை ஆன்மீகம் என்று உலகறியச் செய்யும் வள்ளல்,
சிவராஜயோகி, பரமானந்த சதாசிவ சற்குரு
தவத்திரு **ரெங்கராஜ தேசிக சுவாமிகள்** அவர்கள்
தொகுத்து வழங்கிய

சித்தர்கள் போற்றித் தொகுப்பு

ஓம்	அகத்தியர்	திருவடிகள் போற்றி	
ஓம்	அகப்பைச்சித்தர்	திருவடிகள் போற்றி	
ஓம்	அசுவினித்தேவர்	திருவடிகள் போற்றி	
ஓம்	அத்திரி மகரிஷி	திருவடிகள் போற்றி	
ஓம்	அநுமான்	திருவடிகள் போற்றி	
ஓம்	அம்பிகானந்தர்	திருவடிகள் போற்றி	
ஓம்	அருணகிரிநாதர்	திருவடிகள் போற்றி	
ஓம்	அருள்நந்திசிவாச்சாரியார்	திருவடிகள் போற்றி	
ஓம்	அல்லமாபிரபு	திருவடிகள் போற்றி	
ஓம்	அழுகண்ணிச்சித்தர்	திருவடிகள் போற்றி	10
ஓம்	இடைக்காடர்	திருவடிகள் போற்றி	
ஓம்	இராமலிங்கசுவாமிகள்	திருவடிகள் போற்றி	
ஓம்	இராமதேவர்	திருவடிகள் போற்றி	
ஓம்	இராமானந்தர்	திருவடிகள் போற்றி	
ஓம்	உமாபதி சிவாச்சாரியார்	திருவடிகள் போற்றி	
ஓம்	ஔவையார்	திருவடிகள் போற்றி	
ஓம்	கஞ்சமலைச்சித்தர்	திருவடிகள் போற்றி	
ஓம்	கடைப்பிள்ளைச்சித்தர்	திருவடிகள் போற்றி	
ஓம்	கடுவெளிச்சித்தர்	திருவடிகள் போற்றி	
ஓம்	கண்ணானந்தர்	திருவடிகள் போற்றி	20

ஓம் கண்ணிச்சித்தர் திருவடிகள் போற்றி
ஓம் கணநாதர் திருவடிகள் போற்றி
ஓம் கணபதிதாசர் திருவடிகள் போற்றி
ஓம் கதம்பமகரிஷி திருவடிகள் போற்றி
ஓம் கபிலர் திருவடிகள் போற்றி
ஓம் கமலமுனிவர் திருவடிகள் போற்றி
ஓம் கருவூர்தேவர் திருவடிகள் போற்றி
ஓம் கல்லுளிச்சித்தர் திருவடிகள் போற்றி
ஓம் கலைக்கோட்டு முனிவர் திருவடிகள் போற்றி
ஓம் கவுபாலச்சித்தர் திருவடிகள் போற்றி 30
ஓம் கனராமர் திருவடிகள் போற்றி
ஓம் காகபுஜண்டர் திருவடிகள் போற்றி
ஓம் காசிபர் திருவடிகள் போற்றி
ஓம் காலாங்கிநாதர் திருவடிகள் போற்றி
ஓம் குகைநமச்சிவாயர் திருவடிகள் போற்றி
ஓம் குதம்பைச்சித்தர் திருவடிகள் போற்றி
ஓம் குமரகுருபரர் திருவடிகள் போற்றி
ஓம் குருதட்சணாமூர்த்தி திருவடிகள் போற்றி
ஓம் குருராஜர் திருவடிகள் போற்றி
ஓம் குறும்பைச்சித்தர் திருவடிகள் போற்றி 40
ஓம் கூர்மானந்தர் திருவடிகள் போற்றி
ஓம் கொங்கணேஸ்வரர் திருவடிகள் போற்றி
ஓம் கோரக்கர் திருவடிகள் போற்றி
ஓம் கௌசிகர் திருவடிகள் போற்றி
ஓம் கௌதமர் திருவடிகள் போற்றி
ஓம் சங்கமுனிச் சித்தர் திருவடிகள் போற்றி
ஓம் சங்கர மகரிஷி திருவடிகள் போற்றி
ஓம் சங்கிலிச்சித்தர் திருவடிகள் போற்றி
ஓம் சச்சிதானந்தர் திருவடிகள் போற்றி
ஓம் சட்டநாதர் திருவடிகள் போற்றி 50
ஓம் சண்டிகேசர் திருவடிகள் போற்றி
ஓம் சத்யானந்தர் திருவடிகள் போற்றி
ஓம் சிவயோகமாமுனிவர் திருவடிகள் போற்றி
ஓம் சிவவாக்கியர் திருவடிகள் போற்றி
ஓம் சிவானந்தர் திருவடிகள் போற்றி

ஓம்	சுகப்பிரம்மர்	திருவடிகள் போற்றி	
ஓம்	சுந்தரானந்தர்	திருவடிகள் போற்றி	
ஓம்	சுந்தரமூர்த்தி	திருவடிகள் போற்றி	
ஓம்	சூதமுனிவர்	திருவடிகள் போற்றி	
ஓம்	சூரியானந்தர்	திருவடிகள் போற்றி	60
ஓம்	சூலமுனிவர்	திருவடிகள் போற்றி	
ஓம்	சேதுமுனிவர்	திருவடிகள் போற்றி	
ஓம்	சொரூபானந்தர்	திருவடிகள் போற்றி	
ஓம்	ஜம்பு மகரிஷி	திருவடிகள் போற்றி	
ஓம்	ஜமதக்னி	திருவடிகள் போற்றி	
ஓம்	ஜனகர்	திருவடிகள் போற்றி	
ஓம்	ஜனந்தனர்	திருவடிகள் போற்றி	
ஓம்	ஜனாதனர்	திருவடிகள் போற்றி	
ஓம்	ஜனக்குமாரர்	திருவடிகள் போற்றி	
ஓம்	ஜெகநாதர்	திருவடிகள் போற்றி	70
ஓம்	ஜெயமுனிவர்	திருவடிகள் போற்றி	
ஓம்	ஞானச்சித்தர்	திருவடிகள் போற்றி	
ஓம்	டமாரானந்தர்	திருவடிகள் போற்றி	
ஓம்	தன்வந்திரி	திருவடிகள் போற்றி	
ஓம்	தாயுமான சுவாமிகள்	திருவடிகள் போற்றி	
ஓம்	தானந்தர்	திருவடிகள் போற்றி	
ஓம்	திரிகோணச்சித்தர்	திருவடிகள் போற்றி	
ஓம்	திருஞானசம்பந்தர்	திருவடிகள் போற்றி	
ஓம்	திருநாவுக்கரசர்	திருவடிகள் போற்றி	
ஓம்	திருமாளிகைத் தேவர்	திருவடிகள் போற்றி	80
ஓம்	திருமூலதேவர்	திருவடிகள் போற்றி	
ஓம்	திருவள்ளுவர்	திருவடிகள் போற்றி	
ஓம்	தூர்வாசமுனிவர்	திருவடிகள் போற்றி	
ஓம்	தேரையர்	திருவடிகள் போற்றி	
ஓம்	நந்தனார்	திருவடிகள் போற்றி	
ஓம்	நந்தீஸ்வரர்	திருவடிகள் போற்றி	
ஓம்	நாதாந்தச்சித்தர்	திருவடிகள் போற்றி	
ஓம்	நாரதர்	திருவடிகள் போற்றி	
ஓம்	நொண்டிச்சித்தர்	திருவடிகள் போற்றி	
ஓம்	பட்டினத்தார்	திருவடிகள் போற்றி	90

ஓம்	பத்ரகிரியார்	திருவடிகள் போற்றி	
ஓம்	பதஞ்சலியார்	திருவடிகள் போற்றி	
ஓம்	பரத்துவாசர்	திருவடிகள் போற்றி	
ஓம்	பரமானந்தர்	திருவடிகள் போற்றி	
ஓம்	பராசரிஷி	திருவடிகள் போற்றி	
ஓம்	பாம்பாட்டிச்சித்தர்	திருவடிகள் போற்றி	
ஓம்	பிங்களமுனிவர்	திருவடிகள் போற்றி	
ஓம்	பிடிநாகீசர்	திருவடிகள் போற்றி	
ஓம்	பிருகுமகரிஷி	திருவடிகள் போற்றி	
ஓம்	பிரும்மமுனிவர்	திருவடிகள் போற்றி	100
ஓம்	பீர்முகமது	திருவடிகள் போற்றி	
ஓம்	புண்ணாக்கீசர்	திருவடிகள் போற்றி	
ஓம்	புலத்தீசர்	திருவடிகள் போற்றி	
ஓம்	புலிப்பாணிச்சித்தர்	திருவடிகள் போற்றி	
ஓம்	பூனைக்கண்ணார்	திருவடிகள் போற்றி	
ஓம்	போகமகாரிஷி	திருவடிகள் போற்றி	
ஓம்	மச்சமுனிவர்	திருவடிகள் போற்றி	
ஓம்	மஸ்தான்	திருவடிகள் போற்றி	
ஓம்	மயூரேசர்	திருவடிகள் போற்றி	
ஓம்	மாணிக்கவாசகர்	திருவடிகள் போற்றி	110
ஓம்	மார்க்கண்டேயர்	திருவடிகள் போற்றி	
ஓம்	மாலாங்கன்	திருவடிகள் போற்றி	
ஓம்	மிருகண்டரிஷி	திருவடிகள் போற்றி	
ஓம்	முத்தானந்தர்	திருவடிகள் போற்றி	
ஓம்	மெய்கண்டதேவர்	திருவடிகள் போற்றி	
ஓம்	மௌனச்சித்தர்	திருவடிகள் போற்றி	
ஓம்	யாகோபு	திருவடிகள் போற்றி	
ஓம்	யூகிமுனிவர்	திருவடிகள் போற்றி	
ஓம்	யோகச்சித்தர்	திருவடிகள் போற்றி	
ஓம்	யோகானந்தர்	திருவடிகள் போற்றி	
ஓம்	ரோமரிஷி	திருவடிகள் போற்றி	121
ஓம்	வசிஷ்டமகரிஷி	திருவடிகள் போற்றி	
ஓம்	வரதரிஷி	திருவடிகள் போற்றி	
ஓம்	வரரிஷி	திருவடிகள் போற்றி	
ஓம்	வராகிமிகி	திருவடிகள் போற்றி	
ஓம்	வால்மீகி	திருவடிகள் போற்றி	

ஓம்	விசுவாமித்திரர்	திருவடிகள் போற்றி
ஓம்	வியாக்ரமர்	திருவடிகள் போற்றி
ஓம்	வியாசமுனிவர்	திருவடிகள் போற்றி
ஓம்	விளையாட்டுச்சித்தர்	திருவடிகள் போற்றி
ஓம்	வேதாந்தச்சித்தர்	திருவடிகள் போற்றி 131

ஓம் எண்ணிலா கோடி சித்தரிஷி கணங்கள்
திருவடிகள் போற்றி போற்றி.

நிறைவுப்பாடல்

வாழ்கவே வாழ்கஎன் நந்தி திருவடி
வாழ்கவே வாழ்க மலமறுத் தான்பதம்
வாழ்கவே வாழ்கமெய்ஞ் ஞானத் தவன்தாள்
வாழ்கவே வாழ்க மலமிலான் பாதமே.

திருமந்திரம் 3047

மேற்கண்ட 131 சித்தர்கள், மகான்களின் திருவடிகளை தினசரி காலையும் மாலையும் போற்றி பூஜை செய்வதே சிறப்பறிவாகும். சிறப்பறிவு பெற்றவர்களுக்கு குடும்ப ஒற்றுமை, புத்திர பாக்கியம், உடல் ஆரோக்கியம் போன்ற நல்வினைகள் பெருகி, மது அருந்துதல், புலால் உண்ணுதல், சூதாடுதல் போன்ற தீவினைகள் நீங்கிவிடும். மேலும், மாதம் ஒருவருக்கோ அல்லது இருவருக்கோ பசித்த ஏழைகளுக்கு பசியாற்றியும் வந்தால், பாவம் புண்ணியம் பற்றி உணர்ந்து புண்ணியம் பெருகி ஞானியாவார்கள் என்பது சத்தியம்.



மகான் சுப்பிரமணியர்



மகான் அகத்தியர்



ஞானியர்களின் திருவடி பூஜைதான் உண்மை
ஆன்மீகம் என்று உலகறியச்செய்யும் வள்ளல்
சிவராஜயோகி, பரமானந்த சதாசிவ சற்குரு
தவத்திரு ரெங்கராஜ தேசிக சுவாமிகள்